www.tamilarangam.net


# களத்தில்

திருவள்ளுவர் ஆண்டு 2027 கன்னி 25 (09.10.1996) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் அன்பளிப்பு: 60 p


விடுதலைப் போராட்டத்தில் பங்களிக்கும் மக்கள் அனைவரும் மாமனிதர்களே!

- தமிழீழத் தேசியத் தலைவர்

# யாழ். குடாநாட்டில் காணாமல் போன இளவயதினரின் தாய் தந்தையர் மறியல் போராட்டம்

யாழ். குடாநாட்டில் காணாமல் போனவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டு வருகிறது. சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் மட்டுமல்லாது, இராணுவ முகாம்களுக்குப் பயணிகள் அனுமதி பெறச் செல்லும் இளம் பெண்கள் மற்றும் பாடசாலைக்குச் சோதனைச் சாவடிகளைத் தாண்டிச் செல்லும் மாணவிகள் கூடக் காணாமல் போகின்றனர். இவர்களைப் பற்றிய தகவல் அறிவதற்கென இராணுவ முகாம்களுக்குச் செல்லும் பெற்றோருக்கு இராணுவத்தினர் எதுவித தகவலும் கூற மறுப்பதும் அல்லாமல், அப்படியான கைதுகளைச் செய்ததனை மறுத்தும் வருகின்றனர். இதனால் ஆத்திரமும் கலக்கமும் ஏக்கமும் அடையும் பெற்றோர் தமது பிள்ளைகள் இராணுவத்தினரால் கொல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சுகின்றனர்.

தாயகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற செய்திகளின்படி, யாழ்ப்பாணம் மாநகரசபையில் பொறியியல் பழுது பார்ப்பவராகப் பணிபுரியும் சுப்பிரமணியம் என்பவரை ஆவணி ஒன்பதாம் திகதி முதல் காணவில்லை எனவும் இவரின் தாயார் மற்றில்டா மனோநிலை– உடல்நிலைப் பாதிப்புக்குள்ளாகிக் காணப்படுவதாகவும் தெரிய வருகிறது.

மேலும், மட்டுவில் தெற்கைச் சேர்ந்த சுபநேசன் என்பவரை, யாழ். நகருக்குச் சென்று வீடு திரும்புகையில் ஆடி 26 முதல் காணவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. தென்மராட்சியைச் சேர்ந்த நான்கு இளம் பெண்களையும் வலிகாமத்தில் (இணுவில்) வேலை செய்யும் மத்திய வயதுள்ள ஆசிரியை ஒருவரையும் காணவில்லை எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, மறவன் புலத்தில் இருந்து இளம் பெண்களையும் இளைஞர்களையும் ஏற்றிக் கொண்டு புறப்பட்ட இராணுவ வாகனம் ஒன்றுக்கு முன்னால் அப்பிள்ளைகளின் தாய் தந்தையர்கள் வீதிக்குக் குறுக்கே படுத்து மறியல் செய்துள்ளனர். சிறிது நேரத்தில் பெருந்திரளான மக்கள் மறியல் போராட்டத்தில் இணைந்து கொண்டதினால் வாகனத்தைச் செலுத்த முடியாத நிலையில், வாகனத்தில் ஏற்றிய இளைஞர்களையும் இளம் பெண்களையும் இறக்கிவிட்டு இராணுவத்தினர் ஏறித் தப்பித்துக் கொண்டதாகவும்

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

## புதுப் பரணியின் முதல் வித்து



இந்திய இராணுவத்திற்கெதிரான போரில் வீரச்சாவடைந்த 2ம் லெப். மாலதியின் ஒன்பதாம் ஆண்டு (10 - 10 -1996) நினைவு

# 20,000 இராணுவத்தினர் கிளிநொச்சியில் ஆக்கிரமிப்புப் போர்

மூன்று மைல் நீள தமிழீழ மண்ணைக் கைப்பற்றுவதற்கு இருபதினாயிரம் ஆளணியினரையும் பெருமளவிலான சுடுதிறன் சக்தியையும் சிறிலங்கா ஆக்கிரமிப்புப் படை கிளிநொச்சியை நோக்கி நகர்த்தி கடும் சண்டையிட்டு வருகிறது. சத்ஜெய–3 என இராணுவக் குறிமீடு இடப்பட்ட இந்த இராணுவ நடவடிக்கை கிளிநொச்சி மீதான மூன்றாவது ஆக்கிரமிப்பு முயற்சியாகும். முதல் இரு தடவையும் விடுதலைப் புலிகளின் சுடுதிறன் மற்றும் வலிமையான எதிர்த் தாக்குதல்களால் எதிர் நிற்க முடியாமல் பின்வாங்கிய சிறிலங்காப் படையினர் பெருமளவிலான உயிர் இழப்புகளையும் - இராணுவத் தளபாட அழிவுகளையும் எய்தினர்.

ஆயினும், மூன்றாவது முறையாகத் தன்பலம் முழுவதையும் ஒருங்கு திரட்டிக் கொண்டு, எதிரி கிளிநொச்சி நோக்கி நகர்ந்து நகரில் முகாமிட்டுள்ளான். சிறிலங்காப் படையினர் பலத்த ஆளணி இராணுவத் தளபாட இழப்புகளின் பின்னர் இச் சிறிய தூரத்தைக் கடந்துள்ளனர். எனினும், எந்நேரத்திலும் விடுதலைப்

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

## யாழ். குடாநாட்டிலும் பன்னிரு வேங்கைகளின் நினைவு நாள்

1987ஆம் ஆண்டு பலாலி இராணுவ முகாமில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவடைந்த லெப். கேணல். குமரப்பா, லெப். கேணல். புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளின் 9வது ஆண்டு நினைவு நாள், யாழ். குடாநாடு உட்பட தமிழீழத்தின் பல பகுதிகளிலும் மக்களினால் நினைவு கூரப்பட்டது. யாழ். குடாநாட்டில் கொக்குவில், ஆனைக்கோட்டை, மானிப்பாய், இணுவில், சங்கானை, சண்டிலிப்பாய், சித்தங்கேணி, சங்கரத்தைப் பகுதிகளில் நூற்றுக்கணக்கான மக்கள், மாணவர்கள், ஆசிரியர்களும் இந் நினைவு நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர். இராணுவக் கெடுபிடிக்கு மத்தியிலும் மக்கள் உணர்வுபூர்வமாகத் தங்கள் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.✷

## லண்டன் சர்வதேச மாநாட்டில் வெளியிடப்பட்ட ஆரோக்கியமான கருத்துக்கள்

✷ சர்வதேச சட்டங்களுக்கேற்ப தமிழீழ மக்கள் சுயநிர்ணய உரிமையுள்ள தேச மக்களே!

✷ அவர்களது சுதந்திரப் போராட்ட இயக்கத்தை அங்கீகரிப்பதும் அவர்களுக்கு நேரடி மனித நேய உதவிகளை வழங்குவதும் சர்வதேசக் கடமையே!.

சர்வதேச சட்டங்களுக்கேற்ப தமிழீழ மக்கள் சுயநிர்ணய உரிமையுள்ள தேச மக்களே" என்பதை லண்டனில் நடைபெற்ற சர்வதேச மாநாடு உலகுக்கு நன்கு தெளிவுபடுத்தியுள்ளது. சர்வதேச – உள்ளூர் பேச்சாளர்கள் அனைவரும் தமிழ் மக்களுக்கு எதிராகச் சிங்கள சிறிலங்கா அரசுகள் தொடர்ச்சியாகச் செய்துவரும் எண்ணற்ற அக்கிரமச் செயல்களை மீளவும் மீளவும் சுட்டிக் காட்டினர். 'அமைதிக்கான போர்' எனும் போர்வையில் தற்பொழுது சிறிலங்கா நடாத்திக் கொண்டிருக்கும் போர், மனித அவலங்களையும் மனித உரிமை மீறல்களையும் சிறிலங்கா செய்வதற்கே இடமளித்துள்ளது என்பதையும் பேச்சாளர்கள்

தொடர்ச்சி நடுப் பக்கம்...

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அம்பாறையிலும் தென்மராட்சியிலும் தாக்குதல்கள் சிறிலங்கா காவல் நிலையம் தகர்ப்பு

ஐப்பசி 3ஆம் திகதி அதிகாலை 6 மணியளவில் அம்பாறை 10ஆம் குடியேற்றத் திட்டப் பகுதியில் அமைந்திருந்த சிறிலங்காக் காவல் நிலையம், விடுதலைப் புலிகளினால் தாக்கிய ழிக்கப்பட்டது. 8 காவல்துறையினர் கொல்லப்பட்டு, பலர் காயமடைந்தனர். காவல் நிலையம் முற்றாகத் தகர்க்கப்பட்டது. தப்பிய காவல்துறையினர் காயமடைந்தவர்களையும் தூக்கிக் கொண்டு தப்பிச் செல்ல, விடுதலைப் புலிகள் பல ஆயுதங்களைக் கைப்பற்றிக் கொண்டனர். இந்த வெற்றிகரமான தாக்குதலில் விடுதலைப் புலிகளுக்கு எது வித இழப்பும் ஏற்படவில்லை.

## 4 காவலரண்கள் அழிப்பு

தென்மராட்சி எழுதுமட்டுவாள் பகுதியில் அமைந்திருந்த சிறிலங்கா இராணுவத்தினரின் காவல் அரண்கள் விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதலுக்கு இலக்காகின. இம் மாதம் 4ஆம் திகதி காலை 11.45 மணிக்கு நடைபெற்ற இத் தாக்குதலில் 4 காவலரண்கள் முற்றாகச் சிதைக்கப்பட்டன. இதில் 5 படையினர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். விடுதலைப் புலிகள் தரப்பில் ஒரு போராளி வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். சில ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. படையினருக்கு கண்டி வீதி வழியாக விநியோகங்களை மேற்கொள்வதற்குப் பாதுகாப்பாகவே இக் காவலரண்கள் அமைக்கப்பட்டன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. ✷

# யாழ். குடாநாட்டில் காணாமல் போன...

தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும், மறவன்புலத்தில் இருந்து சிறிது தூரத்தில் உள்ள தனங்கிளப்புப் பகுதியில் 5 தமிழ் இளைஞர்களை இராணுவத்தினர் கைது செய்து எங்கோ கொண்டு சென்றுவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இவ்வாறாக, தமது பிள்ளைகளை சிறிலங்கா இராணுவத்தினரிடம் பறிகொடுத்துத் தவிக்கும் 135 க்கும் மேற்பட்ட பெற்றோர்கள், யாழ். சிறிலங்கா அரச அதிபர் பத்மநாதனுக்கு யாழ். அரச செயலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்ட ஊர்வல ஒன்றை நடாத்தத் திட்ட மிட்டுள்ளதாக அறிவித்துள்ளனர்.

இவ் ஆர்ப்பாட்ட ஊர்வல குறித்து, யாழ். சிறிலங்கா அர அதிபர் பத்மநாதன் ஆக்கிரமிப்பு படைகளின் இராணுவத் தளப மேஜர் ஜெனரல் வீரசூரியாவுக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளா என அறிவிக்கப்பட்டுள்ளது. ✷

# 20,000 இராணுவத்தினர் கிளிநொச்சியில் ...

புலிகளின் கடும் எதிர்த் தாக்குதலுக்குள் சிக்குண்டு கூண்டோடு அழியலாம் எனும் அச்சத்துடனேயே சிறிலங்கா இராணுவத்தினர் கிளிநொச்சி நகரில் ஆக்கிரமிப்புச் செய்துள்ளனர்.

## தமிழ்ச் செல்வன் கடிதம்

பலத்த ஆளணி இழப்புக்களை அடைந்த சிறிலங்கா, தனது பேரிழப்பினை திசை திருப்பும் முகமாக கிளிநொச்சியில் 138 விடுதலைப் புலிகளின் சடலங்களை சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைத்ததாக உண்மைக்கு மாறான செய்தியை சர்வதேச செய்தி முகவர் நிறுவனங்களுக்குப் பரப்பியது. இதையடுத்து இதனை வன்மையாக மறுத்த தமிழீழ விடுதலைப் புலிகள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சிப் பொறுப்பாளர் பார்பரா கன்ஸ்சிகேர் (Barbara Hunsiker) க்கு பின்வரும் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அரசியல் தலைமைச் செயலகம்
மாங்குளம்
29 புரட்டாதி 1996

பார்பரா கன்ஸ்சிகேர்
சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்
கிளிநொச்சி (தற்போது மல்லாவியில் இயங்குகிறது)

அன்புடையீர்,

நாங்கள் ஏற்கெனவே எமது பிரதிநிதிகள் மூலம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் 138 விடுதலைப் புலிகளின் சடலங்களை கையளித்ததாக சிறிலங்கா அரசு உண்மைக்கு மாறாக உரிமை கோரியுள்ளதாக அறிவித்திருந்தோம். இந்தக் கட்டுக்கதை, அரசின் கட்டுபாட்டிலுள்ள செய்தி ஊடகங்கள் ஊடாக பெரிதுபடுத்தப்பட்டு பிரச்சாரம் செய்யப்படுகிறது.

உங்களுக்கு, அரசின் உரிமை கோரலில் உண்மையில்லை என்பதைச் சுட்டிக்காட்டுவதும் அல்லாமல் அரசு தனது உண்மைக்கு மாறான பிரச்சாரங்களுக்கு தங்களது நிறுவனத்தின் நற்பெயரை பயன்படுத்துகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

எங்களது கருத்துப்படி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், அரசின் இந்த உண்மைக்கு மாறான உரிமை கோரலை மறுத்து அறிக்கை ஒன்றை விடுப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

இந்த விடயம் தொடர்பாக உங்களது ஒத்துழைப்பை வரவேற்கின்றோம்.

நன்றி

உங்கள் உண்மையுள்ள

சு.ப. தமிழ்ச்செல்வன்

# லண்டன் சர்வதேச மாநாட்டில்...

முழுவதற்குமே பொருளாதார வீழ்ச்சியை கொடுத்து வருகிறது.

5) இந்த மாநாடு, யாழ். குடாநாடு, வன்னி, கிழக்குப் பிரதேசங்கள் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள தமிழ் மக்களின் உள்ளக இடப்பெயர்ச்சிகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க விரும்புகிறது. வன்னிப் பிரதேசத்தில் தமிழ் மக்கள் உயிர் வாழ்வதற்கு அடிப்படைத் தேவைகளான உணவு-மருந்து என்பவற்றைக்கூட தடை செய்வதன் மூலம் சிறிலங்கா,



உணவையும் மருந்தையும் போர் ஆயுதமாக பயன்படுத்துகின்றது. மக்கள் வாழும் பகுதிகள் இராணுவக் கட்டுப் பாட்டின் கீழ் திறந்த வெளிச்சிறைச்சாலைகள் போல் நடாத்தப்படுகின்றன. இந்த மாநாடு, பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்கு செய்தியாளர்கள், தகவல் சேகரிப்பவர்களைச் சுதந்திரமாக செல்வதற்கு ஆவண செய்ய வேண்டுமெனவும், உடனடியான உதவிகளையும் புனர்வாழ்வு நடவடிக்கைகளையும் சர்வதேச அரசுகளும் அரச சார்பற்ற மனித நேய உதவி நிறுவனங்களும் சுதந்திரமான முறையில் வழங்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கிறது.

6) இந் மாநாடு, தமிழர்களின் தேசிய முரண்பாடானது சுமூகமான அமைதிவழித் தீர்வு மூலமே தீர்க்கப்பட வேண்டுமே

அல்லாது அரசு தன சுயதீர்வுகளை திணித் அல்லது ஆக்கிரமிப்புச் செய் தீர்க்க முயலுமானால் அ ஆக்கிரமிப்பு நிலை ஒ றைத்தான் தோற்றுவிக்குமெ பலமாக நம்புகிறது. எனவே அமைதிவழித் தீர்வுக்கா சூழ்நிலை உருவாக்கப்படுவ அவசியமாக உள்ளது. இ மாநாடு சிறிலங்கா இராணுவம் ஆக்கிரமிப்பு நோக்கில் கைப் ற்றியுள்ள தமிழ்ப் பகுதி ளிலிருந்து விலகி நிலைமை வழ மைக்குத் திரும்ப வழி செய்யுமானால் அது சிறிலங்கா அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையில் இருதரப்பினராலும் மனம் விரும்பி ஏற்றுக் கொள்ளும் மூன்றாவது தரப்பு நாடு ஒன்றின் மத்தியஸ்தத்துடன் ஈடுபட வழி பிறக்கும் என்ற உறுதியான கருத்தை வெளிப்படுத்துகிறது.

இம் மாநாட்டின் இறுதியில், இம் மாநாட்டை சிறப்புற ஒழுங்கு செய்த திரு.ஜெயதேவன் அவர்கட்கும் திரு. காங்கேயன் அவர்கட்கும் மற்றும் இம் மாநாட்டுக்கு பல விதங்களிலும் உதவிய அனைவர்க்கும் வாழ்த்துப் பாடல் பாடிய ஞான பூசணம் திருமதி அம்பிகா தாமோதரம் அவர்கட்கும் நன்றிகள் தெரிவிக்கப்பட்டன. ✷

# மோட்டார் சைக்கிளில் திரியும் இராணுவக் கொலைப் படை

மோட்டார் சைக்கிளில் ஓடித்திரியும் சிறிலங்காப் படையின் கொலைப் படை அணியொன்று, பொதுமக்கள் மீது கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகங்களை மேற்கொண்டு வருகின்றது.. காரைநகரில் உள்ள இராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட மோட்டார் சைக்கிள் கொலைஞரின் கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகங்களில் 3 வயதுக் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது. நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

## யாழ்.மாநகரசபை ஊழியரும் வைத்தியசாலை ஊழியரும் கொலை

யாழ். தட்டாதெரு இராணுவச் சோதனைச் சாவடியில் வைத்து யாழ். மாநகர சபை ஊழியர் ஒருவரும், யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர் ஒருவரும் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர். ஓட்டுமடத்தில் சிறிலங்கா இராணுவம் கட்டியுள்ள 7 அடி உயர மண் அணைகளுக்குப் பின்னால் இவ்விருவரது உடல்களையும் இராணுவம் வீசிவிட்டுச் சென்றுள்ளதாக தெரிய வருகிறது. ✷




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நிதி உதவிகளை நிறுத்துக!!

சர்வதேச சட்டங்களைப் பகிரங்கமாக மீறுவதில், சிறிலங்கா உலக சாதனையை நிலைநாட்டி வருகிறது.

காணாமல் போவோர் குறித்து, "ஐரோப்பிய மனித உரிமைச் சட்டச் சஞ்சிகை"யின் இம் மாதக் கட்டுரை ஒன்றில் மான்பிரட் நோவக் (Manfred Nowak) என்பவர், சிறிலங்காவில் காணாமல் போனவர்கள் குறித்து 11,479 வழக்குகள் பதிவாகியுள்ளதாகக் கூறுகிறார். இதன் மூலம் உலகில் 2வது இடத்தில், காணாமல் போவோர்களை அதிகம் கொண்ட நாடு என்ற சாதனைப் பெருமையைச் சிறிலங்கா தேடிக் கொள்கிறது. உண்மையில் சிறிலங்காவில் – அதன் அரச படைகளினால் காணாமல் போனவர்களாக்கப்பட்ட தமிழ் மக்களின் எண்ணிக்கை, இதைவிடப் பல மடங்கு அதிகம். ஐரோப்பிய ஒன்றியம் கடந்த ஆண்டில் சிறிலங்காவுடன் 'இரட்டை உறவு நிலை' ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது. அவ்வேளை, மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் – ஜனநாயகம் போற்றப்பட வேண்டுமென வற்புறுத்தப்பட்டது. இருந்தபோதிலும், சிறிலங்கா தொடர்ந்தும் படுமோசமான மனித உரிமை வன்முறைகளைப் பகிரங்கமாகச் செய்து வருகிறது என்பதற்கு, ஐரோப்பிய மனித உரிமைச் சட்டச் சஞ்சிகையே சான்றாகிறது.

மேலும், நிதி உதவிகளை வழங்குவதற்கு – அந்நாடுகளில் உள்ள மனித உரிமையின் நிலையினை எடுத்து நோக்குதல் என்பது ஒரு கொள்கையாக உள்ளது. சிறிலங்கா ஏற்றுக்கொண்ட புள்ளி விபரத்தின்படி, 50,000 க்கு மேற்பட்ட மக்கள் சிறிலங்காவின் இராணுவத் தீர்வு முயற்சிகளால் கொல்லப்பட்டுள்ளனர். (உண்மையில் இத்தொகை பல மடங்கு அதிகம் என்பது மட்டுமல்லாது, சிறிலங்கா 50,000 என்னும் எண்ணிக்கையை நிலையான ஒரு புள்ளி விபரமாக என்றும் முன்வைத்து வருகிறது என்பது, இங்கு கவனிக்கப்பட வேண்டியதாக உள்ளது.)

மேலும், ஐக்கிய நாடுகள் அகதிகள் ஆணையாளரின் உள்ளக இடப்பெயர்வு வரைபின்படி, 850,000 மக்கள் இலங்கைத் தீவில் இடம்பெயர்ந்தவர்கள் ஆக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 250,000 க்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் வன்னிப் பிரதேசத்துக்கு இடம்பெயர்ந்து வாழ்கின்றனர். இவர்களது உணவுகள், மருந்துகள் என்பனவற்றை தடைசெய்வதன் மூலம் சிறிலங்கா, 1974ஆம் ஆண்டு ரோம் நகர "பட்டினியையும் போசாக்கின்மையையும் அகற்றுதலுக்கான" சர்வதேசப் பிரகடனத்தை மீறுகிறது. அது மட்டுமல்லாமல், இடம்பெயர்ந்து வாழும் பொதுமக்கள் மேல் இராணுவ நடவடிக்கைகளை வான் வழியாகவும் தரை வழியாகவும் மேற்கொள்வதன் மூலம் சிறிலங்கா மனித நேயத்திற்கு எதிரான குற்றங்களைச் செய்து வருகிறது.

"ஆயுதப் போராட்ட நேரத்தில் பொதுமக்களுக்கும் போராளிகளுக்கும் இடையில் வித்தியாசம் உணரப்பட்டு இராணுவ நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்" எனும் வழிகாட்டலை ஏறெடுத்துக்கூடப் பார்க்காத சிறிலங்கா, 1974ஆம் ஆண்டின் "பெண்களையும் சிறுவர்களையும் ஆயுதப் போராட்ட நேரத்தில் பாதுகாத்தல்" தொடர்பான ஐ. நா பிரகடனத்தை வன்முறைப்படுத்துகிறது. "உடல் நலத்தைப் பேணும் உரிமை", "சுத்தமான சுற்றாடலை வைத்திருக்கும் உரிமை", இவ்வளவு ஏன்: "உயிர் வாழும் உரிமை" மறுக்கப்பட்ட நிலையில் தமிழீழ மக்கள் வாழுகின்றனர். சிறிலங்காவின் இத்தகைய செயற்பாடுகள், அதனை 'அந்நிய' சக்தியாக – ஒடுக்குமுறையாளனாகக் கருத வைக்கிறது.

மேலும் 'இன ஒழிப்பு' (Genocide) எனும் ஆங்கிலச் சொல்லை உருவாக்கியவரான நீதிபதி றோயல் லெம்கின் "'இனஒழிப்பு' என்பது வெறுமனே ஒரு தேச மக்களைக் கொன்றழிப்பது என்று மட்டும் பொருள்படாது. தேசிய மக்களின் வாழ்வுக்கான ஆதாரங்களை –அடிப்படைகளை அழிப்பதற்கான செயற்திட்டங்களை வகுத்து செயற்படுவதுமாகும்." என்கிறார். "இந்த நோக்குக்காக, அம் மக்களின் தேசிய பாதுகாப்புதனை சிதைத்தல், சமூக–அரசியல் நிறுவனங்களை அழித்தல், தனிப்பட்டவர்களைக் கூட அவர்களது தனிப்பட்ட நன்மைகளுக்காக அல்லாது, அவர்கள் சார்ந்திருக்கும் தேசியத் தன்மை குறித்து அழித்தல்" என்கிறார்.

இதனைத்தான் கிளிநொச்சி உட்பட தமிழீழம் எங்கும் சிறிலங்கா தொடர்ந்து செயலாற்றி வருகிறது. கிளிநொச்சி மீதான சிறிலங்காவின் ஆக்கிரமிப்பு முயற்சி, விடுதலைப் புலிகளால் இருமுறை வெற்றிகரமாக முறியடிக்கப்பட்ட பின்னர் மீளவும் பல்லாயிரக்கணக்கான ஆளணிகளையும் சுடுதிறனையும் பயன்படுத்தி சிறிலங்கா இனஅழிப்பு முயற்சி ஒன்றைத் தொடங்கியுள்ளது. ஆயினும், விடுதலைப் புலிகள் அதனைத் தடுத்து நிறுத்தும் புனிதப் போரில் சிறிலங்காப் படைகளுக்குப் பலத்த ஆளணிச் சேதத்தையும் பெருமளவிலான பொருட் சேதத்தையும் ஏற்படுத்தித் தீவிரமாகப் போரிட்டு வருகின்றனர்.

இந் நிலையில், சர்வதேச நாடுகளும் அமைப்புகளும் சிறிலங்காவால் பகிரங்கமாக நடாத்தப்படும் இனஅழிப்புகளையும் – சர்வதேச சட்ட மீறல்களையும் – மனித நேயத்துக்கு எதிரான குற்றங்களையும் – அமைதிக்கு எதிரான போரையும் – தமிழீழ மக்களின் இயற்கை வளங்கள் மேல் அவர்களுக்கு உள்ள நிரந்தரமான இறைமையைத் தடுக்கும் சர்வதேச குற்றச் செயலையும் (இவைகள் ஐ.நா. வின் 1962ஆண்டு டிசம்பர் மாத பொதுச் சபை தீர்மானத்தின் கீழ் குற்றங்களாகக் கருதப்படுகிறது) எடுத்து நோக்கி, தமிழீழ மக்கள் 'அரசற்ற நாட்டினம்' எனும் உண்மையை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

1974ஆம் ஆண்டு ஐ.நா. பிரகடனத்திற்கேற்ப,

**தமிழ் மக்களின் சுதந்திரப் போராட்ட இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகளை அங்கீகரிக்க வேண்டும்.**

**சிறிலங்காவுக்கான நிதி உதவிகளை மட்டுப்படுத்தி அல்லது தவிர்த்து, சிறிலங்கா தமிழ் மக்களை அச் சர்வதேச நிதி உதவிகொண்டு அடிமையாக்க முயற்சிப்பதை தடுக்க வேண்டும்.**

**ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து படைகளை விலக்கி, தமிழ் மக்களது வாழ்வு வழமைக்குத் திரும்ப வழி செய்தல் வேண்டும்.**

**இதன்மூலம் ஒரு அமைதிவழிப் பேச்சுவார்த்தை, மூன்றாவது தரப்பு மத்தியஸ்தத்தினூடாக உருவாக சிறிலங்கா மேல் நெருக்கத்தை ஏற்படுத்தக்கூடிய பொருளாதாரத் தடைகளை மேற்கொள்ள வேண்டும் - நிதி உதவிகளை நிறுத்த வேண்டும்.** ✷

# வரலாறு எம்மிடம் பொறுப்பைக் கையளிக்கின்றது

**(தமிழீழத்திலிருந்து வெளியாகும் 'சுதந்திரப் பறவைகள்" ஆடி மாத ஏட்டின் ஆசிரியத் தலையங்கம்)**

யாழ்ப்பாணத்தைத் தமது இராணுவம் கைப்பற்றிவிட்டதாக உலகெங்கும் தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கின்ற சிறிலங்கா அரசு, அங்கிருந்து மக்களுக்கு இனிமையான எதிர்காலத்தை அமைத்துக் கொடுக்கப் போவதாகவும் கூறுகின்றது. புனர்வாழ்வு, புனரமைப்பு, மேம்பாடு என தனது இராணுவக் கொடுமைகளை மறைத்து, முகத்தில் சிரிப்பைப் பூசியவாறு மக்களை மயக்க முற்படுகின்றது. இது ஒரு பாரிய அரசியல் தந்திரம்.

தமிழரின் தேசிய தனித் தன்மையை மீட்டெடுத்து, உரிமைகளோடு உன்னதமாக வாழ வேண்டும் எனப் போராடத் தயாரான மக்கள், பல வசதி வாய்ப்புக்களை இழப்பதும் துன்ப துயரங்களைச் சுமப்பதும் தவிர்க்க முடியாத வரலாற்று நியதியாகும். சந்திரிகா அரசானது, தமிழ் மக்கள் இழந்துபோன அன்றாட சலுகைகளைக் காட்டி, வண்ணக் கனவுகளில் மக்களை மூழ்க வைத்து, தேசிய தனித்தன்மை பற்றிய, தேச விடுதலை பற்றிய உணர்வுகளை அறவே துடைத்தெறிய எண்ணுகின்றது. அவற்றின் முக்கிய கட்டமாகத்தான் யாழ்ப்பாணத்துப் பெண்களை சிங்கள இராணுவம் மணம் முடிப்பதாகக் கூறிக் காதலிக்கும் திட்டமாகும்.

சிறிலங்கா இராணுவத்தினர், தமிழீழப் பெண்களைத் திருமணம் முடிப்பது தமிழரின் இனத் தனித்துவத்தை அழிக்கும் ஒரு வடிவம் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். உலக வரலாற்றின் ஒவ்வொரு கட்டத்திலும் ஆக்கிரமிப்பு வெறி கொண்ட இராணுவங்கள் எதைச் செய்ய விளைந்ததோ, அதையே சிறிலங்கா அரசும் இன்று புதிய வடிவத்தில் செய்ய முனைகின்றது.

சிறிலங்கா அரசு இப்படியொரு திட்டத்தில் குதித்ததின் பின்னணியை நாம் ஆராய்வோமானால், பல உண்மைகள் வெளிச்சமாகும். சிறிலங்கா அரசின் அதிகாரப் பீடத்தில் அமர்ந்திருப்பவர்கள் எல்லோருமே சிங்களவர்கள் என்பது யாராலுமே மறைக்க முடியாத உண்மை. அரசு எடுக்கும் முடிவுகள் என்பது, சிங்களப் பேரினவாதிகள் தனித்து நின்று எடுக்கும் முடிவுகளே ஆகும். இவையெல்லாவற்றையும் விட, இந்தச் சிறிலங்காவை ஆண்ட அரசுகள் தமிழருக்குச் செய்த நன்மைகள் என்ன என்று பார்த்தால், ஒன்றுமேயில்லை.

ஐரோப்பியரிடம் நாம் இழந்த உரிமையை – அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்ட சிங்கள ஆட்சியாளர்களால் – எமது பாரம்பரிய பூமியான மண் ஆக்கிரமிக்கப்பட்டது. எம் தாயக பூமியைப் பல துண்டுகளாகப் பிரிக்கும் நோக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் அமைக்கப்பட்டன. இக் குடியேற்றங்களைப் பாதுகாப்பதற்காக இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டன. தமிழீழத்தின் எல்லையோரங்கள் கூட சிங்களக் குடியேற்றங்களாக மாற்றப்பட்டன. இக் குடியேற்றங்களில் வந்தமர்ந்த சிங்களக் காடையர்கள், இடையில் அயலிலுள்ள தமிழ்க் கிராமங்களில் புகுந்து, தமிழரை வெட்டிக் கொன்றனர். தமிழரின் பொருளாதாரப் பலத்தை அழித்தனர். இந் நடவடிக்கைகளில் ஈடுபடும் சிங்களக் காடையர்களுக்கு இராணுவத்தினரின் ஆதரவு எப்போதுமே உண்டு.

இன்று யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா அரசு என்ன செய்கின்றது? யாழ்ப்பாணத்தின் குடிசார் நிர்வாகத்தை சிங்களவர்களைக் கொண்டு நடத்துகின்றது. சிறிலங்கா அரசு 'அமைதி, இன ஐக்கியம், ஒருமைப்பாடு' என்றெல்லாம் முகமூடிகளை அணிந்து கொண்டு யாழ்ப்பாணத்துக்கு வந்து நாடகம் நடிக்கின்றது. ஆனால் முகமூடியிலுள்ள கிழிசல்களின் வழியே உற்றுப் பார்த்தால், அவர்களின் உண்மை முகம் தெரியும்.

இதுவரை நாளும் இல்லாத திடீர்ப் பாசம் தமிழ்ப் பெண்களின் மேல் சிங்கள இராணுவத்தினருக்கு ஏற்பட்டதன் நோக்கத்தைப் பெண்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

எமது இனம் ஒரு தூய்மையான தேசிய இனம். எமது வாழ்வு ஆரோக்கியமான பண்பாடுகளோடு இணைந்த தன்மானமிக்க வாழ்வு. இவற்றை அழித்து விடுவதன்மூலம் தமிழரின் விடுதலைப் போராட்டத்தை பூண்டோடு அழித்துவிடலாம் எனச் சிங்களப் பேரினவாதம் எண்ணுகின்றது. தமிழ் இனத்தின் தூய்மையை அழிக்கும் நடவடிக்கையின் ஒரு வடிவமே சிங்களப் படையினரின் தமிழ்ப் பெண்களை மணம் முடிக்கும் திட்டம்.

சிங்களப் பேரினவாதத்தின் இந்த எண்ணத்தை கருவிலேயே அழித்துவிட தமிழ்ப் பெண்கள் கங்கணம் கட்ட வேண்டும். தமிழ்ப் பெண்களைத் தீய நோக்குடன் அணுக முனையும் ஒவ்வொரு சிங்கள இராணுவத்தின் இதயத்திலும் இடி தாக்க வேண்டும். எங்கள் மண்ணில் ஒரு புதிய கலப்பினம் உருவாகாமல் தடுக்கும் பாரிய பொறுப்பை, வரலாறு தமிழ்ப் பெண்களின் தலையிலே சுமத்திவிட்டது. இந்தப் பொறுப்பை ஏற்க ஒவ்வொரு தமிழ்ப் பெண்ணும் தன்னைத் தயார்ப்படுத்தும் பணியில் இப்போதே இறங்கி விடவேண்டும். ✷

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இந்த மண் யாருக்கும் பணியாது

## பலம்

யாழ். குடாநாட்டில் இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதியான ஒரு பிரதேசம். ஆக்கிரமிப்பாளர்களின் நடமாட்டங்களின் பின் எங்கும் அமைதியாகி ......... மயான அமைதியாக .........

குச்சொழுங்கையொன்றில் ஒதுக்குப் புறமாக இருந்த கிணறு ஒன்றில் மட்டும் நீர் அள்ளி ஊற்றப்படும் மெல்லிய ஒலி. ஒரு புலிவீரன் அவசர அவசரமாகக் குளித்துக் கொண்டிருக்கின்றான். அவனின் வயிறு பசியுடன் போராடிக் கொண்டிருந்தது. குளித்து முடித்துத் திரும்புகின்றான் அவன்.

கிணற்றுத் தொட்டியில் ஒரு சட்டி. அதில் புட்டும் கறியும். சுற்றும் முற்றும் பார்க்கின்றான். எவரையும் காணவில்லை. புரிந்து கொண்டான்.

அவனின் வயிற்றுக்கும் பசிக்கும் இடையேயான சண்டை தீர்ந்தது.

எச்சரிக்கையுடன் மெல்ல ஒழுங்கையை எட்டிப் பார்க்கின்றான். ஆளரவமற்ற அந்த ஒழுங்கையைத் தாண்டி வீதியில் ஒரு சிறுவன்.

'தம்பி'

சிறுவன் ஒழுங்கையை நோக்கி வந்தான். "இவனாக இருக்குமோ?" என்ற ஐயம் புலி வீரன் மனதில் எழுகிறது.

"தம்பி, இது உங்கட சட்டிதானே. இந்தாங்கோ கொண்டு போங்கோ"

சிறுவன் முகத்தில் சின்னதாக ஒரு புன்னகை தோன்றி மறைகிறது.

"இது எங்கட சட்டியில்லை அண்ணா. அந்த வீட்டு அக்காதான் குடுக்குச் சொல்லித் தந்தவா. தாங்கோ அவவிட்டக் குடுக்கிறன்."

சிறுவன் போன திசையையே பார்த்துக் கொண்டு நின்ற புலி வீரனுக்கு கண்கள் பனித்தன. "எந்த நெருக்கடிக்குள்ளும் எங்கட மக்கள் எங்களோடதான்" என்ற எண்ணம் ஆயிரம் யானைப் பலத்தைக் கொடுக்க, தனக்கான அடுத்த பணியை நிறைவேற்ற நடக்கின்றான்.

❧❧❧

## பற்று

யாழ். குடாநாட்டின் ஒதுக்குப் புறமான ஒரு கிராமம். அன்றும் அமைதியாக அதே விடியல். மயான அமைதி.

மறைவிடங்களில் இருக்கும் எமது வீரர்களுக்கு அந்த வீடு ஒரு அமுதசுரபி. மறைந்திருந்த எமது வீரனொருவன் பசி தீர்க்க அங்கே வருகின்றான். திடீரென அந்தக் கிராமம் சுற்றி வளைக்கப்படுகிறது. யாரோ ஒரு புண்ணியவாளன் காட்டிக் கொடுத்துவிட்டான். சில வீடுகள் 'சோதனை' என்ற பெயரில் தலைகீழாகப் புரட்டப்பட்டுக் கொண்டிருந்தன.

வீட்டுக்குள் ஒரு புலி, ஒரு துப்பாக்கியுடனும் சில ரவைகளுடனும் .........

நிலைமையின் மோசமான தன்மையைத் தெளிவாகப் புரிந்துகொண்ட அம்மாவும் அம்மாவின் பெண் பிள்ளைகளும் பிரச்சினைக்கு முகம் கொடுக்கத் தயாராகினர்.

"தம்பி, 'ஆமி' வீட்டுக்குள்ள வந்தா, எங்க மூன்று பேருக்கும் 'சயனைட்'டைத் தந்துபோட்டு நீ சண்டை பிடி மோனை"

அம்மாவின் குரலில் இருந்த உறுதி ஒரு கணநேரம் அவனைத் திகைப்படைய வைத்தது.

சிங்களக் குரல்கள் நெருங்கி நெருங்கி வந்தன. ஒவ்வொரு விநாடியும் எதிரியை எதிர்பார்த்தவாறு காத்திருந்தனர். அவர்கள் எதிர்பார்த்திருந்த 'அந்த நேரம்' வராமலேயே போய்விட்டது. அந்த வீடு 'அவர்களின்' கண்ணில் படாமல் போனது ஆச்சரியம்தான். சுற்றி வளைப்புக் கும்பல்கள் அந்தக் கிராமத்தை விட்டு வெளியேறியதற்கு அடையாளமாக கவச வாகனங்களின் இரைச்சல்கள் தூரப் போயின.

வீட்டுக்குள்ளிருந்த நால்வரும் ஒருவரையொருவர் பார்த்துப் புன்னகைத்துக் கொள்கின்றனர்.

❧❧❧

## மக்கள் சக்தி

அந்தக் கிராமத்தில் வேலை செய்யவென உள்நுழைந்த புலி வீரனைக் காணவில்லை. சில நாட்களின் முன்னர் அவனின் தொடர்பு அற்றுப் போய்விட்டது.

என்ன நடந்திருக்கும்? யாரேனும் காட்டிக் கொடுத்து, அந்தக் 'கோதாரி விழுவார்' பிடித்துக் கொண்டு போய்விட்டார்களோ?

அந்தப் புலி வீரனின் நிலையை அறிவதற்காக இன்னொரு விடுதலைப் புலி உள் நுழைந்தான்.

எப்படி விசாரிப்பது?

தனது பழைய ஆதரவாளர்களின் வீடுகளைத் தேடி அவன் பதுங்கிப் பதுங்கி நடந்தான். வேலியோர நிழலிலும் சுவர்க் கரையிலுமாக நகர்ந்து கொண்டு, அந்தப் புலி வீரனைப்பற்றி விசாரித்த இவனைப் பார்க்க, அந்த மக்களுக்கு ஐயம் தோன்றிவிட்டது.

"உளவாளியோ இவன்? 'ஆமிக்காரனின்ர' கண்ணிலை படாமல் எங்கடை பிள்ளையை நாங்கள் பத்திரமாக வச்சிருக்க, ஆரடா இவனொருத்தன் வந்து எங்கடை பிள்ளையைத் தேடுறான்."

தமக்குள் கிசுகிசுத்துக் கொண்ட ஊர் மக்கள் ஒரே பாய்ச்சலாக – அந்த விடுதலைப் புலியின் மேல் பாய்ந்து – ஆளை ஒரே அமுக்கு. நல்ல அடி.

ஊருக்குள் வேலை செய்து கொண்டிருந்த புலி வீரன் ஓடோடி வந்து நிலைமையை மக்களுக்கு விளக்கி அந்த விடுதலைப் புலியைக் காப்பாற்றிவிட்டான். இல்லாவிட்டால் ......... புலி வீரனிடமும் மக்களிடமுமிருந்தும் விடைபெற்ற அந்த விடுதலைப் புலி வீரன் நடந்தவற்றை மனதுள் அசை போட்டவாறு, சிரித்துக் கொண்டு சென்றான்.

"இந்தச் சனம் இருக்குமட்டும் எங்கடை போராட்டம் அழியாது."

❧❧❧

## புன்னகை

திடீரென எதிர்பாராமல் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில், அந்தப் புலி வீரனுக்குக் காயமேற்பட்டு விட்டது. அந்தப் பிரதேசத்தை விட்டு எப்படியாவது வெளியேற வேண்டும்.

சோதனை நிலையங்களில் இராணுவத்தினர் சீற்றத்துடன் நின்று கொண்டிருந்தார்கள். இவர்களைத் தாண்டி இந்தக் காயத்துடன் எப்படிப் போவது?

புலி வீரனுக்கு ஒரே யோசனையாக இருந்தது. அவள் அவனுக்கு உதவ முன் வந்தாள்.

"வாங்கோ அண்ணா. நான் கூட்டிக் கொண்டுபோய் விடுறன்"

அவளுடன் புறப்பட்டான் அவன்.

இரத்தம் வெளியேறாதவாறு காயத்தில் பலமான கட்டு. கட்டை உடை மறைத்திருந்தது. இப்போது அவனின் தோற்றத்தில் ஒரு பிரச்சினையுமில்லை.

அவனும் அவளும் இரண்டு மிதி வண்டிகளில் .........

சோதனை நிலையம் நெருங்கிவிட்டது. மிதிவண்டியை மெதுவாக உழக்கிய அவள் அதில் நின்ற இராணுவத்தினரைப் பார்த்துப் புன்னகைத்தாள். புன்னகையில் மயங்கிப்போன இராணுவம் அவர்களைப் போகுமாறு கையசைத்தது.

அவர்களின் பார்வையைத் தாண்டியதும் அவள் முணுமுணுத்தாள்.

"சனியன்கள்"

அன்று அந்தப் புலி வீரன், அவளின் புன்னகையின் உதவியுடன் தடைகளைத் தாண்டி தன்னிருப்பிடம் போய்ச் சேர்ந்துவிட்டான். ✷

❧❧❧

## "பிள்ளையள் ஆட்டிலறி எடுத்திட்டாங்கள்" "அப்ப இனி பலாலி 'ஆமி'க்கு அடிக்கலாம் எண்டு சொல்லுங்கோ"

எப்போது, எங்கிருந்து என்று எந்த வரையறையுமின்றி எல்லா இராணுவ முகாம்களிலிருந்தும் மக்கள் குடியிருப்புக்களை நோக்கி ஏவப்படும் 'ஆட்டிலறி' எறிகணைகள் என்றால் தமிழ் மக்களுக்குப் பீதிதான். சிறிலங்கா இராணுவத்தின் மீது மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தியதில் கணிசமான பங்கு இந்த 'ஆட்டிலறி' எறிகணைகளுக்கு உண்டு.

முல்லைத்தீவிலிருந்து கைப்பற்றப்பட்டு விடுதலைப் புலிகளின் வாகனத்தில் பயணித்த 'ஆட்டிலறி' எறிகணைகளைக் கண்டவுடன் நம் மக்கள் அடைந்த மகிழ்ச்சி சொல்லி மாளாது. இதுவரை எம்மை மிரட்டிய அரக்கன் இப்போது எங்கள் கைகளில் என்ற புளுகம் அவர்களுக்கு.

முல்லை மாவட்டம் திருவையாற்றில் இரு வயோதிபர்கள் உரையாடிக் கொண்டார்கள்.


"எங்கட பிள்ளையன் முல்லைத்தீவுக் 'காம்பி'லிருந்து 'ஆமி'யின்ர 'ஆட்டிலறி' எடுத்துப் போட்டாங்களாம், தெரியுமே?"

"மெய்யே? அப்ப இனி நாங்கள் இஞ்சையிருந்து பலாலி 'ஆமி'க்காரனுக்குச் 'செல்'லடிக்கலாம் எண்டு சொல்லுங்கோ"

இந்த மக்கள் இருக்கும்வரை -

விடுதலை உணர்வு மங்காது. ✷

**Freiheit** für den
**LTTE Koordinator Schweiz**



**Stopp dem ungerechten Verfahren**

**எங்கள் பிரதிநிதி முரளிதரனை விடுதலை செய்!**

# ஓர் பிரச்சாரப் போர்!!

இலங்கை அரசின் அரசியல் சதி நடவடிக்கை காரணமாக சுவிஸில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் பிரதிநிதி நடராஜா முரளிதரனை விடுதலை செய்யக் கோரி போர்ன், ஜெனீவா நகரங்களில் பல்லாயிரக் கணக்கில் கூடி கோரிக்கை விடுத்தது மட்டுமன்றி பல்லாயிரம் கையெழுத்துக்களுடன் கூடிய மகஜர்கள் போன்றவற்றையும் சுவிஸ் அரசுக்கு அனுப்பியுள்ளோம். இதே போன்று திரு. முரளிதரன் விடுதலை செய்யப்பட வேண்டியதன் நியாயத்தையும் அவசியத்தையும் சுவிஸ் மக்களுக்கு விளக்கும் வகையில் புதிய முறையில் சில பிரச்சார நடவடிக்கைகள் எடுக்க உள்ளோம். இதன் ஓர் அங்கமாக திரு. முரளிதரனின் படம் தாங்கி, அவரை விடுதலை செய்யக் கோரும் சுலோகம் அச்சடிக்கப்பட்ட 'ரீ-சேர்ட்'டுகளை அணிந்து எதிர்வரும் 10.09.96 செவ்வாய்க்கிழமை முதல் 16.09.96 திங்கட்கிழமை வரை சுவிஸ் மக்களுக்கு விளக்கும் ஒரு பிரச்சாரப் போரை சூரிச் நகரெங்கணும் நடத்துகின்றோம். காலை 7.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை நடைபெறும் இப் பிரச்சார போரில் அனைத்துத் தமிழ் பேசும் மக்களும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

— தமிழீழ ஒருமைப்பாட்டு அமைப்பு
*Postfach 319, 8172 Niederglatt*

www.tamilarangam.net



# இனி ஒருபோதும்...



சிங்களப் பேரினவாதத்தின் கொடூரத்தை அதிகளவில் சந்தித்தது மட்டக்களப்புப் பிராந்தியம். அங்குள்ள ஒவ்வொரு குடும்பமும் ஒரு துயர காவியத்திற்குச் சொந்தக்காரர்களாக இருப்பர். தாசனின் குடும்பமும் அங்கேதான் வாழ்ந்து வந்தது. செங்கலடி அந்தக் குடும்பத்தின் தொட்டில். அக்குடும்பத்தில் மொத்தம் ஆறு பேர்.

தாசனின் தந்தை கடற்தொழில் செய்யும் ஒரு கூலித் தொழிலாளி. மணலில் புதைந்த வண்டியை இழுப்பதைப் போல, தனது குடும்ப வண்டியை இழுக்க அவர் படாதபாடுபட்டார். கடலுக்குப் போகும் யாராவது ஒருவருடன் சென்று திரும்பி வரும்போது நாற்பது, ஐம்பது ரூபாவைக் கொண்டுவருவார். அதிற்தான் அந்தக் குடும்பம் வயிறு கழுவும்.

தாசன், குடும்பத்தில் இரண்டாவது பிள்ளை. குடும்ப வறுமையைப் போக்க இரவில் யாருடனாவது வலை இழுக்கச் செல்வான். ஒருநாள் தந்தைக்குக் கடும் காய்ச்சல் வந்துவிட்டது; அதனால், கடலுக்கு அவர் போகவில்லை. குடும்பத்தின் வயிற்றைக் கழுவியது உப்புக் கஞ்சிதான்.

வழமைபோல் இரவு தாசன் வலை இழுக்கச் சென்றுவிட்டான். தாசனின் அக்கா பெயர் மஞ்சு. அவர்களது குடிசையில் படுத்துறங்க இட வசதியின்மையால், பக்கத்திலுள்ள உறவினர் வீட்டுக்கு மஞ்சு அக்கா செல்வது வழமை.

அன்றும் அப்படித்தான் நடந்தது. இரவு நடுவயதை எட்டியது. அந்தக் கிராமத்தில் எஞ்சியிருந்த சில நாய்கள் ஓலமிடத் தொடங்கிவிட்டன. மூடிய கண்களுடன் அக்கிராம மக்கள் விழித்திருந்தனர். தாசனின் சிறு குடிசை இராணுவத்திற்கு இரையாகியது. யானையின் காலின் கீழ் அகப்பட்ட முளைக்கீரை போல குடிசை உருக்குலைந்தது. சுகயீனமாய்க் கிடந்த தந்தை, பட்டினியுடன் கிடந்த தாய், தங்கை மற்றும் தம்பி ஆகியோர் ஒரு நொடியில், கொடியோரின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாகிவிட்டனர். விடியமுன் எமகாதகர்கள் சென்றுவிட்டனர். விடிந்ததும் மஞ்சு அக்கா ஓடிவந்தாள். வீழ்ந்து கதறினாள் - மண்ணில் புரண்டாள்; மயங்கிப், பின் எழுந்து அலறினாள். உறவுகளும் துடித்துக் கதறின.

கடலிலிருந்து வந்துகொண்டிருந்த தாசனுக்கு இச் சத்தங்கள் திகைப்பையும் அச்சத்தையும் கொடுத்தன. வீட்டை அண்மித்ததும் அது துயரமாகவே மாறிவிட்டது. தாசனைக் கண்ட மஞ்சு அக்கா கட்டிப் பிடித்துக் கதறினாள். மிஞ்சியிருந்த அந்தக் குடும்பத்தின் இரு விழுதுகளும் ஒன்றின் மீது ஒன்று புரண்டு அழுதன. தங்கைச்சி செத்துக் கிடந்த

## உண்மைச் சம்பவம்

கோலம், தாசனை விம்மி விம்மி அழச் செய்தது.

நாட்கள் ஊர்ந்தன. வலை இழுத்து வாங்கும் காசை அக்காவிடம் கொடுத்துவந்தான் தாசன். ஒரு நாள் தாசனை அருகில் இருத்திவிட்டு அக்கா சொன்னாள் - "தம்பி! நான் இயக்கத்துக்குப் போகப்போறன்........" என்று கூறி முடிக்குமுன், தம்பி சொன்னான்: "அக்கா நீ நில், நான் போறன்". ஆனால், சொல்லியவாறே அடுத்த நாள், அக்கா இயக்கத்துக்குப் போய்விட்டாள்.

தாசன் தனிமரமானான். கடலும், குடிசையும் அவனது உலகமாகியது. இரண்டு ஆண்டுகள் நகர்ந்துவிட்டன. தாசனும் இயக்கத்துக்கு வந்துவிட்டான். தாசனின் இப்போதைய பெயர் தனராஜ். தளபதி 'கருணா'வின் பணிப்பின் பேரில் மட்டக்களப்பில் இருந்து வந்து, மணலாற்றில் துப்பாக்கியுடன் நின்றான்.

அப்போது காட்டுக்குள் பெரிய சமர் நடந்துகொண்டிருந்தது. ஒரு நாள், காட்டின் ஓர் ஓரத்தில் தனராஜ் காவல் கடமையில் இருக்கும்போது "என்னைத் தெரியுமா?" என ஒரு பெண் குரல் கேட்டது. திரும்பிப் பார்த்த தனராஜ் திகைத்துப்போய்விட்டான். "அக்கா" என வாய்விட்டுக் கூப்பிட்டான். "ஆமி முன்னேறிக்கொண்டிருக்கிறான். நாங்கள் மறுக ஆறுதலாய்க் கதைப்பம்" என்றாள் அக்கா. தனராஜின் குழுவுக்கு இன்னொரு பக்கத்தால் முன்னேறித் தாக்கும்படி கட்டளை வந்தது. காட்டுச் சமர் தொடங்கியது. இருபக்கத்துத் துப்பாக்கிகளும் உமிழ்ந்தன. எறிகுண்டுகள் இடையில் விழுந்து முழங்கின. எறிகுண்டின் சிதறல் ஒன்று தனராஜின் கை ஒன்றைத் துண்டித்தது. மருத்துவ வசதிக்காக தனராஜ் சமர் முனைக்குப் பின்னாற் கொண்டுசெல்லப்பட்டான்.

காயமடைந்த இன்னும் சில போராளிகளுடன் அங்கே தனராஜ் இருந்தான். அருகில், வீரச்சாவடைந்த போராளிகளது வித்துடல்கள் துணியால் மூடிவைக்கப்பட்டிருந்தன. "பெண் போராளிகளது வித்துடல்கள் சிலவும் இதில் இருக்கின்றன" என்று சொன்ன இன்னொரு போராளி, தனராஜின் மூளைக்குள் எரிமலையை வெடிக்கச் செய்த இன்னொரு செய்தியையும் சொன்னான். ஓடிச்சென்ற தனராஜ் பெண் போராளிகளது வித்துடல்களை மூடியிருந்த துணிகளை ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்தான். அதிலொன்றைத் திறந்தபோது......... "அக்கா" என்று மெதுவாக விம்மினான்.

"சண்டை முடியச் சந்திப்பம்" என்றாயே, "இனி ஒருபொழுதுமே சந்திக்க முடியாதே!" ✷

- நர்மதன் -

# பல நாள் பொய்யன் ஒருநாள்........

முல்லைத்தீவு சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பிலும் அதைத் தொடர்ந்து நடைபெற்ற தேடியழிப்பு நடவடிக்கையிலும் அங்கிருந்த 1,400 க்கும் அதிகமான இராணுவத்தினர் கொல்லப்பட்டது எல்லோரும் அறிந்ததே.

போர் முனையில் இறந்த சிறிலங்கா வீரர்களின் உடல்களை, உலகப் போர் விதிகளுக்கமைய விடுதலைப் புலிகள் சிறிலங்கா அரசிடம் ஒப்படைக்க, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் முயற்சி எடுத்திருந்தனர். ஆனால், தமது அரசியல் நலனுக்காகவும், தமது வருவாய்களுக்காகவும் இப்போரை நீடித்துச் செல்லும் சிறிலங்கா அரசியல்வாதிகளும், அதன் இராணுவத் தளபதிகளும் தங்களது வீரர்களின் உடல்களைப் பொறுப்பெடுக்க மறுத்துவிட்டனர்.

அதாவது, பெருவாரியான உடல்கள் தென்பகுதிக்குப் போனால் தனது அரசு கவிழ்ந்துவிடும் – தமது பொய் முகம் நார் நாராகக் கிழிந்துவிடும் என்று கிலி பிடித்த சந்திரிகா அரசு, கூலிக்காக 'நாட்டுக்குச் சேவை" எனும் பெயரில் வந்த தனது வீரர்களின் உடல்களை வாங்கி உறவினர்களுடன் ஒப்படைக்கவே மறுத்துவிட்ட கீழ்த்தரமான சிறிலங்கா அரசு........

இருப்பினும், செஞ்சிலுவைச் சங்கத்தினரின் முயற்சியினால், சம்பிரதாயத்திற்காக நல்ல நிலையிலிருந்த சில உடல்களை மட்டும் பொறுப்பேற்க அரசு இணங்கியது. முதலில் நாநூற்று நாற்பத்தொரு (441) உடல்களை




விடுதலைப் புலிகள் மகளிர் படையணியைச் சேர்ந்த தாரணி (நிஸ்மியா) செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைத்தார். ஐம்பத்தைந்து (55) உடல்கள் மட்டும் தென்பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

சிங்களப் பெற்றோர்களின் நெருக்குதலைச் சமாளிக்க முடியாமல் சிங்கள அரசு, போரில் இறந்த இராணுவத்தின் எண்ணிக்கையைக் குறைத்தே சொன்னது. சொல்லிக் கொண்டும் இருக்கிறது.

முகாமின் நிலை பற்றிய தகவல்களை சிறிலங்கா இராணுவப் பேச்சாளர் தாக்குதல் நடந்து கொண்டிருந்த நேரத்தில் கூட – தளத்தில் நின்ற தமது படைகளுடனான வானொலித் தொடர்புகள் அறுந்த நிலையிலும் கூட – முன்னுக்குப் பின் முரணாகவும், முற்றிலும் தவறாகவும்மே வெளியிட்டு வந்தார். தற்போது பிற இடங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் தாக்குதல் சம்பவங்களிலும் இதனையே கடமையுணர்வுடன் செய்தும் வருகின்றார்.

இன்னும் எத்தனை நாட்களுக்கு இந்தப் பொய்?

இது புதுமொழி!

"பலநாள் பொய்யன் ஒரு நாள் அகப்பட்டே தீருவான்."" ✷

அதிஸ்டலாபச் சீட்டிழுப்பு
(நெதர்லாந்து)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நெதர்லாந்துக் கிளையினரால் 21.09.96 ஞாயிறு புனர்வாழ்வுக் கலை மாலையில் மக்கள் முன் குலுக்கப்பட்டது.

அதிஸ்டசாலிகளின் பற்றுச் சீட்டு இலக்கங்கள்.

1ம் பரிசு - 1701
2ம் பரிசு - 0162
3ம் பரிசு - 1484

20 ஆறுதல் பரிசுக்குரிய பற்றுச் சீட்டு இலக்கங்கள்

1240, 0602, 1189, 1952, 0569, 0929, 1499, 1426, 0546, 1269, 1967, 1204, 0503, 1463, 0781, 1239, 1226, 1477, 0440, 1777

தமிழர் புனர்வாழ்வுக் கழகம்
நெதர்லாந்து

☎ 072 56 44442

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அவர்கள் என்ன பாவம் செய்தார்கள்.

பரந்து விரிந்த வயல் வெளிகளும் உயர்ந்து அடர்ந்த பனந்தோப்புகளும், வெள்ளை விரித்தாற்போல் விரிந்து கிடக்கும் வெண்மணற்பரப்புகளும், வெள்ளலைகள் இசைபாடத் துள்ளிவரும் மீனினங்கள் நிறைந்து கிடக்கும் கடற்பரப்பும் ஒருங் கிணைந்து அழகு சேர்க்கும் ஒரு அழகிய கிராமம் சித்தாண்டி.

சித்தாண்டியைச் சுற்றிவர இராணுவ வேலிகள். அங்கேதான் வாழ்ந்து வந்த அந்தக்குடும்பம். திருமணமாகியும் பல வருடங்களுக்கு அவர்களுக்கு குழந்தைப்பாக்கியம் கிடைக்க

## தென் தமிழீழத்தின் கதை

# இரத்தத்திலும் கண்ணீரிலும் எழுதப்படுகின்றது...

வில்லை. அவர்கள் நேராத தெய்வங்களும் இல்லை. போகாத கோயில் குளங்களுமில்லை. ஒரு குழந்தைக்காகவே ஏங்கி ஏங்கித் தவமிருந்த அந்தத் தம்பதியினர் ஓர் ஆண் குழந்தையைத் தத்தெடுத்து கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்தனர். அவனும் வளர்ந்து வாலிபவயதை எட்டிவிட்டான்.

வயதுக்கு வந்த பிள்ளைகளை வைத்தி ருக்கும் எல்லாப் பெற்றோர்களிடமும் இயல் பாகவே குடிகொண்டிருக்கும் ஏக்கமும் பயமும் இவர்களையும் அப்பிக்கொண்டது. எப்போதும் சிறிலங்கா இராணுவம் சுற்றி வளைக்கலாம், தேசத் துரோகிகள் வந்து குதிக்கலாம். இளைஞர்கள் யுவதிகளைக் கைது செய்யலாம், சுட்டுக்கொல்லலாம். இது அங்கே நடக்கும் நாளாந்த நிகழ்வுகளாகி விட்ட மட்டக்களப்பிலேயே தேசத்துரோகி களுக்குள் பிரபலமாகத் திகழ்ந்தவன் "புளட் மோகன்". புளட் மோகனைத் தெரியாதவர்களே அங்கு இல்லை. குழந்தைகளில் இருந்து முதியவர்கள் வரை அவனின் கொடூரப் பார்வையிலிருந்து யாருமே தப்ப முடியாது.

அன்றும் அப்படித்தான் மாலை நேர உறக்கத்திற்குப் பின் தேநீர் தயாரித்துக் கொண்டிருந்தாள் அந்தத் தாய். வீதியால் வாகனங்கள் வரும் இரைச்சல்.

"அப்பா புளொட் மோகன்ர வான் மாதிரிக் கிடக்குது"

தந்தையும் மகனும் வெளியில் ஓடி வந்தனர். அவ்வளவுதான்.

வெள்ளை வாகனத்திலிருந்த மோகனின் துப்பாக்கி ரவையில் தந்தையும் மகனும் இரத்தம் சிந்தித் துடிதுடித்து அடங்கினர்.

கணவனதும் மகனினதும் உடலிலேயே விழுந்து அழுதுபுரண்ட அந்தத்தாய், வீட்டினுள் ஆவேசமாக ஓடினாள். அவளின் ஆவேசம்கண்டு ஊகித்த அயலவர்கள் ஓடிவருவதற்குள் எல்லாம் முடிந்துவிட்டது. வயலுக்குத் தெளிப்பதற்கு வாங்கி வைத்திருந்த கிருமிநாசினி முழுவதும் அந்தத் தாயின் வயிற்றினுள் நிரம்பிக் கொண்டது.

எம்மினத்தைக் காப்பதாகக் கூறிக்கொண்டு எதிரிக்கு வால்பிடிக்கும் எமது தேசத் துரோகிகளால் அன்று ஒரு குடும்பம் அழிந்தது.

ஒரு வீட்டிலேயே மூன்று பிணங்கள் கிடத்தப்பட்டிருந்தன. அவர்களின் இறுதிப்பயணத்தின்போதுகூட, உறவு என்று ஒருவரும் இல்லை. அயலே கூடி நின்று அவர்களை வழியனுப்பிவைத்தது.

ஆ

# உலகைப் பார்க்கும் முன்னரே...

சித்தாண்டி முருகன் ஆலயம். மட்டக்களப்பில் பிரசித்திபெற்ற இந்த ஆலய வீதிகளில் வருடாவருடம் மக்கள் வெள்ளம் அலைமோத, தேரேறி பவனி வருவான் முருகன். அயல் கிராமங்களி லிருந்தும் பக்தகோடிகள் வெள்ளம் வந்து திரண்ட வண்ணமிருக்கும். பரந்த வெண் மணற்பரப்பில் கால்புதைய ஓடி விளையாடும் சிறுவர்கள் கூட்டம் ஒரு புறமும், வண்ண ப்பட்டாடைகள் உடுத்தி முருகனிடம் வரம் வேண்டிநிற்கும் இளையவர் கூட்டம் இன் னொருபுறமும், பன்னெடுங்காலந்தொட்டு காலாகாலமாய் விழாக்காணும் எமது கோயில் என்று மார்தட்டி நிமிர்ந்து நிற்கும் முதியோர் கூட்டமுமாக மக்கள் வெள்ளம் நிரம்பி வழியும். கடல் கடல்சார் வளங்கள், நிலம் நிலம்சார் வளங்கள் என்று தன் சொந்த மண்ணையே நம்பியிருக்கும் அந்தக் கிராமமக்கள் இந்த மக்கள் வெள்ளத்தையும், கோலாகலங்களையும், கொண்டாட்டங் களையும் கண்டு பூரிப்படைந்து நிற்பார்கள்.

இன்று அந்த மண்ணும், அந்த மக்களும் அச்சத்துடன் உறங்கிக் கிடக்கின்றனர். சுற்றிவர இராணுவ முகாம்கள் தினமும் கொடூரமான தாக்குதல்கள், அடாவடித் தனங்கள் எந்தப்பக்கமும் ஓடித்தப்பமுடியாத அளவுக்கு இராணுவ வேலிகள். அந்த மண்ணும் மக்களும் இராணுவத்தின் இரும்புப் பிடிக்குள். எந்த நேரமும் என்ன நடக்குமோ என்ற ஒரு அச்சமான வாழ்க்கையையே வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். சீதேவியின் குடும்பமும் அங்குதான் வாழ்ந்தது. புகையிரதப்பாதையை அண்மித்து அமைக்க ப்பட்டிருந்த அழகான குடிசைகளில் ஒன்றுதான் சீதேவியின் வீடும். சீதேவி வீட்டுக்கு ஒரே ஒரு பெண். அண்ணன் மார்களால் செல்லமாக வளர்க்கப்பட்டவள். அவளுக்குத் திருமணமாகி இரண்டு பிள்ளைகள். மூன்றாவதைக் கருவாக வயிற்றில் சுமந்து கொண்டிருந்தாள். அந்த நேரம்தான் சீதேவியின் கணவர் நோய் வாய்ப்பட்டார். காட்டுக்குச் சென்று மரம் வெட்டி ஏற்றிக் கொடுப்பதுதான் சீதேவியின் கணவரின் தொழில். அன்று வழமைபோல மனைவி பிள்ளைகளிடம் விடைபெற்றுக் கொண்டு காட்டுக்குச் சென்ற கணவர் மரம்வெட்டி ஏற்றும்போது மரம்காலில் விழுந்து, கால் முறிந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அன்றாடம் உழைத்துச் சாப்பாட்டுக்குக் கொண்டுவரும் கணவன் மருத்துவமனையில். சீதேவிக்குப் பெரும் திண்டாட்டமாகிவிட்டது. இரண்டு பிள்ளைகளின் சாப்பாட்டுக்கே அல்லாட வேண்டியிருந்தது. தங்கைபடும் கஸ்ரங்களைப் பார்த்துக்கொண்டிருந்த அண்ணன்தான் அவளுக்கு உதவினான். நாளாந்தம் அண்ணனிடமிருந்து வந்த காசும் குறையத் தொடங்கியது. என்னதான் செய்வாள் சீதேவி? தானும் பிள்ளைகளும்தாம் அரைவயிறு கால்வயிறு உண்டாலும், மருத்துவமனையிலிருக்கும் கணவருக்கு ஒழுங்கான சத்துள்ள உணவு வேண்டுமே.

சீதேவியின் காது வெறுமையாகி, தோடு கை மாறி பணம் கிடைத்தது. அதற்கு வேண்டிய சமையல் பொருட்கள் வாங்கி, சமைத்து எடுத்துக்கொண்டு கணவரிடம் மருத்துவ மனைக்குச் சென்றாள். நிறைமாதக் கருவைத் தாங்கிய வயிற்றுடன் கண்கள் ஒளியிழந்து, கழுத்தில் வெறும் மஞ்சள் கயிற்றுடன். காதுகள் வெறுமையாக வந்த மனைவியைக் கண்டதும் அவன் கண்கள் குளமாகியது.

"சீதேவி – இந்த வயிற்றோட நீ ஏனம்மா இப்படிக் கஸ்ரப்படுகின்றாய்? இருந்த ஒரே ஒரு தோட்டையும் ஈடுவைச்சு எனக்குக் கொண்டுவந்துவிட்டாய். உனக்கு ஒண்டென்றால் செலவுக்கு என்ன செய்யப்போகிறாய்? இப்படியெல்லாம் கஸ்ரப்பட்டு எனக்குச் சாப்பாடு கொண்டு வரவேண்டாம். நான் இனி ஆஸ்பத்திரியில தாற சாப்பாட்டையே சாப்பிடுகிறேன். நீ உன்னையும் பிள்ளையையும் கவனமாகப் பார்த்துக்கொள்ளு"

என்றான் அழுகையினூடே. சீதேவியும் அழுதுவிட்டாள். மனதுக்குள் என்ன நினைத்தாளோதெரியாது, இன்றைக்குத்தானே கடைசியாய்த்தாறன் சாப்பிடுங்கோ, நான் இனி வரவும் மாட்டன் – சாப்பாடும் அனுப்பமாட்டன்" என்று சொல்லிவிட்டு கணவரிடம் விடைபெற்றுக்கொண்டு வீடுவந்து சேர்ந்தாள். மருத்துவமனை நாற்றமும், பயணக்களைப்பும் தீர அள்ளிக் குளிக்கத்தொடங்கினாள் அவள். புகையிரதவண்டி வரும் சத்தம். அதைத்தொடர்ந்து பாரிய குண்டு வெடிக்கும் சத்தமொன்று மிகவும் அண்மையிலாகத்தான் இருக்கவேண்டும். ஊரே அதிர்ந்தது. புகையிரதவண்டியில்தான் குண்டுவெடிப்பு நடந்திருக்கவேண்டும். இது இராணுவத்தினர் வந்துகொண்டிருந்த புகையிரதவண்டி. வண்டியிலிருந்த இராணுவத்தினரின் துப்பாக்கிகள் குண்டுகளைக் கக்கின. அவை ஒவ்வொரு வீட்டுச்சுவர்களையும், வேலிகளையும் மனிதர்களையும் துளைத்துக்கொண்டு பாய்ந்தன. அந்தக் குண்டுகளில் ஒன்றோ இரண்டோ கிணற்றடியில் குளித்துக் கொண்டிருந்த சீதேவியையும், அவள் வயிற்றில் பத்துமாதமாக வளர்ந்து வெளிவரக்காத்திருந்த இந்த உலகையே அறியாத அந்தப் பெண் சிசுவின் உயிரையும் குடித்தன.

அரைமணி நேரத்தில் எல்லாம் முடிந்துவிட்டது. வீடுகளுமல் தஞ்சம்புகுந்தவர்கள் ஓடிவருவதற்குள் தாயினதும் சேயினதும் உயிர்கள் இவ்வுலகையே விட்டு வெகுதூரம்போய்விட்டன. இயற்கையாக நடக்கவேண்டிய பிரசவம், கொடியவர்களின் குண்டுபட்டு தாயின் உயிரற்ற நிலையில் வயிறு சிதைந்து வெளியேறிய சிசு. தமிழ்ப்பெண்ணின் வயிற்றில் உருவாகிய ஒரேயொரு பாவத்திற்காக ஒரு காலை இழந்து உயிரற்ற உடலாக இந்த மண்ணை முத்தமிட்டது.

-உலகமங்கை

ஆ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# “ வன்னியின் முழுநிலவு ”

உன்னை நாங்கள் மறந்து விட்டோமா? இல்லை. அது எங்களால் முடியாது. உன்னை மட்டுமல்ல, உன்னைமாதிரி. இந்த மண்ணை நேசித்து, இந்த மண்ணுக்கு உயிர் தந்த எவரையுமே எங்களால் மறக்க முடியாது. சந்திரன், உன்னை – உனது உணர்வுகளை – மறக்கமுடியாமல் நாங்கள் மட்டுமா தவிக்கின்றோம்? இல்லை.

புதரிகுடாவில் காற்சட்டை இல்லாமல் உன்னைக்கண்டு தாவும் சிறுசுகளும், பொன் நகரிலிலும் முள்ளிய வளையிலும் உரலுக்குள் பாக்கிடித்தபடியே விழிகளால் உன்னைத் தேடும் கிழவிகளும், களைத்து விழுந்து வரும் உன்னைத் தடவி உற்சாகமாக வழியனுப்பும் நிழல்மரங்களும் உன்னைக் காணாமல், உன்னை விழுங்கிய கடலலைகளைப் போலவே குமுறிக் கொண்டிருக்கிறார்கள்.

சந்திரன், நீ முல்லைத்தீவுக்கு வரும்பொழுது ஒரு சின்னப்போராளி.

நீ கறுப்பாக இருந்தாலும் அழகாக இருப்பாய். கண்ணாடிக்குள்ளாகத் தெரியும் உனது கண்களில் அன்பும், கனிவும் இருக்கும் சில நேரங்களில் கோபமும் தெறிக்கும்.

சந்திரன், நீ அடிக்கடி சொல்வாய்:

"நான் ஏழைக்குடும்பத்தில்தான் பிறந்தனான். வயலில் கூலிவேலை செய்துதான் நாங்கள் வாழ்ந்தனாங்கள்."

உண்மைதான். அதனால்தான் ஏழைகளை நேசிக்கும் இதயத்தைப் பெற்றுக்கொண்டாய். அதனால்தான் எப்பொழுதுமே ஏழை மக்களுடன் ஒன்றிக் கலந்து விடுவாய்.




ஒருமுறை, புதரிகுடா என்ற கிராமத்திற்கு நாங்கள் போயிருந்தோம். வயற்கரை ஓரங்களில் சிறு கொட்ட கைகளைக் கட்டி அங்கு சில குடும்பங்கள் இருந்தன. கூரைகள் பிய்ந்துபோயிருந்தன. மழையிலும் வெயிலிலும் அவர்கள் நனைந்துகொண்டுதான் இருந்தார்கள். விழிகளில் ஏக்கத்துடன், வெறும் மேனியுடன், நோயினால் வீங்கிய வயிறுகளுடன் இந்த மண்ணின் குழந்தைகள் எங்கள் முன்பு நின்றார்கள்.

நீ தவித்தாய்.

அவர்கள், பல நாட்களாகக் குளிக்கவில்லை என்றார்கள். தண்ணீர் அள்ளவேண்டாம் என்று பக்கத்து வளவுக்காரன் தடுத்து விட்டானாம். குடிப்பதற்குக்கூடத் தண்ணீர் இல்லை என்றார்கள். அதனைக்கேட்டு

நீ பட்ட தவிப்பும், உன்னிடம் தோன்றிய கோபமும் எங்களுக்கு நன்றாகவே தெரிந்தன. அந்த ஏழை மக்கள் இந்த மண்ணில் மனிதர்களாக வாழவேண்டும். அவர்களுக்கென்று இந்த மண்ணில் சொந்த நிலம், தொழில், மகிழ்ச்சிக்குரிய வாழ்வு எல்லாமே தோற்றுவிக்கப்பட வேண்டும் என, நீ தீர்மானித்துக் கொண்டாய். உண்மையில் நீ கேலியாகச் சொல்வது மாதிரி 'அதுவும் ஒரு போர்முனை'தான்.

நீண்டகாலமாகக் கவனிக்கப்படாமால் ஊருக்குள் காடாய் இருந்த உடையார் ஒருவரின் பெரும் நிலம், அவர்களுக்குச் சிறிய பகுதிகளாகச் சொந்த நிலமானது. புதிய அழகான மண்வீடுகள் அவர்களுக்குச் சொந்தமானது.

அந்தக் கிராமத்திற்கென்று பாலர் பாடசாலையை ஆரம்பித்தபோது, உன்னுடன் நாங்களும் அங்கே நின்றோம். நீ அவர்களுக்குப் புதிய ஆடைகளைக் கொடுத்திருந்தாய். ஆறு வயது தொடக்கம் பத்துப் பன்னிரண்டு வயதுவரை, எல்லாக் குழந்தைகளும் பாலர் வகுப்பில் படிப்பதற்கு வந்திருந்தார்கள். அது ஒரு மகிழ்ச்சிக்குரிய நாள். இனி அந்தக் கிராமம் தனக் கென்றொரு வாழ்வைக் காணும் என்பது அன்று வெளிப்பட்டது.

சில நாட்கள் சென்றன. அந்தக் கிராமத்தவர்களுக்குப் புதரிகுடா என்ற பெயர் பிடிக்கவில்லையாம். அதனைச் சந்திரபுரம் என மாற்றிவிட்டார்கள். அதனைக்கேட்ட எங்களுக்குச் சிரிப்பாக இருந்தது. உனக்குக் கோபமாக இருந்தது.

நீ ஏசினாய். இனி அப்படிச் சொல்லக்கூடாது என்றாய். ஆனால் சந்திரன், நீ உயிரோடு இருக்கும் பொழுதும் உன் மரணத்தின் பின்பும் அந்தப் பெயர் மாறவே இல்லை. நீ அதற்குப் பின் எவ்வளவோ பெரிய பெரிய பொறுப்புக்களில் எல்லாம் இருந்திருப்பாய். ஆனால் நீ தடம்பதித்துச் சென்றது இங்குதான். உன் நினைவுகள் ஆழமாக வேரூன்றிப் போனதும் இங்குதான்.

சந்திரன், உன் நினைவுகளைச் சொன்னபடி சந்திரபுரம் மட்டும்தான் இருக்கிறதென்றில்லை. நீ உருவாக்கிய இன்னொரு கிராமமான பொன்னகர், நாவற்காடு, உன்னைத் தன் பிள்ளையாக ஏற்றுக்கொண்ட முள்ளிய வளை, தண்ணீரூற்று, முல்லைத்தீவு, பாண்டியன்குளம், பனங்காமம்–ஏன் வன்னி முழுவதுமே உன் நினைவு களைச் சொன்னபடி நிற்கின்றன.

சந்திரன், உனது உள்ளம் சிலவேளைகளில் தாயன்பைத் தேடி அழுவதுண்டு. நீ உனது அம்மாவில் எவ்வளவு அன்பு வைத்திருந்தாய் என்பது, எங்களுக்குத் தெரியும். உன்னுடைய சோகம் நிறைந்த இளமைக் காலத்தை நீ, வேலைகளினூடே சொல்வதுண்டு.

அந்தக் காலங்களில் எங்கள் முன் கடுமையான வேலைகள் நின்றன. நீ முறிந்து – கஷ்டப்பட்டு வேலை செய்வாய். நாங்கள் வியந்து நிற்போம்.

"நான் சின்ன வயசிலேயே வயலுக்கை நிண்டனான்" என்பாய் நீ. உன் விழிகளில் ஏதோ ஒரு ஏக்கம் தெரியும்.

"அண்ணன்மாருக்கும் எனக்கும் சேர்த்து அம்மா பழஞ்சோறு உருட்டித்தருவா" என்பாய் நீ. உன் விழிகளை நாங்கள் பார்ப்போம். நீ வேறெங்கோ பார்த்துக் கொண்டிருப்பாய்.

சந்திரன், நீ கிளிநொச்சியில்தான் பிறந்தாய். ஆனால் உனது அம்மாவும், அப்பாவும் மலையகத்தைச் சேர்தவர்கள். உனது அப்பா சாகும்பொழுது உனக்கு இரண்டு வயதாம். உனது இரண்டு அண்ணன்மாரும் சின்னப்பிள்ளைகள். உங்கள் மூன்று பேரையும் வைத்துக்கொண்டு உனது அம்மா எவ்வளவு கஷ்டப் பட்டிருப்பாள். இப்போதெல்லாம் உன்னுடைய அம்மா உனது படத்தை வைத்துக்கொண்டு விம்மிக் கொண்டி ருக்கிறாளாம்.

சந்திரன், நீ முள்ளியவளையில் அரசியல் வேலை செய்யும்பொழுது, சில நேரங்களில்...... இரவில் உன்னைத் தேடி நாங்கள் வருவதுண்டு. இரவில் சோகமான பாடல் கேட்கும். வீட்டில் உன்னை நாங்கள் காணுவோம். நீ விழித்திருப்பாய். "இந்த விடயம் ஆமிக்காரனுக்குத் தெரிந்தால் பாட்டுக்கேட்கிற வீட்டில் வந்து உன்னைப் பிடிக்கப்போறாங்கள்" என்று, நாம் ஏசுவோம். நீ சிரித்துக்கொண்டே சரிந்து படுப்பாய். விடிந்ததும் நாங்கள் எதையாவது சாப்பிட்டுக்கொண்டிருப்போம். நீ வீடு வீடாக வேலிகளுக்கு மேலாகப் பழைய சோறு தேடித் திரிவாய். அதற்காக நீ வெட்கப்படுவதுமில்லை. ஏனென்றால் அங்கிருக்கின்ற எல்லா வீட்டிற்கும் நீ பிள்ளை மாதிரித்தான். உனக்குச் சாப்பாடு தரவேண்டும் என்பதற்காகவே, அவர்கள் இரவில் சோற்றை மிச்சம் வைப்பதுண்டு. சந்திரன், இன்றைக்கு அந்தச்



## லெப். கேணல் சந்திரன்

(இரா. முத்துலிங்கம்)
4ஆம் வாய்க்கால், கிளிநொச்சி.
பிறப்பு: 13.04.1964
வீரச்சாவு: 29.09.1990

சனத்தினுடைய இதயத்தில் நீ இருக்கிறாயடா!

சந்திரன், நீ அரசியல் பேசுவதை நாங்கள் கேட்பதில்லை. சில நேரங்களில் பார்த்திருக்கிறோம். ஏதாவதொரு வீட்டின் முற்றத்தில், ஒரு கல்லின்மேல் நீயிருப்பாய். தங்கள் வீட்டுக் கதைகளைச் சொல்லிக்கொண்டே அந்த வீட்டுக்காரரும் முன்னாலிருப்பார்கள். அப்போதுதான் – நீயும் இந்த மண்ணின் நிகழ்வுகளைச் சொல்லிக் கொண்டிருப்பாய். தமிழீழ மண்ணின் சோகங்களைச் சொல்லிக்கொண்டிருப்பாய். அவர்கள் எவருக்குமே தெரியாது – அவர்களுக்கு நீ அரசியல் படிப்பிக்கிறாய் என்று. கதைத்து முடிந்த பின்பு, "இந்த மண்ணின் விடுதலைக்காக எல்லோரும் போராடத்தான் வேண்டும்" என்பார்கள்.

முல்லைத்தீவு மாவட்டப் பிரதேசத்திற்கு நீ அரசியல் வேலை செய்வதற்கு வந்து, இரண்டு வருடங்கள் சென்றன. இந்தக் கால இடைவெளியில் உன்னிடம் பல மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன. எதற்கெடுத்தாலும் கோபப்படும் உனது இயல்பும் மாறி இருந்தது. முல்லைத்தீவுப் பிரதேசத்திலும் பல மாறுதல்கள் ஏற்பட்டி ருந்தன. உனதும் உனது தோழர்களதும் கடுமையான உழைப்பு, தேசவிரோத சக்திகளின் பிடியிலிருந்து மக்களை விடுவித்தன. தங்கள் மண்ணின் விடுதலை யைப் பற்றி மக்களைச் சிந்திக்க வைத்தது. அந்த விடுதலைக்காக மக்களைப் போராடத் தூண்டியது.

சந்திரன், உனக்குத் தெரியும் – அந்த நேரங்களில்தான், இந்தியப் படை எம் தேசத்தின் மீதொரு யுத்தத்தை நடாத்தியது. நாங்கள் தெருக்களில் நடக்க முடியாமலும் – கிராமங்களில் நிற்க முடியாமலும் – இருந்த நேரமது.

இரவு நேரங்களில் காடுகளிற்குள்ளும் – காட்டுக் கரை யோரங்களிலும்தான் நாங்கள் படுப்போம். ஆபத்தை எதிர்பார்த்தபடியே இரவின் அச்சத்தில் – பசித்த வயிற்றுடன் – இருக்கும் எங்களை, நீதான் சிரிக்க வைத்துக்கொண்டிருப்பாய். நாட்கள் செல்லச் செல்ல, ஆபத்து நிறைந்த அந்த இரவுகளே இனிமையான இரவுகளாக எங்களுக்கு மாறிவிட்டன. சந்திரன், எங்களின் எல்லாத் தோழர்களும் சொல்வார்கள் – 'கஷ்டமான அந்த நாட்களும் அந்த நினைவுகளும்தான், இன்னும் எங்கள் மனங்களில் பசுமையாகப் படிந்துபோய்க் கிடக்கிறது' என்று.

சந்திரன் நீ அரசியல் வேலைகளில் முழுமையாக ஈடுபட்டிருந்தாலும், தாக்குதற் களங்களுக்குச் செல்வதற்கும் தவறுவதில்லை. உன் கைகள் எதிரிக்கு எதிராகப் பலமுறை துப்பாக்கிகளை இயக்கியிருக்கும்.

தொடர்ச்சி 8 ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# போராளியின் குருதிச்சுவடுகள்...

இந்தியப் படைகளுடன் நெடுங்கேணியில் நடந்த சண்டை ஒன்றில் நீ, கழுத்திலும் கையிலும் காயமடைந்திருந்தாய். களத்தில் ஆயுதங்களைக் கைப்பற்ற முன்னேறியபோது நீ காயமடைந்ததாக, உன் தோழர்கள் சொன்னார்கள்.

நீ எமது முகாமில் சாய்மனைக் கட்டிலில் சாய்ந்திருந்தாய். உன் கழுத்தில் சிக்கிய துப்பாக்கி ரவை, உன்னை வேதனைப்படுத்தியது. நீ அதைவிட அதிகமாக பாவனை – நடிப்புச் செய்தாய். உன் பாவனைகளை எத்தனை தோழர்கள் ரசித்துக் கொண்டிருந்தார்கள். எங்காவது ஒரு மூலையிலிருந்து ஒரு தோழன் உன்னை அழைப்பான்.

> போர்முனையிலே நாம் சந்தித்த ஒவ்வொரு வெற்றியின்போதும், அவற்றுக்காக இலட்சிய வேட்கையோடு போராடிய எத்தனையோ தோழர்களைப் பறிகொடுத்து விட்டோம். தங்கள் வாழ்வைவிட தமிழீழத்தின் விடுதலையை நேசித்தவர்கள் - இனிய கனவுகளைச் சுமந்த இளமை வாழ்வை தமிழீழத் தாயிற்குக் காணிக்கையாக்கியவர்கள் - மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் மரணித்தபோது மகிழ்ச்சியடைந்தார்கள். பெருமைப்பட்டார்கள். திருப்தியடைந்தார்கள்.

நீ கழுத்தைத் திருப்ப முடியாமல் உடல் முழுவதையும் திருப்பி அவனைப் பார்ப்பாய். எங்கள் முகாம் முழுவதும் உன்னைப் பார்த்து ரசித்துச் சிரிக்கும். இந்தியப் படைகள் எங்களைச் சுற்றி ஒரு வலயத்தை அமைத்து எங்களை நெருக்கிய பொழுதும், நாங்கள் காடுகளிற்குள் மகிழ்ச்சியாக இருந்தோம். போராட்டத்தில் நம்பிக்கையோடு இருந்தோம் என்பது, இந்தியர்களுக்குத் தெரிந்திருக்குமோ தெரியாது.

உனது காயம் சுகமாகியது. அந்த நேரத்தில் முல்லைத் தீவுப் பிரதேசத்து மக்கள் இந்தியப் படைகளால் அடித்து விரட்டப்பட்டு, காடுகளிலும் வயல்களிலும் தஞ்சமடைந்து வாழ்ந்தனர். நீயும் அவர்களுடன் கலந்து நின்றாய். நீயும் உனது தோழர்களும் அந்த மக்களுக்குப் போராட்டத்தில் நம்பிக்கையை ஏற்படுத்தினீர்கள். போராட்டத்தின் தேவையைப்பற்றி, இந்த மண்ணின் விடுதலையைப்பற்றி, இந்திய ஆக்கிரமிப்பின் நோக்கத்தைப் பற்றியெல்லாம் அவர்களுக்குத் தெளிவுபடுத்தினீர்கள். அந்த நிலையை விளங்கிக்கொண்டு, மக்கள் எங்களை அரவணைத்ததால்தான், ஆக்கிரமிப்பாளனுக்கு இந்த மண் அடிபணியாது தலை நிமிர்ந்துகொண்டது.

அந்த நாட்களில்தான், நீ கிளிநொச்சிக்கு அரசியற் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டாய். முல்லைத்தீவு மாவட்டத்து மக்களின் கண்கள் உன் பிரிவைத் தாங்காது தவித்தன. ஆனால் உன்முன் இருந்ததோ பெரும் கடமை. நீ கிளிநொச்சிக்குச் சென்ற பின்பு, அரசியற் பிரிவை ஒழுங்குபடுத்தி விஸ்தரித்திருந்தாய். உனது திறமையான செயற்பாடுகள் அந்த மாவட்டத்திலும் நல்ல மாற்றங்களை ஏற்படுத்தின. அந்த நேரங்களில் இரண்டு மூன்று தடவைகள், இந்தியப் படைகளின் சுற்றிவளைப்புக்களிலிருந்தும் நீ தப்பிக் கொண்டாய்.

வன்னி மாவட்ட அரசியற் பொறுப்பாளராக இருந்த மாறன் அண்ணாவின் இழப்பின் பின்பு, நீ வன்னி மாவட்ட அரசியற் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டாய். அந்த நேரத்தில்தான் இந்தியப் படை இந்த மண்ணை விட்டு வெளியேறியது. நீ வன்னி முழுவதும் அரசியற் பிரிவை ஒழுங்குபடுத்தி, வேலைத் திட்டங்களை வகுத்துக்கொண்டாய். புதிதாய்ப் பிறப்பெடுத்த எமது கட்சி அமைப்பும் அந்த நேரங்களில் பலப்பட்டுக் கொண்டது. அந்த நேரங்களில் நாங்கள் நடாத்திய பேரணிகளில், கூட்டங்களில், உனது பேச்சை மக்கள் விரும்பிக் கேட்டார்கள். உன்னால் எப்படி இவ்வளவு இலகுவாக – தெளிவாக எல்லா மக்களையும் கவரக் கூடியமாதிரிப் பேசமுடிகிறது என்பது, எங்களுக்கு வியப்பாகவே இருக்கும்.

சிறிலங்கா இராணுவத்தினருடனான சண்டை மீண்டும் தொடங்கியபோது, நீ எங்கேயோவொரு தாக்குதற் களத்தில்தான் நிற்பாய் என்பது, எல்லோருக்குமே தெரியும். அப்படித்தான் நீயும் நின்றாய்.

கொக்காவில் இராணுவ முகாம்மீதான தாக்குதலிலும் நீ கலந்துகொண்டாய். அந்த முகாமை நாங்கள் வெற்றிகொண்டோம். ஆனால், அங்குதான் உனது அடிவயிற்றில் துப்பாக்கிக் குண்டு தாக்கியது.

சந்திரன், நீ எங்கள் வைத்தியசாலை ஒன்றில் கிடந்தாய். உன் விழிகள் நீ தப்பிக் கொள்வாய் என்ற நம்பிக்கையைத் தரவில்லை.

உன் உறுதியான கறுத்தத் தேகம் வாடிப்போய்க் கிடந்தது.

கலங்கிய விழிகளுடன் நாங்கள் காத்திருந்தோம்.

சில வாரங்கள் சென்றன. நீ கண்விழித்தாய். ஆனால், உன் கால்கள் இனி வழங்காது என்றார்கள். கால்கள் இல்லாத சந்திரனை எங்களால் கற்பனை கூடச் செய்ய முடியாது சந்திரன்! ஆடாமல், பாடாமல், ஓடாமல் நீ இருக்கவே மாட்டாய். நாங்கள் தவித்தோம். கலங்கி நின்றோம். ஆனால் நீ கலகலப்பாக இருந்தாய். உனது நிலை உனக்குத் தெரிந்த பின்பும் உற்சாகமாக இருந்தாய்.

சந்திரன், நீ வைத்தியசாலைக் கட்டிலிலிருந்துகொண்டே "நான் இங்கையும் அரசியல் வேலை செய்யிறன். இங்கு வருகிற தாதிகளுக்கும், வைத்தியர்களுக்கும், ஏன் என்னை இந்தக் கதவுகளால் எட்டிப் பார்க்கும் ஒவ்வொருவருக்கும் இந்த மண்ணில் ஒரு போராட்டம் ஏன் நடக்கிறது எனச் சொல்லிக்கொண்டிருக்கிறேன்" என்றாய். உண்மைதான். நீயிருந்த – சோகம்பாடும் அந்த – வைத்தியசாலைகூட கலகலப்பாக மாறிப்போனது.

சந்திரன் நடக்கத் தேவையில்லை. அவன், இருந்தாலே போதும். போராடுவான் – போராட்டத்திற்குப் பங்களிப்பான் என எங்கள் மனங்கள் எண்ணிக்கொண்டன.

அதன் பின்பு

நீயும் உனது தோழர்களும் வைத்திய வசதியைத் தேடிக் கடலில் பயணம் போனதாகக் கேள்விப்பட்டோம். உண்மையில் உங்களுக்கு என்ன நடந்தது என்பது எங்களுக்குத் தெரியாது. கடலிற்குள் தோன்றிய சிங்கள மிருகங்கள் உங்களைக் கவிட்டிருக்கும். உனக்கு நீந்தத்தெரியும். நீ கைகளால் நீந்த முயன்றிருப்பாய். வழங்காத உனது கால் உன்னைக் கீழே கீழே இழுத்திருக்கும். கடல் உன்னை மூட ஒரு கணம் தயங்கியிருக்கும். மூடிய பின்பும் ஏற்றுக்கொள்ள முடியாமல் குமுறி இருக்கும். வன்னி மக்களின் மனங்கள் கொந்தளித்ததைப் போலவே, கடலும் உன்னை அணைத்த பின்பு வேதனை தாளாது கொந்தளித்திருக்கும்.

–தோழர்கள்

## சத்ஜெய-3 சிறிலங்கா இராணுவ நடவடிக்கையை எதிர்த்து களமாடி வீரச்சாவடைந்த மாவீரர்களில் எமக்குக் கிடைக்கப் பெற்ற விபரங்கள்

### 24-09-96 அன்று வீரச்சாவடைந்த மாவீரர்கள்

1) ஜெயவாணன் (மகாலிங்கம் பவானந்தன், மட்டக்களப்பு)
2) பூங்கன்னா (வடிவேல் சதீஸ்குமார், மட்டக்களப்பு)
3) நல்லவன் அல்லது சிறிகரன் (அருணாசலம் ரட்ணம், மட்டக்களப்பு)

### 26-09-96 அன்று வீரச்சாவடைந்த மாவீரர்கள்

4) புவன் (கதிர்காமத்தம்பி நாகேசன், மட்டக்களப்பு)
5) துறையான் (சங்கரப்பிள்ளை சத்தியசீலன், மட்டக்களப்பு)
6) குணநேசன் (கோபால் மேகராசா, மட்டக்களப்பு)
7) தயாமுதன் (செல்லத்தம்பி குமார், மட்டக்களப்பு)
8) மாசிலம்பரன் (வைரமுத்து நரேந்திரன், மட்டக்களப்பு)
9) திருபரன் (திருமாறன் நாகேந்திரன், மட்டக்களப்பு)
10) பாலையா (வேலாயுதம் பிரபாகரன், மட்டக்களப்பு)
11) சிவகுரு (நாதன் வீரசிங்கம் திருச்செல்வம், மட்டக்களப்பு)
12) தயாகரன் (நல்லையா புவனேந்திரன், மட்டக்களப்பு)
13) செம்பியன் அல்லது சுபேந்திரன் (ஆறுமுகம் பாஸ்கரன், கிளிநொச்சி)

### 28-09-96 அன்று வீரச்சாவடைந்த மாவீரர்கள்

14) ஜெகநாதன் (சின்னத்தம்பி தவராசகாந்தன், மட்டக்களப்பு)
15) ஆரியன் (தங்கராசா உதயகுமார், திருகோணமலை)
16) மதிவண்ணன் (நடராசா சுதாகரன், யாழ்ப்பாணம்)
17) ஈழவன் (ராசையா கனகசுந்தரம், வவுனியா)
18) கேசவன் (சின்னக்குட்டி பேரின்பநாதன், யாழ்ப்பாணம்)
19) யோகநாதன் (சங்கரத்தம்பி திருகுமார், மட்டக்களப்பு)
20) செம்பியன் அல்லது ராமு (கார்மேகன் தயாபரன், முல்லைத்தீவு)
21) குன்றவேந்தன் (புஸ்பராசா பிரகாஸ், யாழ்ப்பாணம்)
22) விடுதலை (கணேசமூர்த்தி பார்த்தி, யாழ்ப்பாணம்)
23) கலைவண்ணன் (நாகமுத்து மோகனராஜ், யாழ்ப்பாணம்)
24) கலைவண்ணன் (ஜெயமோகன் சுதர்சன், யாழ்ப்பாணம்)
25) ராசன் (வல்லிபுரம் மனோதாசன், யாழ்ப்பாணம்)
26) ஆதிவீரன் (சுரேஸ்கண்ணா விநாயகமூர்த்தி, யாழ்ப்பாணம்)

### 29-09-96 அன்று வீரச்சாவடைந்த மாவீரர்கள்

27) எழில்குமாரன் (துரைராசா கந்தசாமி, யாழ்ப்பாணம்)
28) குரலமுதன் (ராஜேந்திரம் ஜெயகுமார், யாழ்ப்பாணம்)
29) சொல்வளவன் அல்லது வேணு (சிவசம்பு விக்னராஜா, யாழ்ப்பாணம்)
30) ஜெயசுதன் (சண்முகராசா சுதாகரன், கிளிநொச்சி)
31) தமிழ்மாறன் அல்லது அழகன் (தியாகராசா சத்தியநாயகம், யாழ்ப்பாணம்)
32) வில்லவன் (வேலுப்பிள்ளை செல்வன், யாழ்ப்பாணம்)
33) மாயவன் (சிவலிங்கம் சதீஸ்குமார், பரந்தன்)
34) தூயவன் (யோகராசா விஜயகுமார், திருகோணமலை)
35) திருமாறன் (பரஞ்சோதிநாதன் அருட்செல்வன், யாழ்ப்பாணம்)

### 30-09-96 அன்று வீரச்சாவடைந்த மாவீரர்கள்

36) பிரியன் (தெய்வேந்திரன் கமலரூபன், யாழ்ப்பாணம்)
37) சித்தார்த்தன் (குணபாலன் அன்பழகன், திருகோணமலை)
38) விஜயகாந்தன் (கிருஸ்ணபிள்ளை காண்டீபன், மட்டக்களப்பு)
39) பிரியா அல்லது கலைவாணி (சின்னத்துரை நளினி, யாழ்ப்பாணம்)
40) யசோ அல்லது மலரவன் (கந்தையா ஜீவரட்ணம் யாழ்ப்பாணம்)
41) பிறைசூடி (வேலாயுதம் ஆறுமுகம், மட்டக்களப்பு)
42) குணாளன் (சிவதாஸ் பாலச்சந்திரன், யாழ்ப்பாணம்)

### 01-10-96 அன்று வீரச்சாவடைந்த மாவீரர்கள்

43) சங்கீதா (நாகலிங்கம் சசிகலா, யாழ்ப்பாணம்)
44) மருதவாணன் (பூபாலசிங்கம், யாழ்ப்பாணம்)
45) தமிழரசன் (பாக்கியராஜா ஜெகதீஸ்வரன், மட்டக்களப்பு)
46) வதனகுமார் (சின்னத்துரை, உதயகுமார், மட்டக்களப்பு)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பேரியோரை வியத்தலும் இலமே!

## -தோற்றத்தில் பெரியவனை போற்றுதலும், சிறுமையானவரை பழித்தலும் அறியாமையின் வெளிப்பாடு-

புறநானூற்றில் ஒரேயொரு பாடலை மட்டும் பாடி உலகப் புகழ் பெற்ற புலவர் ஒருவர் இருக்கிறார். புலவரது பெயர் தெரியாதவர்களுக்குக் கூடப் புலவர் பாடிய பாடலின் முதல் இரண்டு வரிகளைத் தெரிந்து வைத்திருக்கிறார்கள்.

"யாதும் ஊரே, யாவரும் கேளீர்,
தீதும் நன்றும் பிறர் தர வாரா"

என்பதே அந்தப் பாடலின் முதல் இரண்டு வரிகளாகும்.

பலருக்கு முதல் வரிதான் பாடம். இரண்டாவது பாடமில்லை.

மொத்தம் பதின்மூன்று அடிகள் கொண்டது இப்பாடல். கணியன் பூங்குன்றனார் பாடியது.

இந்தப் பாடலைவிட நற்றிணையின் 226ஆம் செய்யுளும் இவர் பாடியதாக வழங்கப்படுகிறது.

கணிதத்தில் வல்லவராய் இருந்த காரணத்தால் "கணியன்" என்னும் அடைமொழி இவர் பெயருக்கு முன் வந்துவிட்டது.

**இலமே, சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே!**

எந்த ஊராய் இருந்தாலும் அந்த ஊர் எம் ஊரே! யாராக இருந்தாலும் அவர் எம் சொந்தக்காரர்களே! தீமையும், நன்மையும், நோதலும் அது தீர்தலும் (தணிதலும்) பிறரால் வருகின்றனவேயன்றி, பிறர்தந்து வருவதன்று.

சாதல் என்பதும் இவ் உலகிற்கு புதியதன்று. பழைய செய்தி தான். வாழ்தல், இனிது என மகிழ வேண்டாம். அதேநேரம், அதனை வெறுத்துத் துன்பம் தருவது என்று ஒதுக்கவும் வேண்டாம்.

மின்னலுடன் மழையையும் பெய்விப்பதோடு நின்றுவிடாது பெரிய கல்லை அலைத்து ஒலி செய்யும் பேரியாற்று நீரின் வழிச் செல்லும் தெப்பம் போன்று, இந்த அரிய உயிரானது ஊழ்வினைப்படியே கரைசேரும் என்பதைத் துறந்தோர் மூலமாக அறிந்தோம்.

எனவே, செல்வம் இருப்பதை வைத்துக் கொண்டு ஒருவரை மதிக்கவும் மாட்டோம். சிறியவரை இகழவும் மாட்டோம். உயர்ந்த ஒழுக்கம் ஒன்றையே போற்றி நிற்போம்.

புலவரின் கோட்பாட்டை ஆங்கிலத்தில் (Moderation) அதாவது மிதவாதம் என்று சொல்வார்கள்.

இரண்டு துருவம் போல் எதிர் எதிர் நிற்காமல் நடுவழியைப் பின்பற்ற வேண்டும் என்பதுதான் புலவர் சொல்லும் தத்துவம்.

ஆனால், பாடலின் மையக் கோட்பாடு ஊழ்வினையின் வலிமையை வற்புறுத்துவதுதான்.

நான் விரும்புவது இந்தப் பாடலின் கடைசி இரண்டு அடிகள்.

பெரியோரை வியத்தலும் இலமே!
சிறியோரை இகழ்த்தல் அதனிலும் இலமே!

கணியன் பூங்குன்றனாரின் இந்தக் கருத்தை வள்ளுவப் பெருந்தகையாரும் எடுத்து விளக்கியிருக்கிறார்.

உருவுகண்டு எள்ளாமை வேண்டும்
உருள்பெருந்தேர்க்கு அச்சாணி அன்னார்
உடைத்து

(குறள் 677)

உருள் பெருந்தேர்க்கு அச்சு ஆணிபோல செயல் வலிமை உடையவர் உலகத்தில் உள்ளனர். அதனால் அவரை வடிவின் சிறுமை கண்டு இகழக்கூடாது.

திருக்குறள் தமிழ்மறை. இதன் காரணமாகத்தான் அதனை ஐந்தாவது வேதம் என்று அழைக்கிறார்கள்.

இந்தப் புலவர்களது வாக்கில் அரசியலும் இருப்பது காரணமாகவே, அவர்களது செய்யுள்களுக்கு விரிவான அறிமுகம் தேவைப்பட்டுவிட்டது.

இலக்கியத்தில் அரசியலும், அரசியலில் இலக்கியமும் இருப்பது புதினமான சங்கதி இல்லை.




ஒரு பெரிய வல்லரசாக இருந்த நாட்டின் படை "தலை தப்பினது தம்பிரான் புண்ணியம்" எனத் தலைதெறிக்க ஓடிக் கொண்டிருக்கிறது.

புராணங்கள், இதிகாசங்கள், நாவல்களில் வரும் கற்பனைக் கதைகளை விட ரஸ்யாவிற்கும் செச்சினியாவிற்கும் இடையிலான போரின் முடிவு அதிசயமாக இருக்கிறது. இன்றிலிருந்து இன்னும் நூறு, இருநூறு ஆண்டுகளுக்குப் பின் இந்தப் போர் பற்றிய வரலாற்றைப் படிப்பவர்கள் சின்னம் சிறு நாடான செச்சினியா, பென்னம் பெரிய நாடான ரஸ்யாவை புறமுதுகு காட்டச் செய்த வீரத்தை நம்பமாட்டார்கள்.

# சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே!!

சங்ககாலப் புலவர்களின் சிந்தனைக்கு இந்தப் பாடல் அருமையான எடுத்துக் காட்டு. முதல் இரண்டு அடிகளைப் போலவே எஞ்சிய பதினொரு அடிகளும் சிந்தனைக்கு விருந்து படைப்பதாகும். எனவே, முழுப்பாடலையும் கீழே தருகிறேன்.



செச்சினியப் போராளி

யாதும் ஊரே, யாவரும் கேளீர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவது அன்றே, வாழ்தல்-

இனிது என மகிழ்ந்தன்றும் இலமே
மின்னொடு வானம் தண்துளி தலைஇ,
ஆனது கல்பொருது இரங்கும் மல்லற்
பேர்யாற்று நீர்வழிப் படுஉம் என்பது
திறவோர்

காட்சியின் தெளிந்தனம் ஆகலின்,
மாட்சியின் பெரியோரை வியத்தலும்

**ரஸ்யாவுக்கு செச்சினியாவில் நிகழ்ந்ததையும் சிறிலங்காவுக்கு தமிழீழத்தில் நிகழப்போவதையும் இக் கருத்து நன்றாக விளக்கும்.**

அண்மைக் காலமாக உலக வல்லரசுகள் இரண்டில் ஒன்றான ரஸ்யா, உலக அரங்கில் கொடி கட்டிப் பறந்த நாடு.

ரஸ்யா தும்மினால் அமெரிக்காவுக்கு தடிமன் பிடிக்கும் என்று கூட வேடிக்கையாகச் சொல்வதுண்டு.

ரஸ்யாவின் செஞ்சேனை (Red Army) என்றால் பல நாடுகளுக்கு குலை நடுக்கம். அடி வயிற்றைக் கலக்கும்.

இரண்டாவது உலகப் போரில் அன்றைய சோவியத் நாட்டின் மீது படையெடுத்த கிட்லரின் நாசிப் படையைச் செஞ்சேனை புறம் கண்டது மட்டும் அல்லாமல், யேர்மனியின் தலைநகரான பேர்லின் வரை துரத்தி வந்து அடித்தது.

பேர்லினுக்குள் செஞ்சேனை புகுந்து விட்டது, இனித் தப்புவதற்கு வழியில்லை என்ற கட்டம் வந்த போது தான் கிட்லர் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டான்.

நக்கீரன்

அத்தனை வீர, தீர, பராக்கிரமம் கொண்ட ரஸ்யாவின் செஞ்சேனைதான், இப்போது செச்சினியாவில் பலத்த அடிவாங்கி வீரத்தைக் களத்தில் போட்டு வெறுங் கையோடு அங்கிருந்து வெளியேறத் தொடங்கியுள்ளது.

செச்சினியா ஒரு சுண்டங்காய் பருமனுள்ள நாடு. உலகப்படத்தில் பூதக்கண்ணாடி வைத்துப் பார்த்தாலும் கண்ணுக்கு இலேசில் தெரியக்கூடிய நாடல்ல.

மக்கள் தொகையும் அப்படித்தான். எண்ணி மொத்தம் 12 இலட்சம். இதில் மூன்றிலொரு பகுதியினர் ரஸ்ய இனத்தவர்.

சோவியத் நாட்டின் சர்வாதிகாரியாக விளங்கிய ஸ்டாலின் காலத்தில் இலட்சக்கணக்கான செச்சினியர்கள் சைபீரியா பாலைவனத்திற்கு வலுக்கட்டாயமாக அனுப்பி வைக்கப்பட்டார்கள்.

ஸ்டாலின் மறைவுக்குப் பின்னரே (1953) இவர்கள் மீண்டும் செச்சினியாவில் குடியமர்த்தப்பட்டார்கள்.

செச்சினியாவின் நிலப்பரப்பு 6,060 சதுர மைல்கள் மட்டுமே. ஆனால், மலைப்பிரதேசம் – கெரில்லாப் போர் முறைக்கு ஒப்பான இடம்.

ஜார் மன்னர்கள் காலந்தொட்டு செச்சினியா தனது விடுதலைக்கும் சுதந்திரந்திற்கும் போராடி வந்துள்ளது.

தொடர்ச்சி16 ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





மேஜர் அப்துல்லா



லெப். கேணல் குமரப்பா



லெப். கேணல் புலேந்திரன்



கப்டன் கரன்

# தீருவில் வெளியில் தியாக தீபங்களான

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றுச் சக்கரம் மிக வேகமாகச் சுற்றிய காலப்பகுதி அது. 29-07-1987 மாலை 6.15 மணிக்கு தமிழீழ தேசத்தில் இந்திய இராணுவத்தினரை ஏற்றி வந்த முதல் விமானம் தரையிறக்கப்பட்டது. 05-10-1987 பிற்பகல் 5.05 மணிக்கு பலாலி இராணுவ முகாமில் புலேந்திரன், குமரப்பா, அப்துல்லா, மிரேஷ், நளன், அன்பழகன், ஆனந்தக்குமார், றெஜினோல்ட், பழனி, கரன், தவக்குமார், ரகு, தமீம், கருணாகரன், தாஸ், செல்வா, சிவகுமார் ஆகிய 17 போராளிகள் சயனைற் உட்கொண்டனர். இவர்களில் முதல் 11 பேரும் உடனேயே வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர். ரகு ஆபத்தான நிலையிலிருந்து அடுத்த நாள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டான். வீரச்சாவைத் தழுவிக்கொண்ட புலேந்திரன் மணமுடித்து இருமாதங்கள்தான் - குமரப்பா மணமுடித்து ஒரு மாதம் - கரன் இரு குழந்தைகளின் தந்தை. (உயிர் பிழைத்த ஏனைய ஐவரும் நீண்ட கால சித்திரவதையின் பின் விடுவிக்கப்பட்டனர்.)



கப்டன் பழனி



கப்டன் மிரேஷ்

தமிழீழப் போராட்டத்தின் மூத்த தளபதிகளும் போராளிகளும் இந்திய-இலங்கை அரசுகளின் கூட்டுச் சதியால் கைதாகி கொழும்புக்கு அழைத்துச் செல்ல முற்பட்ட போது, எதிரியின் கபட நாடகத்தை அம்பலப்படுத்தி விடுதலைப் போராட்டத்தில், கொல்லும் சயனைட் வில்லையை மகிழ்வுடன் உண்டு, தம் உடல்களைத் தாயக மண்ணிற்கு உரமாக்கினார்கள்.

வீரமரணமடைந்த லெப். கேணல் குமரப்பா யாழ் பிராந்தியப் பொறுப்பாளர். லெப். கேணல் புலேந்திரன் திருகோணமலை மாவட்டப் பொறுப்பாளர். இந்த வீரவேங்கைகள் தமது ஏனைய

> காலெடுத்துப் பாரதத்துப் பாவியர்கள் வந்தார் - எங்கள்
> கண்ணெதிரே பன்னிரெண்டு வேங்கைகளைக் கொன்றார்
> நெஞ்சினிலே நாங்கள் அன்று தீயை மூட்டினோம் - அந்த
> நெருப்பினிலே வந்த பகைப் பேயை ஓட்டினோம்

தோழர்களுடன் இயக்கக் கொள்கைக்கு அமைய எதிரியிடம் உயிருடன் பிடிபடாது தம்மைத் தாமே அழித்து வீரமரணம் எய்தினார்கள்.

"எமது இயக்க வீரர்கள் கொள்கைக்காக உயிரையும் கொடுப்பார்கள்" என்று தியாகி திலீபன் கூறியதை இந்த வீரவேங்கைகள் தம்மைத்தாமே அழித்து நிரூபித்துக்கொண்டார்கள்.



கப்டன் ரகுவப்பா



கப்டன் நளன்

இந்நிகழ்வு தமிழீழப் போராட்டத்தின் முக்கியமான திருப்புமுனையாகும். அத்துடன் தமிழீழப் போராட்டத்திற்கு உத்வேகம் அளித்து புத்துயிர் பெறச் செய்தது.

திலீபன் கூறியது போல் "என்று தணியும் எங்கள் சுதந்திரதாகம்" என்ற பாரதியின் வரர்த்தைகள் வெற்றி கண்டு, எமது நாடு எமது கரங்களில் முழுமையாகக் கிடைக்கும் வரை, இப்படியான சோகமான வீரவரலாறுகள் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

தமிழ்த் தேசிய இனத்தின் பூரண விடியலுக்காக உறுதிமிக்க இலட்சிய வேங்கைகளை நாம் இழந்துகொண்டிருக்கும் இவ்வேளையில், அனைத்து மக்களும் விடுதலைப் போராட்டப் பாதையில் உறுதியுடன் அடியெடுத்துவைக்குமாறு உரிமையுடன் வேண்டுகிறோம். தமிழ் மக்களின் எதிர்காலத்தைப் பிரகாசமாக்குவதுடன், எதிரியிடம் உயிருடன் பிடிபடக்கூடாது என்ற மரபுக்கிணங்க மகிழ்ச்சியுடன் மரணத்தை ஏற்று தீருவில் தீயில் தியாக தீபங்களான வீரவேங்கைகளுக்கு எமது வீரவணக்கத்தை செலுத்துவதோடு, அவர்களின் இலட்சியப் பாதையில் இறுதிவரை முன்னேறுவோமாக....!

## பன்னிரு வேங்கைகளின் 9ஆம் ஆண்டு நினைவாக....



லெப். அன்பழகன்



2ம் லெப். ஆனந்தக்குமார்



2ம் லெப். றெஜினோல்ட்



லெப்.தவக்குமார்

www.tamilarangam.net



# லண்டன் சர்வதேச மாநாட்டில்...

ஆணித்தரமாக எடுத்துரைத்தனர்.

தமிழ் மக்களைத் தண்டிக்கும் நோக்கோடு உணவுகள் – மருந்துகள் என்பவற்றின் மீது சிறிலங்கா மேற்கொண்டு வரும் தடைகள் ஜெனிவா மரபு சாசன மீறல்களாக உள்ளன எனச்



சுட்டிக்காட்டிய பேச்சாளர்கள் ஒவ்வொரு வரும் பாதிக்கப்பட்டுள்ள தமிழ்ப் பிரதேசங்களுக்கான மனித நேய உதவிகளின் தேவைகளை வற்புறுத்தினர். இவைகள் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், சர்வதேச அரசுகள் என்பவற்றின் வழங்கல்களாக அமைய வேண்டியதன் அவசியமும் தேவையும் நன்கு விளக்கப்பட்டது.

இதைப் போலவே சிறிலங்காவின் போர் நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ்ப் பிரதேசங்களுக்கு சர்வதேச தகவல் – செய்தி சேகரிப்பவர்களின் நேரடி அனுமதியின் தேவையும் எடுத்து நோக் கப்பட்டது. சர்வதேச பத்திரிகையாளர், ஒலி–ஒளி பரப்புச் செய்தி சேகரிப்பாளர்கள் ஆகியோரின் மூலமே உலகம், போரால் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களின் உண்மை நிலைகள் குறித்து தெரிந்து கொள்ள முடியும் என்பதனை எல்லோரும் சுட்டிக் காட்டினர். இதன் அடிப்படையில் சிறிலங்கா அரசின் மீது இவைகளை நிறைவு செய்வதற்கான செயற்பாடுகளை அனுமதிக்குமாறு சர்வதேச நாடுகள் – சர்வதேச அரசுகள் அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டுமென மாநாட்டுப் பேச்சாளர் அனைவரும் அழைப்பு விடுத்தனர்.

மேலும், மாநாடு – ஆக்கிரமிக்கப்பட்ட தமிழ்ப் பகுதிகளில் இருந்து சிறிலங்கா அரசு தனது படைகளை விலக்கிக் கொள்ளும் செயற்பாட்டின் மூலம் அமைதியான முறையில் அரசியல் தீர்வொன்றை ஏற்படுத்துவதற்கான இரு தரப்பு பேச்சுவார்த்தைகள் மூன்றாவது நாடு ஒன்றின் மத்தியஸ்தத்தினூடாக ஆரம்பமாவதற்கான சூழலை உருவாக்கும்படி கோரியது.

## பிரித்தானிய - சர்வதேசப் பேராளர்கள் பங்கேற்பு

பிரித்தானிய நிழல் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் டெரெக் பெட்செட் (Derek Fatchett MP), பாராளுமன்ற உறுப்பினர்கள் பி. காரா (P. Khara MP), றொபேர்ட் கியூஸ் (Robert Hughes MP), ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் கிறிஸ்டின் ஒடி (Christine Oddy MEP), எல்சல்வடோர் பாராளுமன்ற உறுப்பினர் சிக்பிரீடோ றெய்ஸ் (Sigfrido Reyes MP), இந்திய மாநில சட்டசபை உறுப்பினர் பேராசிரியர் தீரன், தமிழ்நாடு பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் கலாநிதி ராமதாஸ் ஆகியோர் உட்பட பல சர்வதேசப் பேராளர்கள் இந்த சர்வதேச மாநாட்டில் கலந்து சிறப்பித்தனர்.

தமிழீழத்தில் இருந்து கத்தோலிக்கர்களின் குரு முதல்வர் அருட்திரு. எஸ். ஜே. இம்மானுவல் அவர்கள் "சத்தியம் எங்களை விடுவிக்கும்" எனும் தலைப்பில் ஆய்வுரை ஒன்றை நிகழ்த்தினார்.

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம்: சுய நிர்ணய உரிமைக்கான சட்டபூர்வ போராட்டம் என்ற தலைப்பில் ஒக்ஸ்போர்டைச் சேர்ந்த சு.யோ. பற்றிமாகரன் ஒரு ஆய்வுக் கட்டுரை ஒன்றை வாசித்தார்.

பிரபல நூலாசிரியர் திரு. ஏட்ரியன் விஜேமானே, நேபாளத்தைச் சேர்ந்த கைல் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த சூரியா சுபேதி, தென்னாபிரிக்காவைச் சேர்ந்த திரு. கோபால் வீரபத்திரன், சிறிலங்கா நவசமாச சமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ணா, முன்னாள் ரூபவாகினி தலைவர் வசந்தராஜா, செல்வி மதுரா ராஜநாயகம் ஆகியோர் ஆய்வுக் கட்டுரைகளாக தமது உரையை நிகழ்த்தினர். திரு. ஜேம்ஸ் கரன், திரு. சி. சிதம்பரப்பிள்ளை, கலாநிதி அர்யுனா சிற்றம்பலம், மருத்துவர் என். சச்சிதானந்தன் ஆகியோர் அமர்வுகளுக்குத் தலைமை தாங்கினர்.

இலண்டன் 'பிரண்ட்' நகர மேயர் லதா பட்டேல், 'பிரண்ட்' நகர பிரித்தானிய தொழிற்கட்சி வேட்பாளர் பரி கார்டினர் ஆகியோரும் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர். திரு. மகரசிங்கம், திரு. தாமோதரம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இந்தச் சர்வதேச மாநாட்டில் பின்வரும் தீர்மானங்கள் ஏகோபித்த முறையில் மேற்கொள்ளப்பட்டன.

1) ஆதிகாலம் முதலாக சிங்கள மக்களும் தமிழ் மக்களும் இலங்கைத் தீவின் ஆதிக்குடிகளாகத் திகழ்வதும் அல்லாமல் வித்தியா சமான மொழி, மத, கலாச்சார, பழக்கவழக்கங்களைத் தமக்குத் தனித்தனியாக சொந்தமாகக் கொண்டு குறிக்கப்பட்ட புவியியல் எல்லைகளில் வாழ்ந்து வருகின்றனர். சிங்களவரும் தமிழர்களும் இரு வேறுவேறான தன்மைகளை உடைய தேசமக்கள் என்பதற்கான சகல நிபந்தனைகளையும் பூர்த்தி செய் கின்றனர்.

2) 1948இல் தமிழ் மக்களால் சிங்கள மக்களுடன் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சம த்துவத்துடன் வாழ்வதற்கு எடுகசுப்பட்ட சகல விதமான முயற்சிகளும் சிங்கள அரசுகளினால் தொடர்ச்சியாக மூர்க்கத்தனமான முறையில் மறுக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டு வந்துள்ளன. அமைதியான முறையில் இணையாக வாழ்வதற்கான சகல முயற்சிகளும் இயலாமல் போய்விட்டதினால் தமிழ் மக்கள் தமிழ் பிரதேச எல்லைகளில் இறைமையை நிறுவிக் கொள்வதற்கான தமது சுதந்திர விருப்பை தெரிவிப்பதற்கான குடியொப்பமாக 1977 பொதுத் தேர்தலை பிரகடனப்படுத்தி ஜனநாயக ரீதியான முறையில் தமது அதிக எண்ணிக்கையான வாக்கு களை அளித்து சம்மதத்தை வெளிப்படுத்தினர்.






தமிழக பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர். இராமதாஸ்

3) தமிழ் மக்கள் தமது சுயநிர்ணய உரிமையினை பயன்படுத்தி சமத்துவமுள்ள வர்களாக வாழ்வதற்கு முயற் சிக்கையில் அவர்களின் தமிழ் பிரதேசங்களில் இராணுவ ஆக்கிர மிப்புக்கள் மூலம் மேற்கொள்ள ப்பட்டுவரும் ஒடுக்கு முறைகள் சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட வழமைகள், ஜனநாயகத் தத்துவங்கள், மனித நேயச் சட்டங்கள் என்பவற்றை வன்முறைக்கு உள்ளாக்குவதாக அமைகிறது. இந்த சகித்துக் கொள்ள முடியாத தேசிய ஒடுக்குமுறைக்கும் காட்டு மிராண்டித்தனமான அரச பயங்கரவாதத்திற்கும் எதிராகத் தங்களைப் பாதுகாத்துக் கொள்வ தற்காக தமிழ் மக்கள் மேற்கொண்டு வரும் ஆயுதப் போராட்டம் (மேற்கூறிய காரணங்களால்) நீதியானதும் சட்டபூர்வமானதாகவும் அமைகிறது.

4) தமிழர்களின் தேசிய முரண்பாட்டுக்கு அரசியல் தீர்வுதான் தேவையாக உள்ளதே தவிர இராணுவத் தீர்வு அல்ல. "அமைதிக்கான போர்"" என்ற பெயரில் சிறிலங்கா அரசு, தமிழ் மக்கள் மேல் நடாத்தும் ஆக்கிரமிப்பு இராணுவ நடவடிக்கைகள் நேர்மை யற்றதும் - மனிதத் தன்மையற்றதும், ஏற்றுக் கொள்ள முடியாததுமானது. இந்தப் போர் மனித அவலங்களையும், ஜனநாயக மனித உரிமை மீறல்களையும் விளைவுகளாக ஏற்படுத்தி இலங்கைத்தீவு

தொடர்ச்சி 2ம் பக்கம்...



www.tamilarangam.net



# தாயகம் நோக்கிய பயணம்



## முதலாம் பாகம்

### அத்தியாயம் எட்டு

(தொடர்ச்சி)

அகதியானவன் பலஸ்தீன புவியியல், சரித்திரம் சம்பந்தமான விடயங்களில் ஆயிரக்கணக்கான கேள்விகளுக்குப் பதிலளிப்பதன்மூலம், தான் அங்கு பல வருடங்களாகத் தங்கியிருந்ததை நிரூபிக்க முயலவேண்டும்.

இப்படியான ஒரு 'வேட்பாளன்" வெற்றிகரமாக இந்தப் பயிற்சி நெறியை முடித்ததும், பால்மாக் அவன் தப்பித்துச் செல்ல வழிசெய்யும், அல்லது ஒழுங்கு செய்யும். வழமையாகப் பிள்ளைகளின் வளாகத்திலிருந்து, அல்லது சுரங்கம் மூலம், சலாமிஸ்ஸின் குன்றிலிருக்கும் வெள்ளை மாளிகைக்குத் தப்பிச் செல்வார்கள். அங்கிருந்து பலஸ்தீனத்திற்குள் கடத்தப்படுவார்கள். இருவர், மூவர் கொண்ட குழுக்களாக இவ்வகதிகள் பலஸ்தீனத்திற்குள் அனுப்பப்பட்டனர்.

பிரிட்டிஷ் புலனாய்வாளர்களுக்கு, பல முறையில்லாத காரியங்கள் சிறுவர் பிரிவினுள் நடைபெறுவது தெரியவேயில்லை. முறைக்குமுறை, வெளியிலிருந்துவரும் ஆசிரியர்கள், வேலையாட்களிடையே தங்களுக்குத் தகவல் கொடுப்போரையும் கலந்து அனுப்பி வைத்துப் பார்த்தனர். ஆனால், போர்க்காலச் சித்திரவதைத் தடுப்பு முகாம் வாசமும், போலந்தின் யூத குடியிருப்பு வாசமும் ஒரு இரகசியங்களை வெளிவிடாத சந்ததியொன்றை உருவாக்கி விட்டிருந்ததனால், ஊடுருவல் செய்வோர் ஓரிரு நாட்களில் கண்டுபிடிக்கப்பட்டனர்.

> பாடசாலை வகுப்பறையொன்று உண்மையில் பால்மாக் தலைமையகமாகும். ஆசிரியருடைய மேசையின் உள்ளே, பலஸ்தீனத்துடன் தொடர்பு வைத்துக் கொண்டிருக்கும் ரேடியோ தொலைத் தொடர்பு கருவிகள் இருந்தன. நிலத்தில் பதிக்கப்பட்டிருந்த பலகைகளின் கீழ் இராணுவப் பயிற்சி நெறிகளுக்கான ஆயுதங்கள் ஒளித்து வைக்கப்பட்டிருந்தன. இங்கு போலி அனுமதிச் சீட்டுகளும், ஆவணங்களும் தயார் செய்யப்பட்டன.

அரி தன் பரிசீலனையை, பாடசாலைக் கட்டிடத்தில் முடித்துக்கொண்டான். பாடசாலை வகுப்பறையொன்று உண்மையில் பால்மாக் தலைமையகமாகும். ஆசிரியருடைய மேசையின் உள்ளே, பலஸ்தீனத்துடன் தொடர்பு வைத்துக் கொண்டிருக்கும் ரேடியோ தொலைத் தொடர்பு கருவிகள் இருந்தன. நிலத்தில் பதிக்கப்பட்டிருந்த பலகைகளின் கீழ் இராணுவப் பயிற்சி நெறிகளுக்கான ஆயுதங்கள் ஒளித்து வைக்கப்பட்டிருந்தன. இங்கு போலி அனுமதிச் சீட்டுகளும், ஆவணங்களும் தயார் செய்யப்பட்டன.

போலிப் பத்திரங்களைத் தயாரிக்கும் இயந்திர சாதனத்தைப் பார்வையிட்ட அரி, திருப்தியின்றி அதிருப்தியுடன் தலையாட்டினான். "இந்தப் போலிகளைத் தயாரிக்கும் வேலை சரியான முறையில் இல்லை. நீ மிகவும் கவனக்குறைவாக வேலைகளைப் பார்க்கிறாய் ஜோஆப்."

ஜோஆப் தோள்களை உயர்த்தி விட்டுக் கொண்டான்.

"அடுத்த சில வாரங்களுக்கு எங்களுக்கு மிகத் திறமைசாலியொருவன் வேண்டும். டேவிட், இங்கேயே யாரோ கெட்டிக்காரன் இருப்பதாகச் சொன்னாயே?"

"உண்மைதான். டொவ் லண்டோ என்னும் போலந்துப் பையன். ஆனால், அவன் வேலைசெய்ய மறுக்கிறான்."

"நாங்கள் பல வாரங்கள் அவனை வேலைசெய்விக்க முயன்றோம்." ஜோஆப் தன் பங்குக்குச் சொன்னான்.

"என்னை அவனிடம் பேச விடுங்கள்" அரி சொன்னான்.

டொவ் லண்டோவின் கூடாரத்துக்குள் செல்லும்போது மற்றைய இருவரையும் வெளியே நிற்கச் சொன்னான் அரி. திடீரென எவரோ உட்புகுந்ததால் ஏற்பட்ட பதற்றத்திலும், சந்தேகத்திலும் குழம்பிக் காணப்பட்ட, அந்த நீண்ட பொன்னிறக் கூந்தலை (Blonde) உடைய அப் பையனை அரி உற்று நோக்கினான். அரிக்கு அந்தக் கண்களில் நிரம்பி வழிந்த உணர்வு..... வெறுப்பு..... நன்றாகவே தெரிந்தது. நன்றாக மடிந்திருந்த வாயையும், கோபத்தால் துடித்துக்கொண்டிருந்த உதடுகளையும் உற்று நோக்கினான். ஏராளமான தடுப்பு முகாம் வாசிகளின் முகத்தில் பதிந்துவிட்ட அந்தக் குரோதமான பார்வையும் இருந்தது.

"உன்னுடைய பெயர் டொவ் லண்டோ." அவனுடைய கண்களை உற்றுநோக்கிய அரி தொடர்ந்தான், "உனக்குப் பதினேழு வயதாகிறது. நீ போலந்துக்காரன். உனக்கு ஒரு தடுப்புமுகாம் பின்னணியுண்டு. நீ ஒரு திறமையான கள்ளக் கையெழுத்திடுபவன், போலி நோட்டுக்களைத் தயாரிப்பவன், பிரதிபண்ணக்கூடியவன். எனது பெயர் அரி பென் கானான். மொசாட் அலியா பெற்றிலிருந்து வந்திருக்கும் ஒரு பலஸ்தீனியன் நான்."

அந்தப் பையன் நிலத்தில் காறி உமிழ்ந்தான்.

"இங்கே பார் டொவ், நான் உன்னிடம் கெஞ்சப் போவதுமில்லை, உன்னை வெருட்டப் போவதுமில்லை. நான் ஒரு வியாபார ரீதியில் உன்னுடன் பேச விரும்புகிறேன். நாம் அதைப் பரஸ்பர உதவி ஒப்பந்தம் என்று கொள்ளலாம்".

சீற்றத்தோடு டொவ் லன்டோ சொன்னான்: "நான் உங்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன் மிஸ்டர் பென் கானான் அவர்களே, அந்த ஜேர்மன்காரர், பிரிட்டிஷ்காரரைப் போலத்தான் நீங்களும் எங்களை அங்கு கொண்டுபோக விரும்புவது, உங்களை அரபுக்களிடமிருந்து காத்துக் கொள்ளத்தான். என்னை ஒன்று சொல்ல விடுங்கள். நான் பலஸ்தீனம் போகத்தான் போகிறேன். ஆனால், போனதும் நான் என்னைக் கொல்ல அனுமதிக்கும் அமைப்பில்தான் சேரப்போகிறேன்."

அந்த வார்த்தைகளில் சிந்தப்பட்ட விசமத்தனமான உணர்வுகளைத் தன்னில் பிரதிபலிக்க அரி அனுமதிக்கவில்லை. தொடர்ந்தும் முன்பு கூறிய தொனியிலேயே "நாங்கள் இருவரும் ஒருவரையொருவர் நன்றாகப்புரிந்து கொண்டுவிட்டோம். நான் உன்னைப் பலஸ்தீனத்துக்குக் கொண்டு போக விரும்பும் நோக்கங்களை நீ விரும்பவில்லை. அதேபோல், பலஸ்தீனத்திற்கு நீ வர விரும்பும் நோக்கங்கள் எனக்குப் பிடிக்கவில்லை. ஆனால், ஒன்றில் மட்டும் இருவரும் ஒத்துப்போகிறோம். நீ இருக்கவேண்டிய இடம் பலஸ்தீனமே, இங்கல்ல" என்றான்.

பையனது கண்கள் குறுகிக்கொண்டன. இந்தப் பென் கானான் மற்றவர்களைப் போலல்ல எனப் புரிந்தது. "இன்னும் கொஞ்சம் அப்பால் போனால் ஒன்றுமே செய்யாமல் நீ இங்கு குந்திக் கொண்டிருப்பதால், நீ பலஸ்தீனத்திற்குப் போகப்போவதில்லை. நீ எனக்கு உதவு. நான் உனக்கு உதவுகிறேன். அங்கு போய்ச் சேர்ந்த பின் நீ என்ன செய்யப் போகிறாய் என்பது உனது சொந்த விசயம்."

டொவ் லன்டோவின் கண்கள் வியப்பினால் அடித்துக்கொண்டன. இதுதான் விசயம். எனக்குப் போலியான ஆவணங்கள் வேண்டும். அடுத்த சில வாரங்களில் மிகத் தொகையாக வேண்டும். ஆனால், இங்கிருக்கும் எமது பையன்கள் தமது சொந்தக் கையெழுத்தையே போலியாகப் போட முடியாதவர்கள். நீ எனக்காக வேலை செய்யவேண்டும் என்று விரும்புகிறேன்" என அரி சொன்னான். அரியுடைய நேரடியான அதிரடித் தாக்குதல் உத்தி, பயன்தரத் தொடங்கியது. ஏதாவது மறைமுகமான தந்திரங்கள் இந்த வேலை கொடுப்பதில் இருக்குமா எனச் சிந்திக்க நேரம் வேண்டுமென நினைக்கத் தொடங்கினான்.

"நான் இதை கொஞ்சம் யோசிக்க வேண்டும்." அவன் சொன்னான்.

"நிச்சயமாக, உனக்கு முப்பது வினாடிகள் அவகாசம் தருகிறேன்."

"நான் மறுத்தால் என்ன செய்வாய். என்னைப் பலவந்தப்படுத்துவாயா?

"டொவ் நாம் பரஸ்பரம் தேவைப்படுகிறோம். ஒன்றை மட்டும் தெளிவாகச் சொல்லி விடுகிறேன். இந்த விசயத்தில் என்னோடு ஒத்துப்போகாவிட்டால், கராஓலொஸ் தடுப்பு முகாமிலிருந்து வெளியேறப்போகும் கடைசி ஆளாக உன்னை ஆக்க என்னால் முடியும். உனக்கு முன்னால் செல்ல இருக்கும் முப்பத்தையாயிரம் பேர் சென்று முடிந்து நீ வரும்போது, உன்னிடம் அந்தக் குண்டுகளில் ஒன்றைத் தூக்கத்தானும் வலிமையிருக்குமோ தெரியாது. உன்னுடைய முப்பது வினாடிகள் முடிந்துவிட்டன."

"உன்னை எப்படி நம்புவது?"

"நான் நம்பலாம் என்று சொல்வதினால் நம்பலாம்."

ஒரு மெலிதான புன்னகை அப்பையனின் இதழ்களில் நெளிந்தோடியது. அவன் வேலை செய்ய விருப்பம் எனத் தலையாட்டினான்.

"அப்போ சரி, நீ உன்னுடைய பணிகளுக்கான கட்டளைகளை டேவிட் பென் அமியிடமிருந்து அல்ல ஜோஆப் யார்க்கோனியிடமிருந்து பெற்றுக் கொள்வாய். நீ எவருக்கும் பிரச்சினை கொடுப்பதை நான் விரும்பவில்லை. உனக்கு ஏதாவது பிரச்சினை என்றால் என்னிடம் தெரியப்படுத்து. இன்னும் அரைமணி நேரத்தில் பால்மாக் தலைமையகத்திற்கு வந்து அவர்களின் உபகரணங்களைப் பார்வையிட்டு உனக்கு மேலதிகமாக ஏதாவது விசேடமான பொருட்கள் தேவைப்பட்டால் டேவிட்டிடம் தெரிவி.

அரி திரும்பி, கூடாரத்துக்கு வெளியே, டேவிட்டும் ஜோஆப்பும் காத்துக் கொண்டிருந்த இடத்திற்குச் சென்று "அவன் இன்னும் அரை மணி நேரத்தில் வேலைக்குச் சமூகம் கொடுப்பான்" என்றான்.

டேவிட்டின் வாய் வியப்பால் விரிந்தது. ஜோஆப் மரியாதை கலந்த பார்வையை அரி மீது செலுத்தினான்.

"உன்னால் எப்படி இதைச் செய்ய முடிந்தது?"

"அது ஒரு சிறுபிள்ளை மனோதத்துவமுறை" என்ற அரி தொடர்ந்து, "நான் பாமாகுஸ்ராவுக்குப் போகிறேன். அன்றிரவு உங்கள் இருவரையும் மண்ட்றியாவின் மாளிகையில் எதிர்பார்த்திருப்பேன். செவ் கில்போஆவை உங்களோடு (Zev Cilboa) கூட்டிவாருங்கள். நான் போய்வருகிறேன். வழிகாட்டத்தேவையில்லை. எனக்கு வழிகள் பழகிவிட்டன" என்றான்.

தங்களுடைய சிநேகிதனும் திறமைசாலியுமான அரிபென் கானான், விளையாட்டு மைதானத்தை ஊடறுத்துக்கொண்டு, கழிவு அகற்றும்

**லியோன் யூரிஸ்**

இடங்களை நோக்கிச் செல்வதை, டேவிட்டும் ஜோஆப்பும் மரியாதைகலந்த வியப்போடு பார்த்துக்கொண்டிருந்தனர்.

அன்றிரவு சைப்பிரசுக்காரனான மண்ட்றியா, ஜோஆப், டேவிட், புதிதாக வந்த செவ் கில்போஆ ஆகியோரோடு தனது மாளிகையில் அரி பென்கானானுடைய வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்தான்.

அகன்ற பின்புறத்தையுடைய கலிலேயகமக்காரனான செவ் கில்போஆ ஒரு பலஸ்தீனிய பால்மாக்கினனே. யார்க்கோனியைப் போலவே, அடர்ந்த மீசையொன்றை வளர்த்திருந்த செவ்கில்போஆ இருபது, இருபத்திரண்டு வயதுடையவனாவான். கராஓலொஸ் உள்ளே வேலைசெய்து கொண்டிருக்கும் பால்மாக்

தொடர்ச்சி 18ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிறுகதை

# செட்டை கழற்றிய நாகங்கள்

**சுதாமதி**

(சிறிலங்கா இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள யாழ். குடாநாட்டில் நிகழும் அவல நிகழ்வுகளை மையமாக வைத்து இச் சிறுகதை எழுதப்பட்டுள்ளது.)

சோளகம் வீசத் தொடங்கிவிட்டது. ஆடிக் காற்று அம்மியைத் தூக்குமோ என்னவோ, ஆனால் ஆளையே தூக்கிக் கொண்டு போகும்போல் இருந்தது. புழுதிச் சுழல் தெருவை நிறைத்தபடி. அவளுக்குத் தனது மிதிவண்டியை இயக்குவது மிகுந்த சிரமத்தைக் கொடுத்தது. காற்றில் பறக்கும் வெள்ளைச் சீருடையைப் பிடித்தபடி, மிதிவண்டியை உழக்குவது இன்னும் இடைஞ்சலாக இருந்தது.

"கெதியாய்ப் போய்ச் சேர வேணும்." சுற்றும் முற்றும் கண்கள் துளாவின. அவளது விழிகளில் நடுக்கமும் ஒருவித பயப்பிராந்தியும் மண்டிக் கிடந்தது. எந்த வேலிக்குள்ளிருந்தாவது அவர்கள் புறப்பட்டு வந்து, போகின்ற சந்திக்கு குறுக்கே எதிரும் புதிருமாக நிற்கலாம். அதை நினைக்கும்போது நெஞ்சுக்குள் என்னவோ செய்தது.

காலைவேளை வேலைக்குப் போகிறவர்கள் போய்க் கொண்டிருந்தனர். கூடுதலாக இளம் வயதைத் தாண்டிய ஆண்களும் பெண்களுமாக. முன்பு மாதிரி அவ்வளவு சனநெரிசலில்லை. மாணவர்களும் மாணவியரும் ஓரிரண்டு பேர் கண்ணுக்குப் பட்டனர். வெயில் முகத்தில் பட்டது. அனேகமாக, வீதி குன்றும் குழியுமாகப் போய்விட்டது. அதற்குள் மிதிவண்டி ஏறியும் இறங்கியும் சென்றது. மனம் வெறுமையாக இருந்தது. மனதை வாள் கொண்டு

> "என்னாலை ஒண்டுமே செய்ய முடியாமல் கிடக்குது. அவரைத் தேடித் தேடி அலைஞ்சு கொண்டிருக்கிறன். ஒரு பதிலுமில்லை. எந்தச் சிறையிலோ? பிள்ளைகள் அப்பா, அப்பா எண்டு அழுது கொண்டிருக்குதுகள். என்ன செய்யிறதெண்டு தெரியாமல் கிடக்குது. ஐயோ நான் என்ன பாவம் செய்தனோ?"

அறுக்கின்ற துயரம், சாவீடு நடந்த மாதிரி. ஏன் இப்படி? ஒற்றை ஒற்றையாய் இலையுதிர்ந்து போன மரம் மாதிரி, எதன் மீதும் பற்றிலாமற் போய்விட்டது போல்.........

அன்றைய கலகலப்பு வீதியே இரண்டு படுமாப்போல சிரித்தபடி, ஊர்ப் புதினம் கதைத்தபடி, சென்ற வாழ்க்கை. எப்போதும் கூட வருகின்ற மாலதி இல்லை. இடையில் வந்து, கந்தர்மடச் சந்தியருகில் தொற்றிக் கொண்டு வருகின்ற சிறீமதியும் இல்லை. இனி இப்படித்தான், தனியே பயந்து பயந்து வரவேண்டி வருமோ? அவர்கள் வன்னியில் எந்தப் பாடசாலையிலாவது தங்களது பெயர்களைப் பதிவு செய்து படித்துக் கொண்டிருப்பார்கள். இனிச் சேர்ந்து படித்து கும்மாளமடிக்கிற அந்த வாழ்க்கையும் வரமாட்டாது. எல்லா வற்றையும் நினைத்து நினைத்து வெம்பியழுகின்ற மனதைக் கட்டுப்ப டுத்துவது அவளுக்குப் பெரும்பாடாக இருந்தது. இனி அந்த வாழ்க்கை எப்போது திரும்பும்? இனிதாகக் கண் மலரும் அமைதியான விடிகாலையைப் போன்ற அந்த அழகு அற்றுப்போய் விட்டதோ?

அந்தத் தெருவோரம், வளைவாக இருந்த மாடிக் கட்டிடம் எறிகணை விழுந்து முண்டமாகக் கிடந்தது. அது முன்னர் பெயர் பெற்ற பலசரக்குக் கடையாக இருந்தது. எப்போதும் இலையான்கள் மொய்த்ததுபோல சனம் நிரம்பி வழிந்து காணப்படும். அதனுள்ளே தொந்தி வயிற்றுடன் தனது வேலையாட்களை விரட்டியபடி நிற்கும் முத்தண்ணை முதலாளியும்–

நல்ல நாட்கள், பண்டிகை நாட்களில் அந்தக் கடையில் நல்ல வியாபாரம் நடக்கும். விடியற்காலையில் அந்தக் கடைவீதியை கடந்துபோகும்போது, சாம்பிராணியின் மணம் காற்றிற் கரைய – மஞ்சள் நீர் தெளிக்கப்பட்ட அதன் வாசலில் நிறைந்நிருந்த சனம் – அவர்கள் எங்கோ காணமற் போயிருந்தனர்.

அவள் பள்ளிக்கூட வாசலடியிற் செல்லவும் காலைப் பிரார்த்தனைக்கான மணி அடிக்கவும் சரியாக இருந்தது. மாணவர்களும் மாணவியரும் வரிசையாகச் சென்று கொண்டிருந்தனர். மாணவர்களின் வரவு வலு குறைவாகத்தான் இருந்தது. போர் நடந்ததற்கான அறிகுறிகள் வகுப்பறையின் சுவரிலும் எரியுண்டுபோன பூமரங்களிலும் தெரிந்தது. வெளி விறாந்தைகளில் மாடுகள் சாணம் போட்டிருந்தன. இன்னும் நிறைந்துபோன மாஞ்சருகுகள், வேப்பம் சருகுகள் எல்லாவற்றிலும் அதன் பாதிப்புத் தெரிந்தது. ஏதோ அழுகிய நாற்றம் காற்றில் அள்ளுண்டு இடைக்கிடை வந்தது.

வகுப்பறைக்குச் சென்று புத்தகங்களை வைத்துவிட்டு அவளும் பிரார்த்தனைக்கு வந்தாள்.

∴ ∴ ∴ ∴

வகுப்பில் முதற் பாடம் எப்பொழுதுமே கலகலப்பானதாகவும் மகிழ்ச்சியானதாகவும் அவளுக்குத் தென்படும். அதன் காரணம், எப்போதும் முதற் பாடத்தை எடுக்கும் வகுப்பாசிரியரின் இனிமையான சுபாவம் என்பதாலோ, அல்லது காலைப் பொழுதுக்கேயுரிய இனிமையான அமைதியான சூழலில் நடைபெறுவது என்பதாலோ என்று, அவளுக்கு அதனைப் பிரித்தறிய முடியாமல் இருக்கும். இப்போது, ஏதோ சோபை யிழந்ததுபோல் அவளுக்குத் தென்பட்டது.

வளர்மதி 'ரீச்சர்' வழமைக்கு மாறாக, இன்று சிறிது சிடுசிடுப்பாக இருப்பதாகப்பட்டது. அவர் வீட்டிலிருந்து வெளிக்கிட்டு வருவதற்குத் தாமதமேற்பட்டிருக்க வேண்டும். அவசரமாக வாரிய முடிக்கற்றைகள் காற்றில் பறக்க, வியர்வைத் துளிகள் முகத்தில் வழிந்தபடி இருந்தது. வழமையாக வருகின்ற 'ரீச்சரின்' தோற்றம் "இப்படித்தான் ஆசிரியர்கள் இருக்க வேண்டும்" என்று உதாரணம் குறிப்பிடத் தோன்றும். எப்போதுமே வேலையில் அவரது 'சீரியஸ்' ஆன தன்மையும் அந்த நேர்த்தியும், அவரின் ஒவ்வொரு அங்க அசைவிலும் பளீரிட்டபடி தெரியும்.

மாலதி அவரைப் பற்றி அடிக்கடி வர்ணிப்பாள். அவரிடம் எப்போதுமே ஒட்டிக் கொண்டிருக்கின்ற அந்தச் சுறுசுறுப்பு எல்லோரையும் கவர்ந்துவிடும். மாலதி அவரின் வீட்டுக்குப் பக்கத்து வீடு என்றமையால் அவரின் குடும்பத்தைப் பற்றி மாலதிக்குத் தெரியும். இனிய அழகிய குடும்பம் அது. 'ரீச்சரின்' இரண்டு குழந்தைகளும் படுசுட்டி. வயதுக்கு மீறிய கெட்டித்தனம். 'ரீச்சர்' பள்ளிக்கூடம் விட்டுப்போகும்போது, தகப்பனுடன் அவை இரண்டும் விளையாடிக் கொண்டிருக்கும். "எப்போதும் குழந்தை மாதிரித் திரியும் அவளின் கணவர், பெரிய உத்தியோகத்திலிருப்பவர் என்று யாரும் கணிப்பிடமாட்டார்கள்.

∴ ∴ ∴ ∴

அந்த 'ரீச்சர்' தான் இன்றைக்கு இப்படி இருக்கிறார். கரும்பலகையில் நேற்று நடத்திய பாடம் அழியாமல் இருந்தது.

அவரின் குரல் உரத்துக் கேட்டது.

"சோக் எங்கை? ஒன்றுமே இருக்காது இஞ்சை."

முன்புமாதிரி இப்ப வகுப்பறை இல்லைத்தான். என்னதான் சொன்னாலும், பரணீதரன் இல்லாட்டில் இது வகுப்பாக இருக்காதுதான்.

"பரணீதரன்"

அவனை நினைக்கும்போது, அவளுக்கு இதயத்தில் எங்கோ ஒரு மூலையில் வலித்தது. எல்லாமே கலகலப்பற்றுப் போனதாக இருந்தது.

அவன் எங்கு இருப்பானோ?

எங்காவது காவலரணில், அல்லது பயிற்சியெடுத்துக் கொண்டாவது....... அவன் இருக்கின்ற மூன்றாவது வரிசையில் முதலிலுள்ள கதிரையும் மேசையும் வெறுமையாகக் கிடந்தது. அவன் இருந்த இடத்தில் ஒருவரும் இருக்க விரும்பவில்லையோ? அல்லது அதில் இருந்தால் கவலைப்பட வேண்டி வருமோ என்று நினைத்தார்களோ, தாங்காது என்பது மட்டும் உண்மை.

∴ ∴ ∴ ∴

"ஒருவரும் சத்தம் போட வேண்டாம்" என்றபடி 'மொனிற்றராய்' நிற்கும்

> அந்தக் கலவரத்துக்கு இங்கு வெறிபிடித்து, வீதியால் போய்க்கொண்டிருந்த லிங்கம் மாமாவைப் பிடிச்சுக் கொண்டுபோய் உடம்பெல்லாம் கத்தியால் சிங்கம் கீறி, சுடலை மடத்திலை பிணமாய்ப் போட்டுச் சென்ற அதே........ அந்த இராணுவம் தானே இது! மட்டக்களப்பில் கணவனுக்கு முன்னே மனைவியை வெறிகொண்டு குதறிய அதே குரூர உருவங்கள்!

அவனோடு சண்டை பிடிக்கும் அந்தப் பொழுதுகள்.......

கரும்பலகையில் பளீரிட்டபடி தெரியும் அவன் எழுத்துக்களில் அவனது திருக்குறளும்,

அவன் இல்லாமல் வகுப்பு உயிர் இல்லாமல் போய்விட்டதுபோல் இருந்தது.

வளர்மதி 'ரீச்சர்' கரும்பலகையில் கணக்கு எழுதிவிட்டு நிமிர்ந்தால், இங்காலை பரணி அவர் முன்னே கணக்கு செய்து முடித்தபடி நிற்பான். சிலவேளை அவள், அவனுக்கு முன்னே முண்டியடித்துக் கொண்டு, போட்டி போட்டுக் கொண்டுபோய் நிற்பதுமுண்டு. அந்தக்கணம் வகுப்பு ஒருமுறை சிரித்து ஓயும். எப்போதுமே அவனுக்கும்



என்னவோ? அடிக்கடி கிறீச்சிட்டபடி ஓயும் அந்தக் கதிரை. அவனை இனித்

தொடர்ச்சி 14ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சட்டவாக்கு என்பது.......

"மேற்குலக நாடுகளில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்ய வேண்டும்" என்ற முனைப்புடன் தீவிரமாகச் செயற்பட்டு வரும் சிறிலங்கா அரசுக்கு இது தொடர்பாக ஏமாற்றங்கள் கிடைத்தவண்ணம் உள்ளன. ஆயினும், பிரத்தானிய வெளிவிவகார அமைச்சரின் வருகையை பெரிய அளவில் எதிர்பார்த்திருந்த போதும் சிறிலங்காவிற்கு அவரிடம் சாதகமான பதில்கள் கிடைக்காமை வருந்தத்தக்கது. இவர்க வினால் சிறிலங்கா அரசுக்கு சில உதவிகள் செய்யக்கூடியதாக இருந்தாலும் விடுதலைப் புலிகளைத் தடை செய்யும் விடயத்தில் தம்மால் எதுவும் செய்ய இயலாது என்பதைத் தெளிவு படுத்திவிட்டார். இது குறித்து கொழும்பு வந்த பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் மல்கொம் ரிப்கின்ட் கேள்விகளுக்குப் பதில் தெரிவிக்கையில், பிரிட்டிஸ் சட்டப்படி எந்த ஒரு அமைப்பின் மீதும் நடவடிக்கை எடுக்க இயலாது. பயங்கரவாதச் சட்டத்தில், பயங்கரவாதத்திற்கு ஆதரவான தனியார் மீதே எடுக்க முடியும். அதற்கும் சான்றுகள், எமது நீதி மன்றங்களில் நிரூபிக்க தேவைப்படுகின்றது. இது எம்முடைய சட்ட நீதி எனவும் குறிப்பிட்டார்.

ஆனால், விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு மேற்கு நாடுகளில் இருந்து பெரிதளவு நிதி திரட்டப் படுவதாகவும், அதுவே இலங்கையில் புலிகள் பயங்கரவாதத்திற்கு உதவுகின்றது என்பது சிறிலங்காவின் குற்றச்சாட்டாகும். ஆகையினால், விடுதலைப் புலிகளை வெளிநாடுகளில் தடை செய்வதன் மூலம் இலங்கையிலும் புலிகளின் செயற் பாட்டைக் கட்டுப்படுத்தலாம் என்பதே சிறிலங்கா அரசின் நோக்கமாகும். ஆனால், இதற்கான முயற்சியை சந்திரிகா அரசு தற்பொழுதுதான் மேற்கொண்டுள்ளது என்பதல்ல. சந்திரிகா அரசு போரை ஆரம்பித்த காலத்தில் இருந்தே இதை மேற்கொண்டு வருகின்றது. ஆனால், அதில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டதாக இல்லை. ஆனால் தற்பொழுது மீண்டும் ஒரு முயற்சியாக, 'சர்வதேசப் பயங்கரவாதத்திற்கு எதிராக நடவடிக்கை' என்ற ரீதியில் அமெரிக்கா தலைமையில் உலகளாவிய முயற்சிகள் மேற்கொள் ளப்படவுள்ள நடவடிக்கையைத் தனக்கு சாதகமாகப் பயன்படுத்த சிறிலங்கா அரசு தீவிரமான முயற்சிகள் எடுத்து வருகின்றது. இந்த நிலையில், அமெரிக்கா மேற்கொள்ளும் நடவ டிக்கைகளுக்கு ஆதரவான நடவடிக்கை என்ற ரீதியில் தனது ஒத்துழைப்பை வழங்குவதன் மூலம் மேற்குலக நாடுகளில் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஆதரவு பெறலாம் என முனைந்தது. ஆனால் மேற்கு நாடுகளின் நிலைப்பாடுகள் சற்றுக் குழப்பம் அளிப்பனவையாக இருப்பினும்கூட சிறிலங்கா அரசின் கோரிக்கைகளை நிறைவு செய்யக்கூடியவையாக அவை இருப்பதாக இல்லை. ஒரு வகையில் பார்க்கப்போனால், மேற்குலக அரசுகளின் அரசியல்வாதிகள் சில சமயம் தமிழீழ விடுதலைப் போராட்டம் குறித்தும் விடுதலைப் புலிகள் குறித்தும் தவறாக கணிப்பீடு செய்துகொண்டால் கூட, அந்த நாடுகளில் நிலவும் சட்ட நீதியானது அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப செயற்பட முடியாமல் செய்கின்றது என்று கூடக் கூறலாம். அதாவது, மேற்குலகத்தில் "சட்டத்திற்கு முன் சகலரும் சமன்" என்பதும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் சட்டத்திற்கு உரிய ஆற்றல் உண்டு என்பதினால், இவ்வாறான நடவ டிக்கைகளைக் கட்டுப்படுத்துகின்றது எனக் கூறலாம். அவ்வாறு சட்டத்தை மீறிச் செயலாற்றும் அரசோ, அன்றி அரசியல்வாதிகளோ அந்த நாடுகளில் அரசியல் வாழ்க்கையைத் தொடர முடியாது என்பதே யதார்த்தமாகும். சுருக்கமாகக் கூறுவதானால், அரசி யல்வாதிகளோ – அரசோ, தாங்கள் விரும்பியவாறு சட்டங்களை உருவாக்க முடியாது – உருவாக்கும் சட்டங்களை தனியாக மீறவும் முடியாது. இவ்வாறுள்ள நிலையினால், அரசு விரும்பியோ விரும்பாமலோ புலிகள் இயக்க விவகாரத்தில் சட்டத்திற்குட்பட்டே செயற்பட வேண்டியுள்ளது. இதன் காரணமாகவே, தனிப்பட்ட ரீதியில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை அவர்களால் தடைசெய்ய முடியாதுள்ளது. ஏனெனில், விடுதலைப் புலிகள் இயக்கம் மேற்கு நாடுகளில், அந்த நாடுகளின் சட்டத்திற்குட்பட்ட ரீதியிலேயே செயற்பட்டு வருகின்றது.

இந்த நிலையில், சிங்கள ஆட்சியா ளர்களின் அரசுகள், தாங்கள் விரும்பியது போன்று சட்டங்களை உருவாக்குவதையும் – அமுல்ப டுத்துவதையும் மேற்குலகிலும் எதிர் பார்ப்பது என்பது மட மைத்தனமானதாகும். அதாவது, **சிறிலங்கா அரசு தன்னை ஒரு 'ஜனநாயக நாடு" எனக் கூறிக்கொள்கின்றது என்பதற்காக, அதன் ஆட்சியாளர்களின் செயற் பாடுகள் யாவும் ஜனநாயக ரீதியானவை என்று உலகம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதல்ல.** 'சிறிலங்கா அரசின் சாட்டவாக்கு' என்பது அதிகாரத்தில் இருப்பவர்களது கொல்லைப்புறத்தில் இருந்தே வழிநடத்தப்படுகின்றது என்பதே யதார்த்தமாகும். ✷

# செட்டை கழற்றிய...

அவளுக்குமிடையில் போட்டியாக இருக்கும். அந்தப் போட்டி நிலவேளை வாய்ச் சண்டையில் போய் முடிவடை வதுமுண்டு. வகுப்பு மாணவர்களுக்கு இவர்களது சண்டை பார்க்க படுகுசியாக இருக்கும். சில பேர் அப்படி இப்படி ஏவி விட்டுவிட்டு, சண்டை பார்க்கவென்று ஒருபக்கத்தே நிற்பர்.

∴ ∴ ∴ ∴

அவள் கணக்குக் காட்டவெனக் கொண்டு சென்றபோது, 'ரீச்சர்' ஏதோ யோசனையாக இருந்தார். அவரது கண்கள் கலங்கி விடும்போல இருந்தது. அழுகிறாவோ?

மென்மையான சிரிப்போடு திருத்தியபடி நிமிர்ந்து பார்த்தார்.

"எப்படிப் போகுது? பரணியும் போட்டான்."

"அவன் பிரச்சினையை நல்லா உணர்ந்திருக்கிறான்"

'ரீச்சர்' அவளை ஆச்சரியத்தோடு பார்த்தார். என்ன நினைத்தாரோ? நீண்ட பெருமூச்சொன்று அவரிடமிருந்து வெளிப்பட்டது.

'ரீச்சர்' ஏதோ சொல்வதற்கு முயலுவதாகப்பட்டது. வெளியில் வாகனச் சத்தங்கள் கேட்டன. இரைந்தபடி வாகனங்கள் சென்றன.

பேனாவைப் பிடித்திருந்த 'ரீச்சரின்' கைகள் நடுங்கின.

'ரீச்சரின்' கணவரைச் சென்ற கிழமை இராணுவம் பிடித்துச் சென்றதாம். தேவகி சொல்லித்தான் அவளுக்குத் தெரியும். 'ரீச்சர்' மனங்குழம்பி இருப்பது இதற்காகத்தான். வகுப்பில் எல்லோருமே கவலையாக இருந்தார்கள்.

பெரும்பாலான பாடங்களுக்கு ஆசிரியர்கள் வரவில்லை. நூலகத்துக்குச் சென்றால் ஏதாவது புத்தகம் வாசிக்கலாம். மனம் ஒரு நிலையில் இல்லாமல் இருந்தது. விளையாட்டு மைதானத்தில் புழுதி வாரி இறைத்துக் கொண்டிருந்தது. மற்ற வேளைகள் என்றால், விளையாட்டு மைதானத்தில் பெண் பிள்ளைகளும் ஆண் பிள்ளைகளுமாக மைதானம் நிறைந்து போயிருக்கும். இன்று அவ்விடம் வெறுமையாக இருந்தது. வெடிக்கும் பொருட்கள் இருந்தாலும் என்பதால், அவ்விடத்துக்குப் போக வேண்டாம் என காலையில் பிரார்த்தனைக் கூட்டத்தில் சொன்னது அவளுக்கு நினைவுக்கு வந்தது. மாணவர்கள் வளாகத்தின் ஒரு சுற்றுக்குள்ளேயே சுற்றிச்சுற்றி அங்குமிங்கும் திரிந்தனர்.

பாடசாலை விட்டிருந்தது.

மிதிவண்டி நிற்குமிடத்திலிருந்து மிதிவண்டியை எடுத்துக்கொண்டு அவள் வாசலைத் தாண்ட, அவளின் பின்னால் வளர்மதி 'ரீச்சர்' வருவது தெரிந்தது. சிறிது தாமதித்து அவருடன் வருவதற்காக நின்றாள்.

"ஏன் நிற்கிறீர்?"

"உங்களைப் பார்த்துக்கொண்டுதான்."

"நல்லதாய்ப் போச்சு. சேர்ந்து போவம். இண்டைக்கு வேலாயுதம் 'மிஸ்சும்' வரவில்லை. இல்லாட்டி அவதுணைக்கு வருவா."

"என்னவாம் 'ரீச்சர்,' உங்கடை அவரை எப்ப விடுவாங்களாம்."

அவரின் கவலையைக் கிளறிவிடுவது போல இருக்குமோ.........? அவளது தயங்கிய கேள்விக்கு அவர் நீண்ட நேரம் யோசித்தார்.

"என்னாலை ஒண்டுமே செய்ய முடியாமல் கிடக்குது. அவரைத் தேடித் தேடி அலைஞ்சு கொண்டிருக்கிறன். ஒரு பதிலுமில்லை. எந்தச் சிறையிலோ? பிள்ளைகள் அப்பா, அப்பா எண்டு அழுது கொண்டிருக்குதுகள். என்ன செய்யிறதெண்டு தெரியாமல் கிடக்குது. ஐயோ நான் என்ன பாவம் செய்தனோ?"

'ரீச்சர்' தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் அழுது கொண்டிருந்தார்.

"கவலையில்லாத மனிசி. சந்தோசமான 'ரீச்சர்' " என்று மாலதி அடிக்கடி சொல்லுகிற அவர், அழுவதைப் பார்க்க என்னவோபோல் இருந்தது. அதன் பிறகு நீண்ட நேரம் மௌனமாகவே வந்தார்.

"நான் வேலைக்கு வராட்டி அவங்கள் ஏதேனும் செய்து போடுவாங்கள். அதுதான் இந்த நிலைமையிலும் வாறன். அவரை என்ன சித்திரவதை செய்யிறாங்களோ? அந்த மனிசன் ஒரு பாவமுமறியாது. ஒரு சோலி சுறட்டுக்கும் போகாது. அவரையே இப்படியெண்டா?"

திடீரென இராணுவ வாகனங்கள் வீதியில் வந்து கொண்டிருந்தன. என்னதான் அவர்கள் தம்மை நல்லவர்கள் போல் காண்பித்து இருந்தாலும், அவளது மனதில் திகில் குடிகொண்டிருந்தது. முகமெல்லாம் வியர்த்தபடி.......

அந்த எண்பத்திமூன்று யூலையில் 'றக்கில்' இருந்தபடி சனத்தைச் சுட்டுக்கொண்டு போன இராணுவம் தானே இது! எப்போதுமே பிடிக்காத அந்த இராணுவத்தின் உடுப்பும், அவர்களது முகங்களும். அந்தக் கலவரத்துக்கு இங்கு வெறிபிடித்து, வீதியால் போய்க்கொண்டிருந்த லிங்கம் மாமாவைப் பிடிச்சுக் கொண்டுபோய் உடம்பெல்லாம் கத்தியால் சிங்கம் கீறி, சுடலை மடத்திலை பிணமாய்ப் போட்டுச் சென்ற அதே....... அந்த இராணுவம் தானே இது! மட்டக்களப்பில் கணவனுக்கு முன்னே மனைவியை வெறிகொண்டு குதறிய அதே குரூர உருவங்கள்!

'ரீச்சரும்' அவளும் மிதிவண்டியை விட்டு இறங்கி நின்றனர். அவர்கள் வலு நயமாகச் சிரித்தபடி இவர்களைப் போகும்படி சொன்னார்கள்.

அவள் நிறைய நேரம் யோசித்தபடி நடந்தாள். தனியாக, இருவராக இராணுவத்தினர் அவள் போகும் இடமெல்லாம் கண்ணில் பட்டுக் கொண்டேயிருந்தனர். ✷


தமிழீழத்தில் இயங்கும் காந்தருபன் சிறுவர் அறிவுச்சோலை நிதிக்காக

**மதுர கானங்கள் -96**

இடம் : Fairfield Hall
Park Lane,
East Croydon

காலம் : 19 - 10 - 96
சனிக்கிழமை

நேரம் : மாலை 6.30 மணி

நுழைவுச் சீட்டுக்கள் :

| | |
|---|---|
| தனி நபர் | £7 |
| குடும்பம் | £20 |
| முன்னிருக்கைகள் | £50 |

நுழைவுச் சீட்டுக்களை தமிழ் வியாபார நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

☎ U.T.O
0181 503 4294 / 0956 314 370

இவ்வாண்டில் முதன் முறையாக Rainbow இசைக் குழுவின் பின்னணி இசையில் இலண்டனின் அனைத்து முன்னணிப் பாடகர்களும் இணைந்து வழங்கும் மாபெரும் இசை நிகழ்ச்சி

0181 682 3261 0956 329 660
0956 970 392 0956 256 098


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



- தன்னம்பிக்கைக்கோர் உதாரணம் -

# "என்னால் குடும்பத்தை நடத்த முடியும் என்று உழைத்தேன்"

## -தமிழீழத்தின் குடும்பத் தலைவி ஒருவர்

டபகுதிக்கு வெளியே இருந்து டைகளை வாங்கி வந்து, இங்கே பிற்பனை செய்து வருகிறார் தொழில் முனைவோரான ஐம்பத்தெட்டு யதுடைய சறோசினி அவர்கள். ஆரம்பத்தில் இவர் ஒரு உணவு பியாபாரி. தனது வாழ்க்கையில், தான் எவ்வாறு முன்னுக்கு வந்தார் என்ற அனுபவங்களை அவர் இங்கே ங்களுடன் பகிர்ந்து கொள்கின்றார்.

அறுபத்திரண்டாம் ஆண்டு எனக்குத் திருமணம் நடந்தது. என் கணவர் தனது உழைப்பை எனக்கோ குழந்தைகளுக்கோ தரமாட்டார். ஆரம்பத்தில் நான் எனது நகைகளை, இரண்டு வீடுகளை, காணியை விற்றேன். பிறகு வீட்டிலேயே உணவு தயாரித்து விற்கத் தொடங்கினேன். எனது வருமானத்தில் குடும்பத்தை நடத்துவது சிரமமாக இருந்தது. இதையெல்லாம் பார்த்தும்கூட அவர் பணம் தருவதில்லை. தானே செலவு செய்தார்.

பருத்தித்துறையில் இருந்த நான் எழுபத்தொன்பதாம் ஆண்டு பரந்தனுக்கு வந்தேன். இங்கே வந்த பின்னர் எனது இரண்டு ஆண்பிள்ளைகள் விவசாய நிலங்களில் தொழில் செய்யத் தொடங்கினார்கள். ஒரு நாள் இரண்டு பேரும் இயக்கத்துக்குப் போய்விட்டார்கள். குடும்பத்தை வறுமை வாட்டியது. இதனால் நான் மீண்டும் உழைக்கத் தொடங்கினேன்.

நெல் வயல்களில் தொழில் செய்தேன். பாலைப் பழம் விற்றேன். வல்லாரைப் பிடி விற்றேன். அதில் வரும் இலாபத்தை வைத்து காய்கறிகளை வாங்கி விற்கத் தொடங்கினேன். அதேநேரம், அரிசி இடித்து மாவாக்கி இங்கிருந்து பருத்தித்துறைக்குப் போய் விற்றுவிட்டு வருவேன்.

இடையில் எண்பத்திரண்டாம் ஆண்டில் கணவர் என்னைவிட்டுப் பிரிந்து போய்விட்டார். அவர் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒன்றுதானே. நான் தொடர்ந்து உழைத்தேன். எனது உழைப்பில் என் பிள்ளைகளுக்குத் திருமணம் செய்து கொடுத்தேன்.

தொண்ணூற்று நான்காம் ஆண்டின் கடைசிப் பகுதியில் என் மகளின் கணவர் அவளை விட்டுப் பிரிந்து போய்விட்டார். அவளுக்கு நான்கு குழந்தைகள். எனவே காய், கறி வியாபாரத்தை அவளிடம் கொடுத்துவிட்டு நான் உடை வியாபாரம் செய்ய ஆரம்பித்தேன். அறுபத்தாறாம் ஆண்டு சிறு சிறு வியாபாரம் செய்ய ஆரம்பித்த நான், இப்போது கொஞ்சம் பெரிய வியாபாரம் செய்கின்றேன்.

உடை வாங்கப் போகும்போது 15,000 ரூபாவை வட்டிக்குக் கடனாக எடுத்துப் போவேன். உடைகளை வாடிக்கையாளர்களுக்குக் கொடுத்துவிட்டு, 'லேஸ்'



"திடீரென என்மேல் குடும்பச் சுமை விழுந்தது. நான் கலங்கிப் போக வில்லை. என்னால் உழைக்க முடியும், குடும்பத்தை நடத்த முடியும் என்று உழைத்தேன்."

வகைகளை கிளிநொச்சிக் கடைகளுக்குக் கொடுத்துவிட்டு, மிகுதியாக உடையிருந்தால் சந்தையில் போட்டு விற்பேன். புதுவருடம், கோயில் திருவிழாக்கள் என்றால் 25,000 ரூபாவுக்கு உடைகள் எடுத்து வந்து விற்பேன். பிள்ளைகளின் உணவு, படிப்புச் செலவுகள் போக, 3,000 ரூபா அளவில் பணம் கையில் இருக்கும். அதற்கு ஒரு புதிய பொருளை வாங்கி வைப்பேன். அல்லது சீட்டுக் கட்டுவேன். என்னால் உழைத்துக் குடும்பத்தை நடத்த முடியும் என்று நம்பிக்கை இருக்கிறது. எனது மகளின் திருமணத்தின்போது மணமகன் தரப்பிலிருந்து ஒரு இலட்சம் ரூபா கேட்டார்கள். நான் எண்பத்தையாயிரம் ரூபா காசும் பத்துப் பவுணில் நகையும் கொடுத்தேன். இதெல்லாம் யார் தந்தது?

நான் உழைத்ததுதான். தந்தை இல்லாமல் குழந்தைகள் தனித்திருக்கிறார்கள் என்பதுதான் கவலை. அவர்களுக்காகத்தான் நான் ஒரு சதமும் தராத கணவரை ஒன்றும் சொல்லாமல் விட்டிருந்தேன். அவர் தானாகவே பிரிந்துபோய் விட்டார். இதற்கு யார் என்ன செய்வது?

என் அம்மா, அப்பாவுடன் வாழ்ந்த காலத்தில் நான் ஒரு பெண் என்ற காரணத்தாலேயே அவர்கள் என்னைப் படிக்க வைத்தார்கள்.

நான் க.பொ.த (உ.த) வரை படித்தேன். சனி, ஞாயிறுகளில் தையல் பழகினேன். அதற்குள் எனக்குத் திருமணம் செய்து தந்துவிட்டதால் தொடர்ந்து படிக்க முடியாமல் போய்விட்டது. அதை இப்போது நினைத்தாலும் கவலையாக இருக்கும். அதனால்தான் என் பிள்ளைகள் எல்லோரையும் படிப்பித்தேன். ஒருவன் ப.நோ.கூ. சங்கத்தில் வேலை செய்கின்றான். மற்ற இரண்டு பிள்ளைகளும் படித்துக் கொண்டிருக்கும்போதே விரும்பித் திருமணம் செய்து விட்டார்கள். மற்ற இரண்டு பிள்ளைகளும் போராளிகள். ஒரு பிள்ளை இறந்து விட்டார். அடுத்தவர் படித்துவிட்டு விடுதலைப் புலிகளுடன் இணைந்து வேலை செய்கின்றார். மற்ற இரண்டு பேரும் படித்துக் கொண்டி ருக்கின்றார்கள். இருவரும் கெட்டிக் காரிகள். ஒரு உத்தியோகம் பார்க்காவிட்டாலும் தங்களின் குடும்பத்தைத் தாங்களே கொண்டு நடத்தக்கூடிய அளவுக்கு இருக்க வேண்டும். கணவர்மாரின் உழைப்பை மட்டும் நம்பி வாழ்வது இந்தக் காலத்தில் மடத்தனம். பெண்கள் வீட்டிலாவது சிறு தொழில் செய்யவேண்டும். என் பிள்ளைகள் படித்தவர்களானாலும், கோழி வளர்ப்பு, தையல் வேலை எல்லாம் செய்யக் கூடியவர்கள்தான்., பெண்கள் தன்னம்பிக்கையுடன் உழைக்கும் வலு கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

> கணவர்மாரின் உழைப்பை மட்டும் நம்பி வாழ்வது இந்தக் காலத்தில் மடத்தனம். ஏனெனில் குடும்பத் தலைவனுக்கு ஏதாவது ஆகிவிட்டால் அல்லது அவர் பிரிந்து போய் விட்டால் அக்குடும்பத்தின் கதி என்ன? பெண்கள் தன்னம்பிக்கையுடன் தாமும் ஒரு சிறு தொழிலாவது செய்யப் பழகியிருக்க வேண்டும். இதுவே குடும்பத்தின் பொருளாதார நிலையைச் சீர் செய்ய உதவும். மற்றும் தற்காலப் பெண்கள் இதில் முழுக்கவனம் செலுத்த வேண்டும்.

குடும்பத்தைத் தாங்குபவர்கள் ஆண்களாக இருப்பதுதான் வழக்கம். பெண்கள் வீட்டையும், கணவனின் தேவைகளையும் பார்த்துக் கொள்வார்கள் – இவற்றைவிட வேறு வேலைகள் இவர்களால் செய்ய முடியாது – என்று இல்லாவிட்டாலும் இவர்கள் செய்வதில்லை. அல்லது செய்ய அனுமதிக்கப்படுவதில்லை. இந்த நிலையில் அந்தக் குடும்பத்தின் தலைவன் பிரிந்து போய்விட்டால் அந்தக் குடும்பத்தின் நிலை என்ன?

விடை தேட எங்கேயும் போக வேண்டாம். இங்கேயே விடை இருக்கின்றது.

"திடீரென என்மேல் குடும்பச் சுமை விழுந்தது. நான் கலங்கிப் போகவில்லை. என்னால் உழைக்க முடியும், குடும்பத்தை நடத்த முடியும் என்று உழைத்தேன்."

என்று தருகின்றார் சறோஜினி அவர்கள்.

- அமுதநிலா -

# சதாம் உசேன் தோற்கடிக்கப்பட்டாரா....

வெளியேற்றியதனை அடுத்து, KDP யினர் சதாம் உசேனின் உதவியை நாடினர்.

1987ல் சதாம் உசேயின் நச்சுவாயு தாக்குதல்களின் மூலம் 10,000 வரையிலான குர்திஷ் மக்களைக் கொன்றதற்கும் மாறாக, வேறுவழியில்லாததால் ஒரு தற்காலிக வசதிக்காக உசேனை நாடவேண்டி ஏற்பட்டது என KDP தமது நடவடிக்கையை நியாயப்ப டுத்துகின்றது.

இதே சமயம் PUK இனர்க்கு ஈரானிலிருந்து நிதியுதவிகளும், ஆயுத விநியோகமும் கிடைத்து வந்தன. ஈரானும், ஈராக்கும் 8 வருடங்களாக கடும் போரில் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது.

எனவே ஒரு கல்லில் இரு(பல) மாங்காய்(களை) வீழ்த்துவதுபோல, தான் இழந்த பகுதிகளை மீட்டு, குர்திஷ்தான் சுதந்திர தாகத்தையும் குறைத்து, தனது பரம எதிரி ஈரானுக்கும் பாடம் படிப்பிப்பதாக உசேன் தாக்குதல்கள் அமைந்துவிட்டன.

மேலும், கடந்த ஆறு வருடங்களாக அமெரிக்க உளவுப்படையான CIA , ஈராக் அரசாங்கத்தை நிலைகுலையச் செய்ய குர்திஷ் பிரிவினரைப் பாவித்து வந்தது. ஆப்கான் போரின் பின்னர் CIA கவனஞ்செலுத்திய மிகப்பெரிய இரகசிய நடவடிக்கை இதுவாகும். இர்பில் நகரம் கைப்பற்றப்பட்டதையடுத்து 100இற்கும் மேற்பட்ட முக்கியஸ்தர்கள் கைது செய்யப்பட்டுக் கொலை செய்யப் பட்டுள்ளனர்.

இன்னும் ஒரு வருடத்துள் சதாம் உசேனை அகற்றிவிடுவோம் எனப் பறைசாற்றிக்கொண்டிருந்த CIA யினர்க்கு இப்போது மீண்டும் முதலாவது சதுக்கத்தில் வந்து நிற்கவேண்டிய நிலைமை உருவாகியுள்ளது.

"ஈராக் குவைத் மீதான படையெடுப்புடன் ஒப்பிடும்போது வட ஈராக்கின் தாக்குதல் வேறுபடுகிறது. இத்தாக்குதல் ஈராக்கின் எல்லைக்குள்ளேயே வேறுநாட்டுத் தலையீட்டை அகற்றுவதற்காக அரைவாசி குர்திஷ் மக்களின் வேண்டுகோளுக்கிணங்க நடாத்தப்பட்டுள்ளது" என யோர்தானிய ஆய்வாளர் ஒருவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

21 அங்கத்துவ நாடுகளைக்கொண்ட அரபுலீக்கும் அமெரிக்கா சர்வதேச விதிகளை மீறியுள்ளது என கண்டனம்




தெரிவித்தமை, சதாம் உசேனுக்கு உற்சாகத்தை அளித்திருக்கும்.

மொத்தத்தில் அமெரிக்கா தாக்குதல்களால் சில இழப்புக்கள் ஏற்பட்டாலும், சதாம் உசேயினுக்கு தோல்வி ஏற்படவில்லை. மாறாக பல வழிகளில் வெற்றியே கிடைத்துள்ளது எனப் பல ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ✷

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பேரியோரை வியத்தலும் இலமே...

சோவியத் ஒன்றியத்தில்செச்சினியா ரஸ்யக் குடியரசுக்குள் ஒரு சுயாதீனக் குடியரசாக விளங்கினாலும் இந்த சுயாதீனமும் முடியரசும் ஏட்டுச் சுரக்காய் மாதிரியே இருந்தது.

மதத்தால் இஸ்லாமியர்களான செச்சினிய மக்கள் நீண்ட காலமாகத் தங்கள் சுதந்திரத்திற்கும், இறைமைக்கும் போராடி வந்துள்ளனர். அவர்கள் போர் முனையில் காட்டி வந்த வீரம் வரலாற்றுப் புகழ் வாய்ந்தது.

1991ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியம் உடைந்ததை அடுத்து, செச்சினியா தன்னை ஒரு குடியரசாகப் பிரகடனம் செய்தது.

ரஸ்யா – ஆப்கானிஸ்தான் போரின் போது ரஸ்ய நாட்டின் விமானப்படைத் தளபதியாக இருந்த துதாயேவ் (Dzhokhar Dudayev) செச்சினியாவின் ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.

செச்சினியாவின் குடியரசுப் பிரகடனத்தை சீரணிக்க முடியாத ரஸ்ய நாட்டு ஜனாதிபதி போரிஸ் யெல்ட்சின் 1994ஆம் ஆண்டு மார்கழி மாதம் ரஸ்யப் படையை செச்சினியாவிற்கு அனுப்பி செச்சினியாவின் சுதந்திரத்தை முளையிலேயே கிள்ளி எறிய முயற்சித்தார்.

இப்போது இருபது மாதங்கள் கழித்து பலத்த ஆள், ஆயுத இழப்பிற்குப் பின்னர், செச்சினியாவில் இருந்து ரஸ்யப் படை வெற்றிகரமாகப் பின் வாங்கியுள்ளது.

இந்த இருபது மாதங்களில் முப்பதினாயிரம் பொதுமக்கள் ரஸ்யப் படையின் எறிகணைத் தாக்குதலுக்கும் விமானக் குண்டு வீச்சிற்கும் பலியாகி இருக்கிறார்கள்.

பல ஊர் மனைகள் தரை மட்டமாக்கப்பட்டிருக்கின்றன. தலைநகர் குரோஸ்னி (Grozny) தகர்க்கப்பட்டிருக்கிறது. ரஸ்யப் பாதுகாப்பு அலெக்சாண்டர் லெபேட் (யெல்சினோடு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டுத் தோற்றவர்) அவரது முயற்சினாலேயே கடந்த வாரம் செச்சினியப் போராளிகளோடு போரை நிறுத்தி, ரஸ்யப் படை செச்சினியாவிலிருந்து பின் வாங்கிக் கொள்வதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. பின்வாங்கிக் கொண்டிருக்கும் ரஸ்யத் துருப்புக்களைப் பார்த்துத் தடை முகாம்களில் ஏ.கே 47 துப்பாக்கியுடன் நிற்கும் செச்சினியப் போராளிகள் 'டாட்டா' காட்டி இருக்கிறார்கள்.

சங்க காலப் புலவர்களது வாக்கில் அரசியலும் இருப்பது காரணமாகவே அவர்களது செய்யுள்களுக்கு விரிவான அறிமுகம் தேவைப்பட்டுவிட்டது.

இலக்கியத்தில் அரசியல், அரசியலில் இலக்கியமும் இருப்பது புதினமான சங்கதி இல்லை.

உலகப் பத்திரிகைகள் நாடிக்குக் கையைக் கொடுத்துக் கொண்டு சோகமே உருவாகத் தென்படும் ரஸ்ய இராணுவ வீரனது படத்தைப் பெரிதாகப் போட்டிருக்கின்றன.

செச்சினியா மீது ரஸ்ய ஜனாதிபதி போரிஸ் யெல்ட்சின் இருபதினாயிரம் ரஸ்யத் துருப்புக்களை டாங்கிகள், கவச வாகனங்கள், உலங்கு வானூர்திகள் சகிதம் ஏவிவிட்ட போது செச்சினியாவை, எண்ணி நான்கு வாரங்களில் அடிபணிய வைக்கப் போவதாகக் கொக்கரித்தார்.

மூட்டைப் பூச்சியை நசுக்கி விடுவதுபோல செச்சினியாவை நசுக்கிவிடப் போவதாகச் சபதம் செய்தார்.

செச்சினியப் போராளிகளை 'பயங்கரவாதிகள்', 'கொள்ளைக்காரர்கள்' இப்படியும், இதற்கு மேலாகவும் அர்ச்சனை செய்து தீர்த்தார்.

இப்போது அவரது மானம் விமானம் ஏறிய நிலையில் "பட்டது போதும், படமுடியாது இனித் துயரம்" என்று சொல்லிக் கொண்டு படுவேகமாக தனது துருப்புக்களை வாபஸ் வாங்கிக் கொண்டிருக்கிறார்.

ஜார் மன்னர்கள் காலந்தொட்டு, நீண்ட காலமாகத் தங்கள் சுதந்திரத்திற்கும், இறைமைக்கும் போராடி வரும் செச்சினியாவுடன் தற்போது ரஸ்யா செய்து கொண்ட போரின் முடிவு - புராணங்கள், இதிகாசங்கள், நாவல்களில் வரும் கற்பனைக் கதைகளை விட அதிசயமானது. ரஸ்யாவிற்கும் செச்சினியாவிற்கும் இடையிலான போரின் முடிவு இன்றிலிருந்து இன்னும் நூறு, இருநூறு ஆண்டுகளுக்குப் பின் இந்தப் போர் பற்றிய வரலாற்றைப் படிப்பவர்கள் சின்னம் சிறு நாடான செச்சினியா, பென்னம் பெரிய நாடான ரஸ்யாவை புறமுதுகு காட்டச் செய்த வீரத்தை நம்பமாட்டார்கள்.

¬ ¬ ¬ ¬ ¬ ¬

பாவம் ஜனாதிபதி போரிஸ் யெல்ட்சின். அவர் விடுதலைப் போராட்ட வரலாற்றிலிருந்து பாடம் படிக்கவில்லை.

குறிப்பாக, கணியன் பூங்குன்றனின் புறநானூற்றுப் பாடலைப் படிக்கவில்லை. திருவள்ளுவரின் திருக்குறளையும் படிக்கவில்லை. இவ் இலக்கியங்கள், ஆங்கில மொழி உட்பட பல மொழிகளில் மொழி மாற்றப்பட்டுள்ளதென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

படித்திருந்தால் "சிறியோரை இகழ்தல் அதனிலும் இலமே" என்பதன் பொருள் அவருக்கு விளங்கியிருக்கும். "உருவு கொண்டு எள்ளாமை வேண்டும்" என்ற பொய்யாமொழி புரிந்திருக்கும்.

மக்களின் விடுதலை வேட்கையை, சுதந்திர உணர்வை உலகில் எந்த சக்தியாலும் வெற்றி கொள்ள முடியாது என்று போதிக்கும் பொது உண்மை, அவருக்குத் தெரிந்திருக்கும்.

மலையளவு நாடான ரஸ்யாவுக்கு எதிராகக் கடுகளவு நாடான செச்சினியாவின் வீரம் செறிந்த போராட்டத்திற்கும் சிறிலங்காவிற்கு எதிராகப் போராடி வரும் தமிழீழத்திற்கும் நிறைய ஒற்றுமை உண்டு.

இருபத்தைந்து கோடி மக்களையும் (250 மில்லியன்), அறுபத்தைந்து இலட்சம் (6.5 மில்லியன்) சதுர மைல் பரப்புக் கொண்ட ரஸ்யாவை - பன்னிரண்டு இலட்சம் மக்களையும் (1.2 மில்லியன்), 6,060 சதுர மைல் பரப்பையும் கொண்ட செச்சினியா புறங்கொள்ள வைக்க முடியுமென்றால் - 18,042 சதுரமைல் நிலப்பரப்பையும் நூற்று இருபத்தைந்து இலட்சம் மக்களையும் (12.5 மில்லியன்) கொண்ட சிங்களச் சிறிலங்காவை - 7,190 சதுர மைல் பரப்பையும் நாற்பது இலட்சம் மக்களையும் (4 மில்லியன்) கொண்ட தமிழீழம் தோற்கடிக்க முடியுமென்பது உள்ளங்கை நெல்லிக் கனியாகும்.

செச்சினியப் போராளிகளை உலகத்தின் சிறந்த போர் வீரர்கள் என பத்திரிகைகள் புகழ் மாலை சூட்டியுள்ளன.

செச்சினியப் போராளிகளின் வீரத்திற்கு இம்மியளவும் குறையாத வீரம் படைத்தவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள்.

இன்னும் சொல்லப் போனால் விடுதலைப் புலிகளது வீரம் செச்சினியப் போராளிகளது வீரத்தை விடச் சிறந்தது – உயர்ந்தது – மகத்தானது.

பின்வாங்கிக் கொண்டிருக்கும் ரஸ்யத் துருப்புக்களை செச்சினியப் போராளிகள் 'டாட்டா' சொல்லி வழியனுப்பி வைப்பது போல – சிங்கள இராணுவத்திற்கு விடுதலைப் புலிகள் 'டாட்டா' சொல்லி வழியனுப்பும் காலம் – வெகு தொலைவில் இல்லை.

முடிவாக, ரஸ்ய ஜனாதிபதி போரிஸ் யெல்ட்சின் செச்சினியாவில் மெத்தக் கஸ்ரப்பட்டு படித்துக் கொண்ட பாடத்தை – சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்காவும் மிக விரைவில் படிக்க இருக்கிறார்.

இன்னும் சொல்லப் போனால் விடுதலைப் புலிகளது வீரம் - செச்சினியப் போராளிகளது வீரத்தை விட - சிறந்தது - உயர்ந்தது - மகத்தானது - பின்வாங்கும் ரஸ்யத் துருப்புக்களை செச்சினியப் போராளிகள் 'டாட்டா' சொல்லி அனுப்புவது போல், சிங்களப் படைகளை விடுதலைப் புலிகள் வழியனுப்பும் காலம் வெகு தொலைவில் இல்லை.

இறுதிப் பக்கத் தொடர்ச்சி...

## மேஜர் வண்ணன் அல்லது ரசியன் தனது அக்காவிற்கு எழுதிய இறுதிக் கடிதம்

24–05–95
தமிழீழம்

அன்பின் அக்கா அறிவது நான் போகும் இடம் எல்லாம் மக்களின் விடிவிற்காக அமையும். அதுபோல நீங்கள் செய்யும் வேலை எல்லாம் மக்களுக்காக அமையும் என நினைத்து செய். எம் தலைவர் வழி காட்டுவார்.

மேலும் அக்கா எமது மண்ணில் பல முனைகளில் சிங்கள ராணுவம் முன்னேறுகிறான். இதன் விளைவாக நாம் எதிரிக்கு இழப்புக்களை உண்டு பண்ண வேண்டும். அதற்காக அதன் வழியில் செல்கின்றேன். எனக்குத் தெரியும் இதன் வழியில் சென்றால் நிச்சயம் மரணம்தான். எதிர்பார்த்துத்தான் செல்கின்றேன். ஏனெனில் மக்கள் விடிவிற்காகவும் எமது மண்ணை மீட்பதற்காகவும் தான் இதன் வழியில் செல்ல எனக்கு சந்தர்ப்பம் கிடைத்ததிற்கு மகிழ்ச்சி தெரிவிக்கின்றேன் எம் தலைவருக்கு. அக்கா நான் இறந்து போனேன் என்னைப்பற்றி கவலைப்பட வேண்டாம். நான் மக்களுக்காக இறக்கின்றேன் என சந்தோசப்பட வேண்டும்.

மேலும் அக்கா உங்கள் மீது அளவு கடந்த பாசம் வைத்திருக்கின்றேன். நான் சாகப்போகின்றேன் என்று தெரிந்து நீங்கள் தந்த சேட்டைப்போட்டுத் திரிகிறேன். அதை கழட்டி வைக்க மனம் வரவில்லை. இதை எழுதும் போது கூட சேட் பக்கத்தில் தான் கிடந்தது. என் செய்வது சந்தர்ப்பம் கிடைத்தது வேறு சேட் போடச்சொல்லி. மிகவும் கவலை தான் என் செய்வது. மேலும் எங்கள் வீட்டில் எனது பச்சை யூனிபோம் இருக்கிறது. அதை நீங்க போட முடியும் என்றால் போடவும். இல்லாவிட்டால் அதை ஞாபகமாக வைத்து இருக்கவும். வேறு ஜீன் இரண்டு உள்ளது.

அக்கா நான் உங்களைச் சந்திக்கும் போது கூறுவீர்கள் நான் சண்டைக்கு போகப் போறன் என்று ஆனால் எனது மனதிற்குள் பெரும் பதட்டம் ஏற்படும் ஏன் என்றால் உங்களை விட நான் முதல் இறக்க வேண்டும் என்றுதான். உங்களை இழந்தால் எனது நெஞ்சு வெடிக்கும் ஆனால் நாங்கள் மக்களுக்காகப் போராடுவோம் என்றதும் நெஞ்சு பழைய நிலைக்கு வரும் என்று நினைக்கின்றேன்.

அக்கா நான் கடிதம் எழுதி பழக்கம் இல்லை எழுத இருந்தாலும் மனதிற்குள் வரவே வராது ஏனோ தெரியாது. இன்றைக்கு மனசுக்கு வருவது எல்லாம் எழுதக்கூடியதாக இருக்கிறது எல்லாம் இறப்பதற்காகத்தான் என நினைக்கின்றேன் வேறு ஒன்றும் இல்லை.

நன்றி
வண்ணன் அல்லது ரசியன் இல. 210312 31–10–95 பிப 1.39 மணி



10 - 9 -96 அன்று சுவிசில், விடுதலைப்புலிகளின் சுவிஸ் கிளைப் பிரதிநிதி திரு முரளிதரனை விடுதலை செய்யக்கோரி நடைபெற்ற பிரச்சாரப் போரின் போது...




8 - 9 -96 அன்று சுவிஸ் ஜெனிவாவில் நடைபெற்ற தமிழர் புனர்வாழ்வுக் கழக முத்தமிழ் விழாவில் மகளிர் அணியினரின் வில்லுப்பாட்டு நிகழ்வின்போது...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உலக அரங்கு

## ஈராக்:

# சதாம் உசேன் தோற்கடிக்கப்பட்டாரா?

சாள்ஸ் தேவசகாயம்

வட ஈராக்கிலுள்ள குர்திஷ் பிரதேசம் மீது, சனாதிபதி சதாம் உசேன் தனது 30,000 துருப்பினரை ஆகஸ்ட் 31ஆம் திகதியன்று நகர்த்தியதைத் தொடர்ந்து, அமெரிக்க சனாதிபதி பில் கிளின்டன்



ஈராக்கின் நிலைகள் மீது ஏவுகணைத்தாக்குதல்கள் நடாத்தி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இக் குர்திஷ் பிரதேசம் ஈராக்கின் ஒரு பகுதியாக விளங்கியபோதும், 1991 வளைகுடா யுத்தத்தினை அடுத்து, சர்வதேச நாடுகளால் பாதுகாப்புப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது.

அமெரிக்காவினால் நடாத்தப்பட்ட இரு தாக்குதல்களில் செய்மதி வழி நடாத்தும் 44 ஏவுகணைகள் ஈராக்கின் இலக்குகள் மீது ஏவப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

தரையிலிருந்து வானுக்கு ஏவப்படும் ஏவுகணைத்தளங்கள், ரேடார் நிலையங்கள், தென் ஈராக்கின் கட்டுப்பாட்டு நிலையங்கள் என்பனவற்றை இலக்கு வைத்தே இத்தாக்குதல்கள் நிகழ்த்தப்பட்டன என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

தனது சொந்த மக்களையே துன்புறுத்தும்போது அல்லது அயல்நாடுகளைப் பயமுறுத்தும்போது அதற்குரிய விலையைக் கொடுத்தேயாகவேண்டும்" என பில் கிளின்டன் அறிவித்ததனைத் தொடர்ந்து இரண்டாவது ஏவுகணைத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இரண்டு நோக்கங்களை ஈடேற்றுவதற்காகப் பொது மக்கள் வாழும் பகுதிகளைத் தவிர்த்து இவ் ஏவுகணைகள் ஏவப்பட்டிருந்தன. முதலாவது, அமெரிக்காவின் இராணுவ வன்மையைச் சதாம் உசேனுக்கு உணர்த்துவது.

இரண்டாவது, ஈராக்கின் வான்பலத்தை இயலுமானவரை நலிவடையச்செய்வது. ஈராக்கினைத் தண்டிப்பதற்காகவும் பலமிழக்கச்செய்வதற்காகவும் இவ்விரு ஏவுகணைத்தாக்குதல்களுடன் அமெரிக்கா வேறு இரு நடவடிக்கைகளையும் எடுத்தது. முதலாவதாக, 36–32 அகலக் கோடுகளுக்கிடையே உள்ள தற்போதைய வான் பறப்பற்ற பகுதியை மேலும் ஒரு அகலக்கோட்டால் கூட்டியது. இதன்படி இனிமேல் 36–33 அகலக்கோட்டுப் பகுதிக்குள் ஈராக்கின் விமானங்கள் பறக்க முடியாதென்றும் இது அயல்நாடுகள் மீது ஈராக் படையெடுப்பதற்கான சக்தியை வெகு விரைவாகக் குறைத்துவிடும் என்றும் அமெரிக்கா நியாயப்படுத்துகின்றது.

வட ஈராக்கின் மீது ஈராக் படையெடுத்தாலும், சவூதி அரேபியா, குவைத், யோர்தான் போன்ற அண்டைநாடுகள் மீது, உசேனின் கவனம் திரும்புமா என்பதே அமெரிக்காவின் கவலையாக இருந்தது. இதனால்தான் தென்பகுதியில் வான்பறப்பற்ற ஒரு பகுதியை ஒரு அகலக்கோட்டால் அதிகரிப்பதன் மூலம் அப்பகுதியில் உள்ள இரண்டு ஈராக்கிய விமானத் தளங்களையும் ஒரு இராணுவ பயிற்சி நிலையத்தினையும் செயலிழக்கச் செய்யலாம் என அமெரிக்கா கணக்குப்போட்டது.

இரண்டாவதாக, ஈராக் தனது மக்களுக்கு உணவு மற்றும் மருந்து வளங்களை வாங்குவதற்காக வரையறுக்கப்பட்ட எண்ணெய் வளங்களை விற்பனை செய்யலாம் என அண்மையில் ஐ.நா சபையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அமெரிக்கா காலவரையறையின்றி ஒத்திவைக்கச் செய்துள்ளது.

இத்தீர்மானத்தின்படி, ஒவ்வொறு 6 மாத காலத்திலும் 2பில்லியன் அமெரிக்க டாலர் பெறுமதியான எண்ணெயை விற்பதற்கு ஈராக்குக்கு அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. இதேவேளை, இவ் எவுகணைத்தாக்குதல்கள் பற்றிக் கருத்துத் தெரிவித்த கனடாவின் பிரதமர் ஜீன் கிரச்சியன், பாரிய அளவிலான மனித அழிவுகள் ஏற்படுவதனைத் தவிர்ப்பதற்கான இத்தகைய (தடுப்பு) நடவடிக்கைகள் அவசியமாகின்றன என நியாயப்படுத்தியுள்ளார்.

பிரித்தானியா, யப்பான், மற்றும் ஜேர்மனிய நாட்டுத் தலைவர்களும் அமெரிக்காவின் செயற்பாட்டுக்கு அதரவு தெரிவித்துள்ளனர். எனினும் நேட்டோவின் அங்கத்துவ நாடுகள் மாறுபட்ட கருத்துக்களை உடையனவாக உள்ளன.

"இந் நடவடிக்கை பற்றித் தனக்கு ஏலவே தெரிவிக்கப்பட்டது" என்று மட்டுமே பிரான்சு தெரிவித்தது. அதேவேளை, "இச் செயலை வாஷிங்டன் பிற்போட்டிருக்கலாம்" என ஸ்பெயின் அறிவித்தது.

"தற்போது அமெரிக்காவில் தேர்தல் பிரச்சாரம் சூடு பிடிக்கத்தொடங்கியுள்ளதால் பில் கிளின்டனின் நிலைப்பாட்டைத் தம்மால் புரிந்துகொள்ள முடிகின்றது" என பிரான்சிய வெளிநாட்மைச்சின் அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.



நேட்டோவின் அங்கத்தவரும், ஈராக்கின் அயலவருமான துருக்கி "தான் இராசதந்திர ரீதியாக இத்தாக்குதல் நிகழாதவாறு தடுக்கப் பெரிதும் முயன்றதாகவும் அது பலனளிக்கவில்லை" என்றும் தெரிவித்தது.

இதேவேளை, வாஷிங்டனின் ஏவுகணைத்தாக்குதல் நடவடிக்கை அளவுக்கு மீறியது ஏற்றுக்கொள்ள முடியாதது' என ரஷ்யத்தூதுவர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

மேலும், அரபு நாடுகளும் அமெரிக்காவின் செயலை வன்மையாகக் கண்டித்துள்ளன. மத்திய கிழக்குப் பிரதேசத்தின் ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்காகவே, தான் தாக்குதல் நடத்தியதாக அமெரிக்கா கூறியதற்கு மாறாக, இத்தாக்குதல் நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளதாக அவை தெரிவித்துள்ளன.

இரு ஏவுகணைத்தாக்குதல்கள் மற்றும் ஏனைய தடைகள் மூலம் சதாம் உசேனைத் தண்டித்துவிட்டோம் அல்லது தோற்கடித்துவிட்டோம் என அமெரிக்கா மமதையில் இருக்கும் இவ்வேளையில், மேற்குலகத்துடனான மோதலில் சதாம் உசேன் அரசியல் ரீதியாக வெற்றியாளராக உயர்ந்துள்ளார் என அரபுலக நாடுகளிடையே கருத்து நிலவுகின்றது.

குர்திஷ் பிரதேசங்கள் மீது சதாம் உசேன் தாக்குதல்களை மேற்கொண்டபோது, அதற்குப் பதிலடி இருக்கும் என்பதை அவர் எதிர்பார்த்திருப்பார்.

எனினும் அமெரிக்க ஆளுமையின்கீழ் இருந்த வட ஈராக்கின் இக் குர்திஷ் பிரதேசங்கள் மீது மீளவும் தனது நாட்டின் இறைமையை ஸ்திரப்படுத்திக்கொண்டமை, அவருக்குக்கிடைத்த பெரும் வெற்றி என பல அவதானிகள் கருதுகின்றனர்.

**இரு பெரும் குர்திஷ் பிரிவினரிடையே பிரித்தாளும் தந்திரத்தைப் பாவித்து உசேன், அவர்களின் பலத்தை வலுவிழக்கச் செய்துள்ளார். இதன்மூலம் சுதந்திர குர்திஷ்தானுக்கான கோரிக்கையையும் பிசுபிசுக்கச் செய்துள்ளார். இதனால் குர்திஷ் சுதந்திரப்போராட்டத்தில் பின்னடைவு ஏற்பட்டதே ஒழிய, சதாம் உசேனுக்குத் தோல்வி என்பது ஏற்படவில்லை.**

மேலும், இப் பகுதியின் இரு பெரும் குர்திஷ் பிரிவினரிடையே பிரித்தாளும் தந்திரத்தைப் பாவித்து உசேன், அவர்களின் பலத்தை வலுவிழக்கச்செய்துள்ளார். இதன்மூலம் சுதந்திர குர்திஷ்தானுக்கான கோரிக்கையையும் பிசுபிசுக்கச் செய்துள்ளார். இதனால் குர்திஷ் சுதந்திரப்போராட்டத்தில் பின்னடைவு ஏற்பட்டதே ஒழிய, சதாம் உசேனுக்குத் தோல்வி என்பது ஏற்படவில்லை.



Charles Crowell/Reuters

An F-18 Hornet leaving the carrier Carl Vinson, which is helping to enforce the "no fly" zone over Iraq.

இப்பகுதியின் சுமார் 3.5 மில்லியன் குர்திஷ் மக்கள் கடந்த 20வருடங்களாக சதாம் உசேனின் ஆட்சிக்கெதிராகப் போராடி வருகின்றனர். 1992ல் ஐ.நா கூட்டமைப்பால் இவர்களுக்கு ஒரு பாதகாப்புப் பிரதேசம்" அமைக்கப்பட்டதில் இருந்து 'குர்திஷ்தான் தேசப்பற்றுச் சங்கமும், குர்திஷ்தான் சனநாயகக் கட்சியும்" (KDP) பிணக்குப்பட்டுக்கொண்டன. PUK தரப்பினர் KDP யினரை ஆர்பில் என்னும் பிரதேசத்தலைநகரில் இருந்து

தொடர்ச்சி 15ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# தமிழர் தேச நிர்மாண நிதி 96

## அதிஸ்டலாபச் சீட்டு

புத்தம் புதிய கார்

**HYUNDAI ACCENT**

பெறுமதி
Kr 125,900



சீட்டிழுப்பு 22 - 11 - 96 அன்று ஒஸ்லோ பொலிஸ் நிலையத்தில் இடம்பெறும்.
வெற்றி பெற்ற சீட்டின் விபரம் 24 - 11 - 96 அன்று ஒஸ்லோவில் நடைபெறும்
மாவீரர் நாள் நிகழ்வின் போது அறியத் தரப்படும்.

சிறியோர் பெரியோர் வரையிலான ஒவ்வொரு குடும்ப
உறுப்பினரும் குறைந்தது ஒரு அதிஸ்டலாபச்சீட்டினை வாங்கி
எமது தேச நிர்மாணத்தில் பங்காளிகளாகுவோம்

**சீட்டின் விலை**
**Kr 100**

நோர்வேயில் வாழும் நாம் ஒவ்வொருவரும் தமிழர் தேச நிர்மாண
நிதிக்கு பங்களிப்பு செய்வதென உறுதி கொள்வோம் !

தொடர்புகளிற்கு: தமிழர் ஒருங்கிணைப்புக்குழு
தொலைபேசி இலக்கமாகிய 22 35 09 80 உடன் அல்லது
உங்கள் பகுதிப் பொறுப்பாளர்களுடன்
தொடர்பு கொள்ளவும்.


## தாயகம் நோக்கிய ...

உறுப்பினர்களுள் செவ்கில்போஆ ஒரு திறமையான போர்வீரனாவான். அகதிகளுக்கு இராணுவப் பயிற்சியளிக்கும் பொறுப்பை டேவிட்; செவ்கில்போஆவுக்குக் கொடுத்திருந்தான். இரவில் பிள்ளைகளின் விளையாட்டு மைதானத்தைப் பாவித்து, மிகுந்த ஊக்கத்தோடும், கிடைக்கக்கூடிய பொருள்களை வைத்து வடிவமைக்கப்பட்ட ஆயுதங்களோடும், தனது கவனிப்பில் விடப்பட்ட பயிற்சியாளர்களுக்கு, உண்மையான ஆயுதங்கள் இல்லாமல் எந்தளவு இராணுவப் பயிற்சி கொடுக்கமுடியுமோ, அந்தளவு பயிற்சிகொடுத்தான். தும்புத்தடியின் கைப்பிடிகள் துப்பாக்கிகள் ஆயின. கற்கள் எறிகுண்டாயின (Grenades). கட்டில் கம்பிச்சுருள்கள் (Bed Springs) பயனட் (Bayonets) ஆகின. விசேடமாக மன உற்சாகமற்றிருந்த அகதிகள் மனதிலே ஒரு புதிய உத்வேகத்தை ஊட்டியிருந்தான்.

நேரம் நன்றாகப் பிந்திவிட்டது. மண்ட்றியா பதற்றமாக அங்கும் இங்கும் நடந்தபடி, "எனக்குத் தெரிந்ததெல்லாம் இன்றுமாலை ஒரு ரக்சியும், ஒரு சாரதியையும் அரிக்காக ஒழுங்கு செய்து கொடுத்தேன் என்பதுதான்." என்றான்.

"கவலைப்படாதீர்கள் மண்ட்றியா, மூன்று நாட்களுக்குக்கூட சிலவேளை அரி வராமலிருக்கலாம். அவன் விசித்திர வழிகளில் வேலைசெய்கிறான். அது எங்களுக்குப் பழக்கப்பட்டுவிட்டது" என்றான் டேவிட்.

நள்ளிரவும் தாண்டியது. நான்குபேரும் அங்கும் இங்கும் வசதியாகச் சரிந்துகொண்டனர். அரை மணிநேரத்தில் அவர்கள் தூங்கிவழிந்தார்கள். ஒரு மணி நேரத்தில் நன்றாகத் தூங்கிப் போய்விட்டார்கள்.

அதிகாலை ஐந்து மணியளவில் அரி பென் கானான் அந்த அறையில் நுழைந்தான்.

தீவைச்சுற்றி இரவுமுழுவதும் அலைந்து திரிந்த தூக்கக் கலக்கம் அவன் கண்களிலிருந்தது. சைப்பிரசில் வந்திறங்கியதிலிருந்து இடையே குட்டித்தூக்கங்கள் போடுவதைத்தவிர, நல்ல நித்திரை கொள்ளவில்லை. பால் மாக் பாணியில் செவ் கில்போஆவைக் கட்டியணைத்துவிட்டு, குறிப்பிட்ட நேரத்துக்கு எட்டுமணி நேரம் பிந்தி வந்ததையிட்டு எவ்வித காரணங்கள் கூறாமலும், மன்னிப்புக் கோராமலும் நேராக அப்போதைய வேலையிறங்கினான்.

மிஸ்டர் மண்ட்றியா நான் சொன்ன படகை வாங்கிவிட்டீர்களா?

மண்ட்றியா வியப்பினால் வாயைப்பிளந்தான். "மிஸ்டர் பென்கானான், நீங்கள் வந்திறங்கி என்னிடம் படகு கேட்டு இப்போ முப்பது மணித்தியாலங்களுக்குள்ளாகத்தான் இருக்கும். நான் கப்பல்கட்டுபவனில்லை. என்னுடைய ஸ்தானமான சைப்பிரஸ் – மெடிட்ரேனியன் கப்பல் கம்பனிக்கு, பாமாஸ்குரா, லார்நாகா, கைரேனியா, லிமாசோல், பாபொஸ் ஆகிய இங்குள்ள சகல துறைமுக நகரங்களிலும் காரியாலயங்கள்

> உண்மையான ஆயுதங்கள் இல்லாமல் எந்தளவு இராணுவப் பயிற்சி கொடுக்கமுடியுமோ, அந்தளவு பயிற்சிகொடுத்தான். தும்புத்தடியின் கைப்பிடிகள் துப்பாக்கிகள் ஆயின. கற்கள் எறிகுண்டாயின (புசநயெனநள). கட்டில் கம்பிச்சுருள்கள் (டீநன ளுிசைபெள) பயனட் (டீயலழநெவள) ஆகின. விசேடமாக மன உற்சாகமற்றிருந்த அகதிகள் மனதிலே ஒரு புதிய உத்வேகத்தை ஊட்டியிருந்தான்.

உண்டு. அவை எல்லாமே உங்களுக்காக ஒரு படகைத்தேடுகின்றன. படகு கிடைத்ததும் உங்களுக்கு அறிவிக்கப்படும்."

அரி, மண்ட்றியாவின் நக்கலான தொனியை அலட்சியம் செய்தவாறே மற்றவர்களுக்காகத் திரும்பி, "செவ் நாங்கள் என்ன செய்யப்போகிறோம் என்று டேவிட் சொல்லியிருப்பான் என நினைக்கிறேன்."

அந்தக் கலிலேயக் கமக்காரன் ஆமெனத் தலையை ஆட்டினான்.

"இந்தக் கணத்திலிருந்து நீங்கள் மூன்றுபேரும் எனக்காகப் பணியிலிறங்கப் போகிறீர்கள். கராலொலொஸ்சில் நீங்கள் செய்துவந்த வேலைகளைக் கவனிக்க வேறு ஆட்களை நியமித்துவிடுங்கள். பத்து வயதுக்கும், பதினேழுவயதிற்கும் இடைப்பட்ட எத்தனை சுயதேகியான பிள்ளைகள் அந்த வளாகத்தில் இருக்கிறார்கள்?"

"ம் ம்... கிட்டத்தட்ட அறுநூறு எழுநூறு பேர்வரையிலிருக்கிறார்கள்,"

"செவ் இவர்களில் பலமான முந்நூறு பேரைத்தெரிந்தெடுத்து, அவர்களை உச்சக்கட்டத் தேகப்பயிற்சிகொடுத்து ஆயத்தம் செய்."

செவ் தலையாட்டினான்.

அரி எழுந்துகொண்டான் "இன்னும் அரை மணிநேரத்தில் நன்றாக விடிந்துவிடும். மிஸ்டர் மண்ட்றியா வெளியே திரும்பவும் செல்வதற்கு எனக்கு ஒரு ரக்சி வேண்டும். நேற்று என்னோடுவந்த சாரதி சிறிது களைத்துப்போயிருப்பான் என்று நினைக்கிறேன்."

"நானே உங்களைக் கொண்டு செல்கிறேன்" என்றான் மண்ட்றியா.

"நல்லது, விடிந்ததும் நாம் புறப்படுவோம். இப்போ என்னை மன்னித்துக்கொள்ளுங்கள், என் அறையில் சில ஆவணங்களைப் பார்வையிடவேண்டும்."

அவன் வந்ததுபோலவே திடீரென போயும் விட்டான். எல்லோரும் ஓரே நேரத்தில் கதைக்கத் தொடங்கினர்.

'ஆகவே 300 பிள்ளைகள்தான் தப்பிச்செல்லப் போகிறார்கள்' என்றான் செவ்.

"நிச்சயமாக, அப்படித்தான் தோன்றுகிறது" என்ற மண்ட்றியா தொடர்ந்து சொன்னான்: "அவன் ஒரு விசித்திரமான மனிதன். புதுமைகளை எதிர்பார்க்கிறான்..... ஆனால் எதுவுமே கூறமாட்டான்."

"அப்படியல்ல. அவனுக்குப் புதுமைகளில் நம்பிக்கையில்லை, அதனாலேதான் அவ்வளவு கடுமையாக உழைக்கிறான். அரி, எமக்குச் சொல்வதைவிட மேலாக ஏதோ இத் திட்டத்திலிருக்கிறது. இந்த முந்நூறு பிள்ளைகளும் தப்பிச் செல்லும் முயற்சி அவன் மனதிலுள்ள திட்டத்தின் ஒரு பகுதிதான் என்று எனக்குத் தோன்றுகிறது" என்றான் ஜோஆப் புன்முறுவலுடன்.

"இவ்வளவு நீண்டகாலம் அரி பென் கானானோடு பழகிய எமக்கு, அவன் என்ன நினைக்கிறான் என்று ஊகிக்க முயல்வது முடியாத காரியம் என்று அறிந்திருக்கிறோம். இவ்வளவு காலம் அறிந்ததிலிருந்து அவன் தான் செய்யப்போகும் அலுவலில் திறமைசாலி என்பது எமக்குத் தெரியும். காலப்போக்கில் அரி பென் கானான் என்ன செய்ய நினைக்கிறான் என்பது தெரிய வரும்தானே" சிரித்துக்கொண்டே ஜோ ஆப் யார்க்கோணி சொன்னான்.

தொடரும்...




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# அந்தநாள் ஞாபகம்.........

சின்னவயதினில் சீனவெடிகொழுத்தி ......
துள்ளித்திரிந்து
மனம்
குதூகலம் கொண்ட நாட்கள் ......
இன்று
ஏன் இழி நிலையாயின .....?

நல்ல நாள் ; பெருநாள் யாவும்
நமைத் தேடி வரும்.
இரவு பகலாக
எழுகின்ற வெடி ஓசைகளில்
எங்கள்
மகிழ்ச்சிப்பிரவாகம்
கரைபுரண்டோடும் ......
மனம் துள்ளிக்குதிக்கும்
இதயம் இன்பப் பூரிப்பாகும் ......

இன்று
எங்களுக்கு
பொங்கலுமில்லை புதுவருசமுமில்லை
ஆனாலும் .....
வெடிச்சத்தங்கள்
எம்மண்ணில் குறையவும் இல்லை

வரலாற்று நிகழ்வில்
கோரமும் ; குருதியும்
கூடிமகிழ்கையில் ......
நான் மட்டும்
சிரித்திருப்பது எப்படி?
"ஆமி அடித்த" "ஆட்டிலறி செல்லில்"

அகால மரணமாகிப்போன
எனது
அம்மாவும் ; அப்பாவும்
சித்தங்கேணியில் வைத்து
"சினைப்பர்" தாக்குதலில்
தலை சிதறிப்போன
சின்னண்ணாவும் பெரியதங்கச்சியும் ......

சின்னவயதினில் சீனவெடிகொழுத்தி
துள்ளித்திரிந்தவயதை
துகிலுரிந்து விட்டு .....
இன்று
துப்பாக்கி ஏந்தியவனாய் ......
ஈழத்தின் எல்லையில்
இரவுக்காவலனாய் ......

ஊமை நிலவில்
உறங்கிக் கிடக்கும் எனது தேசம்.
கூடவே
உப்பளக்காற்றோடு
ஒருமித்து ஒலிக்கும்
வெடிச்சத்தம் .....
சீனவெடிகளாய் ......
மத்தாப்பு வாணங்களாய் ......
மீண்டும் ....... மீண்டும் ......
சின்ன வயதினையும் ......
சிரித்து மகிழ்ந்த நாட்களையும் .......
என்னை
ஒருகணம் சிந்திக்கத் தூண்டுகின்றன. ❒

அலெக்ஸ் பரந்தாமன்

## வைகறைக்கனவு

வையது துவக்கும்
காலது "பூட்சு"ம்
மேலது "காக்கி"யும்
நெஞ்சத்தில் இரத்த வெறியும் தாங்கி
எம் நிலம்மீது பகைவன் வந்தான்.

ஊரது புகுந்து
மூப்பீது இளசிது
பாராதுயிர்வதை செய்தான்.


பட்டன; பகைவன் பாதம் நம் மண் மீது
பட்டன பசுமைத் தளிர்கள் கூட
கெட்டன வாழ்வும் வளமும் ......
இட்டனர் ஆயிரம் அடிமைச்சட்டம்
இருமவும் "இவனது" அனுமதிவேண்டும்
...ின்; சுட்டனர் சடசடவென.....
...ரிதைக் கேட்டார்?

இனியும் சும்மா இருப்பது நலமோ
என்று முரசது ஒலி செவிபட
பொறுப்பது உணர்ந்து
நெஞ்சில் நெருப்பது மூள
எதிரிதலை அறுப்பதென
செருக்களம் சென்றேகினர் இளையோர்

திரண்டுவரும் படையணிகண்டு
மருண்டான் பகைவன்: வீடு, வளவு
தெருவெல்லாம் சண்டை மூண்டது
குருதி வழிந்தோடியது!

ஊறிய சமூக சாக்கடை கூட
ஓடிய நதியலடித்துச் சென்றது
நாறிய அடிமையோலை
மூட்டிய தீயில் வெந்தே போனது
சீரிய எங்கள் வாழ்வும் வளமும்
தீட்டிய இரத்தினமாய் மிளிர்ந்தன இங்கே காண். ❒

எஸ்.கே. வதனன்



நாதஸ்வர மங்கலமும்
இனியுமெம் ஊரில் இருக்கட்டும்.
பூதவராயர் கோயிற் பொங்கலும்,
நல்லூர் திருவிழாவும் நடக்கட்டும்.
மொட்டை மரமாகாது பூக்கட்டும் நம்மூர்
எவரெனிலும் எம் சோலை புகுந்து
வேரறுக்க முடியாதென்று
உரத்துச் சொல்லட்டும் ஒழுங்கைகள்.
காமமுற்றெங்கள் பூக்களைத் தொட்டால்
நாசம் வந்துறுமென நம்பு பகையே.
அசுரவாகன அணிவகுப்புடன்
ஒருகாலை வந்தெம் ஊர் புகுந்தாய்.
புத்திசாதுரியமாய் விட்டு விலகி
எட்டித்தொடும் தூரத்தில் இருக்கின்றோம்.
உடற்கூடு இங்கெனிலும்
உயிர்மூச்சு உங்கேதான் உலவுகிறது.
உள்ளேயிருக்கும் உறவுகளே!
நாங்கள் வரும்வரை நடுக்கமுறாது
தாய்மடியைத் தாங்குங்கள்.
பகை குதறக் குஞ்சுகள் வரும்
கைகளாற் பொத்திக் காப்பாற்றி
பசிக்குக் குறுமணி எறியுங்கள்.
கவனம்
வலைவிரித்திருப்பான் வேடன்
பவுத்திரமாய் கூடு திரும்ப
குஞ்சுகளுக்கு வழிசொல்லி விடுங்கள்.
எல்லாம் முடிந்ததென இடிந்து
எதிர்காலம் இருளென எண்ணாதீர்.
ஓரிரவு நாம் வருவோம் ஒளிகொண்டு.
இங்கே புதுக்கூடுகள் கட்டுகின்றோம்.
கூடெங்கும் ஆயிரமாயிரம் கருங்குளவிகள்.
எந்தப் பகையெனிலும் இவை கொட்டும்.
எல்லைவரை துரத்தித் திரும்பும்.
அக்கரைக்குப் போவதெனில்
ஆற்று நீர் வற்றும்வரை காத்திருக்க முடியாது.
நீந்திக் கடக்க நினைத்தோம்.
குதித்துவிட்டோம்.
தொல்லையும், துயரும் சிறுகாலம்
வருங்காலம் நமது. ❒

~புதுவை இரத்தினதுரை

# இலுப்பைமரம் பூத்து........
# இலவமரம் காய்த்து.......
# இலந்தைமரம் பழுத்து......

நாமிலையெனினும்
எம்மூர் எழிலிலங்கு மெனில்
அது போதும்.
இதமாகும் எம் மனசு.
வயல் வெளியடுத்த சிறுகாட்டில்
இலுப்பைமரம் பூத்து ........
இலவமரம் காய்த்து .........
இலந்தைமரம் பழுத்துளதென்றால்
...ன்று.
...யுருவி,
...ாண்டை,

நாகதாளியெல்லாம்
அப்படியே இருக்கணும் சாமி.
பற்றைக் காடெனிலும் அது எமது.
இன்னொருவன் எரித்தானெனில்
பொறுக்காதெம் நெஞ்சு.
காரையும், புல்லாந்தியும்
பழமாய் சிலிர்த்திருக்கட்டும்
வேற்றொருவன் வெட்டிச் சரித்தானெனும்
செய்திவந்து செவியேறில்
தாங்காதெம் உள்ளம்.
மணியொலியும்,

# "மக்கள் நலமுடன் வாழ எம் தலைவனின் ஆணையில் மலரப்போகும் தமிழீழம் வழிகாட்டும் என உறுதி கூறுகிறேன்."

- மேஜர். வண்ணன் அல்லது ரசியன்

24-05-95

தமிழீழம்

அன்பின் அம்மா அப்பா அண்ணா கண்ணன் அக்கா அறிவது நீங்கள் நலமுடன் வாழ எம் தலைவனின் ஆணையில் மலரப் போகும் தமிழீழம் வழி காட்டும் என உறுதி கூறுகிறேன்.

அம்மா மேற்படி விசயத்திற்கு நேரடியாகவே வருகின்றேன். அம்மா எங்களது போராட்டம் 30 - 35 வருடங்களாக நடந்து கொண்டு இருக்கிறது. இந்த போராட்டம் எதற்காக நடந்து கொண்டிருக்கிறது என்பது மிக முக்கியமாக தெரிந்து இருக்க வேண்டும். இந்த போராட்டமானது எமது மக்கள் சுதந்திரமாகவும், நின்மதியாகவும், கௌரவமாகவும் வாழவேண்டும் என்பதற்காகத்தான் நாங்கள் இன்று போராடிக்கொண்டிருக்கின்றோம். இந்தப் போராட்டத்திற்கு எமது தலைவர் வழி காட்டிக்கொண்டிருக்கிறார். இந்த வழிகாட்டலின் கீழ் நின்று தமிழீழம் மலரவேண்டும் என்று உறுதியோடு போராடி மடிபவர்கள்தான் இந்த மாவீரர்கள். இந்த மாவீரர்கள் வரிசையிலும் இந்த மக்களின் விடிவிற்காகவும் மடிவதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

அம்மா இந்த மடல் உங்களுக்கு கிடைத்ததும் நான் வீரச்சாவு அடைந்து இரண்டு அல்லது மூன்று நாட்கள் ஆகியிருக்கும் என நினைக்கின்றேன். இந்த மடலை வாசித்த பின்பு மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள் என நினைக்கின்றேன்.

அம்மா நீங்கள் எனக்கு செய்யவேண்டியது என்னவென்றால் எமது போராளிகளை ஊக்கப்படுத்தும் முகமாக செயற்படவேண்டும். எமது போராளிகளுக்கு உணவு கொடுக்கவும் உங்களுக்கு இல்லாவிட்டாலும் பரவாயில்லை போராளிகளை நன்கு உபசரிக்கவும். மற்றும் எமது குடும்பம் போராளி குடும்பம் என இயக்கத்திலிருந்து எதையும் எதிர்பார்க்கக்கூடாது. நீங்கள் சாப்பிடாவிட்டாலும் பரவாயில்லை போராளிகளை சாப்பிட வையுங்கள். அவர்கள் தான் தமிழீழம் பெற்றுத் தரப் போகிறார்கள். அம்மா ஒவ்வொரு தமிழ் மக்களும் தமிழீழத்திற்காண்டி எவ்வளவு கஸ்டம் படிகிறோமோ அவ்வளவு விரைவில் தமிழீழத்தை விரைவில் பெற்றுத் தருவார் எம் தலைவர். தலைவரை நம்புங்கள் நிச்சயம் வெற்றி கிட்டும் இது உறுதியாக கூறுகிறேன்.

அம்மா நான் எல்லோருக்கும் கடிதம் எழுத நேரம் இல்லை. ஆகையால் இதை எல்லோருக்கும் காட்டவும். எல்லோரும் நலமாக வாழவும்.

நன்றி.

வண்ணன் அல்லது ரசியன் ( இ.விஜிகரன்)

இல. 210312 , 31-10-1995 பி. ப. 12.02 மணி



04-04-1996 அன்று, ஆக்கிரமிக்கப்பட்ட யாழ் குடாநாட்டில் அளவெட்டிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருக்கெதிரான சமர் ஒன்றில் வீரச்சாவடைந்த மேஜர் வண்ணன் அல்லது ரசியன் ஆக்கிரமிப்புப் பகுதிக்குள் ஊடுருவிச் செல்ல முன் தனது பெற்றோருக்கும், போராளியான தனது அக்காவிற்கும் எழுதிய இறுதிக் கடிதம். (அக்காவிற்கான கடிதம் உள்ளே)

மேஜர். வண்ணன் அல்லது ரசியன்
இயற்பெயர்: ராஜரட்ணம் விஜிகரன்
சொந்தஇடம்: வல்லுவத்தை பண்ணாலை, தெல்லிப்பளை
வீரமரணமடைந்த சம்பவம்: யாழ். அளவெட்டி மோதல்
வீரமரணம்: 4 - 4 - 96 பிறந்ததிகதி: 23 - 7 - 75

24-05-95
தமிழீழம்.

அன்பின் அம்மா அப்பா அண்ணா கண்ணன் அக்கா அறிவது நீங்கள் நலமுடன் வாழ எம் தலைவனின் ஆணையில் மலரப் போகும் தமிழீழம் வழி காட்டும் என உறுதி கூறுகிறேன்.

அம்மா மேற்படி விசயத்திற்கு நேரடியாக வருகின்றேன் அம்மா எங்களது போராட்டம் 30-35 வருடங்களாக நடந்து கொண்டிருக்கிறது இந்த போராட்டம் எதற்காக நடந்து கொண்டிருக்கிறது...



www.tamilarangam.net